# தேசிய இயக்கங்களின் காலம்

வேலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய
# இயக்கங்களின்
# காலம்

வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தேசிய இயக்கங்களின் காலம் |
| ஆசிரியர் | : | வேலன் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு<br>திருவள்ளுவர் ஆண்டு<br>2048 வைகாசி |
| நூல் அளவு | : | 140mm X 220mm |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 112 பக்கங்கள் |
| வெளியீடு | : | புதிய குரல் வெளியீட்டகம் |
| உரிமை | : | ஆசிரியர் |
| விலை | : | 70/- (இந்திய ரூபாய்) |

புதிய குரல் வெளியீட்டகத்தின்
4ஆவது வெளியீடு

https://www.facebook.com/Tholar.Velan
http://velanவேலன்.blogspot.fr/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| சிறுகுறிப்பு | 4 |
| உள்ளே | 5 |
| போராட்டமும் சிந்தனை வடிவமும் | 8 |
| அணுகுமுறை பற்றி | 11 |
| தேசியத்திற்கு எதிரான கருத்தமைவு | 15 |
| கருத்துமுதல்வாதமான மையவாதம் | 20 |
| வடுச்சொற்கள்..... | 21 |
| அகமுரண்பாட்டை | 28 |
| தேசியத்திற்கு மாற்றாக மதத்தை நிறுத்துவது | 31 |
| தவறுகளில் இருந்து விடயத்தை கையாள்வது | 34 |
| கடத்தலும் தேசியமும் பொதுப்புத்தியும் | 38 |
| இடதுசாரியத்தின் புரிதல் பற்றி | 42 |
| நான்காம் அலகிம் | 54 |
| இடதுசாரிய வாய்பாட்டு - அகநிலைவாதம் | 57 |
| இரண்டைத்தேசிய திரிபு | 64 |
| தேசிய முதலாளிகள் | 75 |
| அதிகாரம் பற்றியதே | 81 |
| நமக்கான கோட்பாடு | 90 |
| மாற்றங்களை தீடீரென | 97 |
| மறுபங்கீடு பற்றிய | 99 |
| தேசிய - முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டத்தை.... | 107 |
| இறுதியாக | 109 |
| பொருள் விளக்கம் | 111 |
| உசாத்துணை | 112 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகுறிப்பு

அரசியல் கட்டுரை பல வருடங்களாக எழுதி வருகின்ற போதிலும் தேசிய இனங்களின் சமூக ஒழுங்கமைவின் வளர்ச்சியில் தேசியக்கட்டம் பற்றிய கொச்சையான புரிதலே இவ்வளவு காலம் இருந்துள்ளது. இன்று பழைய கட்டுரைகளை மீளவாசிக்கின்ற போது அடிப்படையில் முரண்பாடுகளை காணமுடிகின்றது. ஆனால் அவற்றை அறிவுத் தேடலின் வளர்ச்சிப் போக்கில் வந்தடைந்த கருத்தாகக் கொள்ள முடிகின்றது. மனிதவளர்ச்சிப் போக்கினை கேள்வி ஞானத்திலும், வெறும் வாய்ப்பாட்டுவாதத்தின் விளைவாக ஏற்பட்ட தவறாகும். சமூக வளர்ச்சிப் போக்கை இடையறாது சுயமாக கேள்விக்குட்படுத்தி கற்றுவந்த விளைவே இதுவாகும். இவற்றை வந்தடைய சமூக விஞ்ஞான ரீதியாக சிந்திப்பதன் ஊடாகவே சாத்தியமாகும்.

சோவியத் புரட்சியின் நூற்றாண்டுக் காலத்தில் இந்த படைப்பு வருகின்றது. இந்தப் படைப்பும் மனித குலத்தின் உயர்ச்சிக்காய் தம்மை அர்ப்பணித்தவர்களின் உழைப்புத் தான். மனித குலத்தின் உன்னதமான போராளிகளின் சிந்தனையினால் குவியப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புக்களை உள்வாங்கியதான் இதனை எழுத முடிந்தது. அறிவியல் திரட்சியை இங்கு உங்கள் முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிகு- இரண்டாம் பதிப்புக்காக மீளவும் எழுத்துப்பிழை, வசனப்பிழை திருத்தப்பட்டுள்ளது. வசனப்பிழை, எழுத்துப்பிழை இருப்பின் மன்னியுங்கள். ஆனால் இறுதியாக என்ற பகுதியில் முடிவாக வைத்த விடயங்களை வியாக்கியானம், வரலாற்று ரீதியாக விளக்கிடும் பொருட்டாகத் தான் உள்ளடக்கம் உள்ளது. சரிந்த எழுத்தில் கருத்து குழப்பத்தை திருத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

ஈழதேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். ஏகாதிபத்திய கட்டத்தில் தேசியப் போராட்டத்தை உழைக்கும் வர்க்கம் தான் முன்கொண்டு செல்லப்பட வேண்டும். ஆனால் அது அவ்வாறு நடைபெறவில்லை. இதே போல மலையக, முஸ்லீம் மக்களுக்கான வேலைத்திட்டம் தேசிய விடுதலை இயக்கத்திடம் இருக்க வேண்டும். ஈழத்தின் வீழ்ச்சியும் ஒடுக்குமுறையில் இருந்து வெளியேறுவதற்கு வெவ்வேறான புரிதல், அணுகுமுறைப் போக்குக்கள் சமூகத்தின் முன்வைக்கப்படுகின்றது. ஈழத்திற்கு எதிரான வியூகங்களை எதிர்க் கொள்வதற்கு சமூக அரசியல் பொருளாதார ஓட்டத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும். ஈழ தேசத்தின் போராட்டம் எவ்வாறு வீழ்ந்தது, வீழ்த்தப்பட்டது என்பது ஆராயப்பட வேண்டும். அதற்கு முன்னர் ஈழப் போராட்டம் என்றால் என்பதை அறிவதன் ஊடாகவே எதிர்க் கொள்ளமுடியும்.

ஒரு குறிப்பான விடயம் பற்றி எழுதுகின்ற போது அதுபற்றிய புரிதலை பெறுவதற்கு வரலாற்றுத் தரவுகள், ஆய்வுமுறை, அரசியல் இலக்கு என்பன அவசியமாகின்றது. இலங்கை நாட்டில் உள்ள தேசியப் பிரச்சனையை அறிவதற்கு குறிந்த நாட்டின் வரலாற்றுப் போக்கும். அந்த சமூக அமைப்பு கட்டப்பட்டிருக்கும் அரசியல் பொருளாதரா சிந்தனை வடிவம் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதற்கு அடுத்ததாக லூயி ர் மோர்கன் எழுதிய பண்டையக் கால சமூகம் பற்றிய ஆராய்ச்சி விளைவுகளின் மதிப்பை மார்க்ஸ் கவனத்தில் எடுத்துக் கொண்டார். மார்க்ஸ் கண்டுபிடித்த வரலாற்றுப் பொருள்முதல்வாத கருத்தோட்டத்திற்கு ஏற்றவாக இருந்துள்ளது. மார்க்ஸ் எழுதிய குறிப்புக்களை கொண்டு குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் தோழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெட்றிக் ஏங்கெல்சால் புத்தகம் தான் அது. மோர்கனின் உழைப்பின் பயனாக மனித குலத்தின் நாகரீகம் பற்றியும் வாழ்வியல் அறிவு முக்கியமானதாகும். இந்த பற்றிய நுண்ணியல் ஆய்வு மனித குலத்திற்கு வழிகாட்டியாக இருக்கின்றது. ஏங்கெல்ஸ் காட்டு மிராண்டிக் காலத்தில் இருந்து இனக்குழுமம் வாழ்வு என்பது தேசிய இன -மொழிக் குடும்பமாக தோற்றம் பெறுகின்ற சமூக வாழ்வை விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் ஆராய்ந்துள்ளார். மோர்கனின் களப்பணியின் காரணமாக சமூக ஒழுங்கமைவு பற்றி உயர்ந்த புரிதலைக் கொண்டு கால்மார்க்ஸ் தனது கோட்பாட்டை உறுதி செய்கின்றார்,

ருஸ்ய புரட்சிக்கான திட்டத்தில் தேசிய இனப்பிரச்சனை பற்றிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளை சுயநிர்ணயம் பற்றிய விவாதம் வருகின்ற போது சுயநிர்ணயம் என்பது தேசத்திற்கு என்று முடிவெடுக்கின்றார்கள். முதலில் தேசம் பற்றிய வரையறையை தோழர் ஸ்ராலின் முன்வைத்த போது சமூக ஜனநாயகக் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வரையறை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுயநிர்ணயம் பற்றிய கோட்பாட்டை தோழர் லெனினால் முன்வைக்கப்பட்டது. தோழர் லெனின் கோட்பாடு என்பது இயங்கியல் ரீதியானது. தேசங்களின் வளர்ச்சிப் போக்கில் இருந்தும் முதலாளித்துவம், சோசலிச இலட்சியம் என்ற வர்க்கப் போராட்டத்திற்கு வழிகாட்டியாக முன்வைக்கப்படுகின்றது.

சுயநிர்ணயம் பற்றிய புரிதல் எவ்வாறு பயன்படுத்தப்படுவது என்ற ஆய்வுத் தரவுகளாக (Thesis) தோழர் லெனின் முன்வைத்துள்ளார். இதில் தொழிற்புரட்சி பின்னரான ஜனநாயகக் கட்ட வளர்ச்சிகள், தொழிற்துறை வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளிலும் பின்னர் கொலனித்துவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள நாடுகளில் புதிய தேசிய இனங்களின், ஜனநாயக இயக்கங்களில் வளர்ச்சியில் ஏற்படுகின்றது. தேசிய இயக்கங்கள் முதலாளித்துவ ஜனநாயக வளர்ச்சிக்கு முக்கியமானதாக தேசிய இனப்பிரச்சனை தீர்வு முன்வைக்கப்படுகின்றது.

புரட்சிகர சிந்தாந்தம், புரட்சிகரக் கட்சி இன்றில் புரட்சியே இல்லை. இங்கு வழிகாட்டும் தத்துவம் ஈழ வீழ்ச்சியில் இருந்து வெளிவருவதற்கு நிச்சயமாக உதவும். அரசியல் கோட்பாட்டு முடிவிற்கு வரவேண்டுமானால் 1. நாட்டின் சரித்திரம் 2. ஏங்கெல்சின் பண்பாடு பற்றிய எழுத்தும் 3. தேசம் என்றால் என்ன வரையறுக்கும் தோழர் ஸ்ராலின் வரைவு 4. சுயநிர்ணயம் பற்றிய தோழர் லெனினின் கோட்பாட்டுப் புரிதல் இவற்றில் இருந்துதான் எமக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ள முடியும். இவைகள் அனைத்தையும் விளங்கிக் கொள்வதன் ஊடாகவே தேசிய இனம்பற்றியும், தேசம் பற்றிய நிலைப்பாடு எடுப்பதற்கு அவசியமாகும்.

இவற்றிற்கு அப்பால் இருக்கின்ற வாய்ப்பாட்டுவாதம் இயங்கியலை மறுப்பதாக இருக்கின்றது. இடதுசாரியம் பேசிய ஈழ விடுதலை இயக்கங்களுக்கு லெனினியக் கோட்பாட்டுப் புரிதல் இருந்ததா என்றால் ஐயம் தான் ஏற்படுகின்றது. தேசிய விடுதலை இயக்கங்களிடம் இருந்த சிந்தனைக் கோளாறு இருந்திருப்பதைத் தான் வரலாறு காட்டுகின்றது. இடதுசாரிகள் என தம்மை பிரகடனப்படுத்திக் கொள்வோர் புலியெதிர்ப்புவாதத்தின் பின்னால் அணிவகுப்பது என்பது ஒத்தோடி அரசியல் போக்கிற்கு அப்பால் சென்று தமிழ் தேசத்தின் இறைமையை மறுக்கும் நிலைக்கு சென்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டமும் சிந்தனை வடிவமும்

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அகிம்சை - பொறுமை என்பவற்றிக்கு கிடைத்த ஏகாபத்திய அடிவருடி மகாத்மா. இந்த போக்கை கொண்டு மென்போக்கு ( pasifism ) வாழ்வியல் போக்கு வளர்க்கப்பட்டு தனித்துவாத சிந்தனையும் கூடி அமைந்த சமூக உறவில் வந்த சிந்தனை வடிவம் என்பது மனிதர்களை ஆட்கொள்கின்றது. இன்றைய மேற்குச் சிந்தனை வடிவத்தை உள்வாங்காத போக்கு இருப்பது என்பது ஆச்சரியப்பட தேவை யில்லை. ஆக இங்கு தற்கொடை, போராட்டம் தேவையில்லாதது, வேலையில்லாதவர்களின் வேலையாக இருக்கின்றது எனவும், இது மேட்டுக்குடிவாத, தாராளவாதச் சிந்தனைப் போக்காகும்.

தாராளவாதம் என்பது அரசியல்- பொருளாதார- சிந்தனை வடிவம் அனைத்தையும் உட்படுத்தியது. கட்டற்ற சுதத்திரத்தினை முன்னிறுத்திய வடிவத்தின் மொத்த உருவமைப்பு. தாராளவாதம் என்பது சரியான சொற்பதமாக கொள்ளமுடிகின்றது. தாராளவாதம் என்பது கட்டற்ற சந்தையை திறப்பது, கட்டற்ற சுதந்திரம், அமைப்புருவாக்கத்தை எதிர்ப்பது, அராஜகவாதம் (anarchy) தனிமனிதவாதம், என்ற அனைத்தையும் உள்ளடக்கியதே கூட்டுக் கோர்வையே தாராளவாதம். தாராளவாதம் மேற்கின் ஏகாதிபத்திய பொருளாதாரத்திற்கான சமூக உறவாகும். அன்பு முகம் கொண்ட ஜனநாயகத்தினையும், கூட்டு உரிமையை விட தனிமனித சுதந்திரத்தை முன்னிறுத்துகின்றது., ஜனநாயகம், குழந்தைப் போராளி எதிர்ப்பு, என்று தன்னை பாதுகாத்துக் கொள்ளும் சிந்தனை வடிவத்தினை ஏற்றுமதி செய்கின்றது.

தாராளவாதத்திற்கு மாற்றானது கூட்டு வாழ்க்கை உறவாகும். கூட்டுறவு வாழ்க்கை உறவை சிதைப்பது என்பது கால்வின்- லூதரின் சிந்தனை ஊடாக மதத்தை அரசிடம் இருந்து பிரித்ததில் இருந்து தொடர்கின்றது. முதலாளித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்திற்கான சிந்தனை வடிவத்தை எதிர்த்து கத்தோலிக்க நிலப்பிரபுக்களுக்கு துணை போனது. ஆனால் கால்வின் - லூதர் சிந்தனை சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. முதலாளித்துவ ஜனநாயகத்தை வெற்றியடைந்த மேற்கின் சமூக பொருளாதார உற்பத்தில் இருந்து உருவான சிந்தனைப் போக்காகும்.

சிந்தனை தளம் பொருளாதார மாற்றத்தின் ஊடாக ஏற்படுவதாகும். ஈழத்தில் அகமுரண்பாட்டை இன்னிறுத்தும் போக்கு அகநிலைவாதிகளால் முன்வைக்கப்படுகின்றது. அக முரண்பாட்டை முதன்மைப்படுத்தும் சிந்தனை வடிவம் திட்டமிட்டு புகுத்தப் படுகின்றது. ஆக ஒரு கட்டத்தைத் தாண்டாது அடுத்த கட்டத்திற்கு இலங்கை அரசியல் மாற்றமடைய சாத்தியம் இல்லை. ஒரு நாட்டின் வியாபாகமான நிலையில் இருந்து குறிப்பான பிரச்சனை நோக்கிய அரசியல் மதிப்பீடாகும்.

பின்னவீனத்துவ சிந்தனைப் போக்கில் அமைந்த செயற்பாடுகளைக் கொண்ட அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அணுகுமுறைப் போக்கை இடதுசாரியமாக நமக்கு முன்னிறுத்தப்படுகின்றது. இந்தப் போக்கிற்கு எதிரான அரசியல் விவாதத்திற்கான வெற்றிடம் கொண்டே உள்ளது. கடந்த 30 வருட கால வரலாற்றுக் காலத்தில் மார்க்சிய அணுகுமுறை பற்றிய தேடல்கள் என்பது ஒப்பித்ததை கிளிப்பிள்ளைகள் போல ஒப்பிக்கப்பட்டதாகவே இருந்துள்ளது. மார்க்சிய லெனினிய அணுகுமுறையை வளர்த்துக் கொள்ளும் வகையாக சமூக ஆய்வுகள் நலமடிக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளது.

முழுமை - மொத்தத்துவ (Holistic perspective) கண்ணோட்டம் தவிர்த்து வெவ்வேறு மனிதர்கள் தமது வல்லமைக்குள்ளாக ஆய்வுமுறைகளை முன்வைத்து கொள்கின்ற வேளையில் இயங்கியல் ரீதியாக அணுகப்படாமல் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டுள்ளது. மார்க்சிய அணுகுமுறைக்கு அப்பால் தன்னார்வ அணுகுமுறை, சிந்தனை முறை முன்னிறுத்தப் பட்டுள்ளது. மறுபுறத்தே கலாசாலை மார்க்சிய அணுகுமுறை வடிவமும் முன்னிறுத்தப்பட்டு அதுவே புரட்சிகர மார்க்சியமாக முன்னிறுத்தப்பட்டும் வருகின்றது.

மார்க்சிய அணுகுமுறையை நிராகரித்துக் கொள்வதினால் தனிமனித புரிதல்களே மார்க்சியமாக முன்னிறுத்தப்படுகின்றது. தனிமனித புரிதல்களை முன்னிறுத்தி, தனிமனித மையப்போக்கு ஆழுமை செலுத்துவதன் ஊடாக தனிமனிதத்தை நிறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அமைப்பில் தொடர்ச்சியாக ஒப்புறவு கொண்ட சிந்தனைக் கூட்டை உடைக்கின்றது. இந்த சமூக அமைப்பு தனிமனிதர்களை தனித்தீவுகளாகக் கொண்ட சிந்தனை மையங்களை உருவாக்கிக் கொள்கின்றது. இதற்கு மாற்றாக சிந்தனையாளர்களிடம் ஒரே வடிவத்தில் அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரே அணுகுமுறை மார்க்சிய இயங்கியல் அணுகுமுறைப் பார்வையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணுகுமுறை பற்றி

தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்காக பொதுவுடமைக்கட்சி அறிக்கை, மூலதனம் எழுதப்பட்டது. மக்களுக்கு விளங்கவில்லை என இலகுபடுத்துவது என்பதன் பெயரால் குறுக்கிப் பிதட்டி எழுதும் போக்கு ஆபத்தானதாகும். அரசியல் மொழியில் அதன் உண்மையான தாற்பரியத்தை விளக்கும் சொற்கள் அவசியமானதாகும். நாம் கற்றவற்றை முழுமையான பார்வையில் கொடுத்திட வேண்டும். சிங்கள தேசத்தினாலும், சர்வதேச சதியாலும் வீழ்த்தப்பட்ட தேசத்தின் விடுதலை நோக்கிப் பயணிப்பது என்றால் சமூக விஞ்ஞானப் ரீதியான அறிவுத்தேடலின் ஊடாகவே சாத்தியமாகும். மார்க்சிய அணுகுமுறை உற்பத்தி, வர்க்கப் போராட்டம், விஞ்ஞானம் என்ற மூன்று அடிப்படைக் கூறுகளைக் கொண்டது.

அகநிலை சிந்தனை வடிவத்திற்கு மாற்றாக சமூக வளர்ச்சியை விளங்கிக் கொள்வது என்றால் இயங்கில் ரீதியாக சமூகப் பொருள் உற்பத்தி முறையில் இருந்தும், இந்த பிரபஞ்சத்தின் உருவாக்கம், சமூக முரண்பாடுகளில் இருந்தும் ஆராய்வதாகும். ஈழப் போராட்டத்தின் பாட்டாளி வர்க்கத் தலைமையற்றதும், செயல்தந்திரம், யுத்த தந்திரம், பிரச்சார முழக்கம், செயல் முழக்கம் இவற்றில் ஏற்பட்ட தவறுகளை புலியெதிர்ப்பு நிலையில் இருந்து ஆராய முடியாது. அவ்வாறு போராடிய அமைப்பின் தவறில் இருந்து இருந்து ஆராய்வது என்பது அகமனித (subjectivism) விருப்பிற்கு அப்பால் தெளிவான அரசியல் பாதையைக் காட்டிவிட முடியாது. அதற்கு மாற்றாக புறநிலை (objectivism) யாக பொருள் உற்பத்தி வடிவம், அதன் சிந்தனை வடிவம் என்பதில் இருந்து ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

அதாவது புறநிலையில் இருந்து நுண் ஆய்வையும் மேற்கொள்வதாகும். புறவயமான அம்சம் (objective aspect)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது தன்னிகழ்வான அம்சம் (Spontaneous aspect) மற்றது, அகவயமான அம்சம் (Subjective aspect) அதாவது உணர்வுபூர்வமான அம்சம் (Conscious aspect). புறவயமானதும் தன்னிகழ்வானதுமான அம்சம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் உணர்வுபூர்வமான நெறிமுறைப்படுத்தும் சித்தத்தைச் சார்ந்திராது சுயேச்சையாக நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளின் தொகுதி ஆகும். (ஸ்ராலின்)

இயக்கவியல் என்பது மிகமிக முழுமையான, ஆழமான, ஒரு தலைப் பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கும் போதனையாகும். நிரந்தரமாக வளர்ச்சியற்ற வண்ணமுள்ள பருப் பொருளை தமக்கு பிரதிபலித்துக் காட்டும் மனித அறிவின் சார்பு நிலையை வலியுறுத்தும் போதனை என லெனின் விளக்கின்றார்.

இயற்கை என்பதே வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் பருப்பொருள். சுயமாக இயங்கிக் கொண்டே இருக்கின்றது. இந்த இயற்கையை மனித அறிவில் பிரதிபலிக்கின்றது. இது பொருளாதார அமைப்பினைப் பொறுத்து பிரதிபலிக்கின்றது. மனிதர்கள் உருவாகுவதற்கு முன்னரே உயிரிணங்கள் தோண்றியிருக்கின்றன. இவைகள் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் பல்வேறு பரிமாணங்களையும் போராட்டத்தின் ஊடாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

அரசியல் பொருளாதாரத்தினை விளங்கிக் கொள்ள உற்பத்திச் சக்தியின், உற்பத்தி உறவிற்கு மேல்கட்டப்பட்ட பொருளாதார அமைப்பினை பற்றிய போதிய முன்னறிவு அவசியமானதாகும். பொருளாதார அமைப்புச் சார்ந்து உற்பத்தி முறை, வினியோகம், பரிவர்த்தனை போன்றவற்றை ஆராயும் முறையை வெளிப்படுத்துகின்றது.

பொருளாதார அமைப்புமுறை என்ற அத்திவாரத்தின் மீதுதான் அரசியல் மேல்கட்டுமானம் கட்டப்படுகின்றது. முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் மதிப்பு பற்றிய உழைப்புத் தத்துவத்தை வெளிக் கொண்டு வந்தார்கள். மார்க்ஸ் ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதில் செலவழிக் கப்பட்ட சமுதாய ரீதியான அவசியமான உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுதாக விளக்கினார் என்கின்றார் தோழர் லெனின். பொருட்களுக்கு இடையேயான பரிமாற்றம் மனிதர்கள் இடையிலான உறவு நிலவுவதை மார்க்ஸ் விளக்கினார். பணம் தனிப்பட்ட உற்பத்தியளவில் பொருளாதார வாழ்வை இறுகப்பிணைக்கின்றது. மூலதனம் இந்த பிணைப்பை வளர்ச்சி யுறுவதை குறிக்கின்றது. மனிதனின் உழைப்புச் சக்தியே ஒரு பரிமாற்றப் பண்டமாகி விடுவதை நிறுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி உற்பத்தி சாதனத்தைக் கொண்ட உரிமையாளனிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கின்றார்கள். அவர்கள் பெறும் கூலியைக் கொண்டு தமது வாழ்விற்கான செலவைப் பெறமுடிகின்றது. மறுபகுதியை ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு உபரிமதிப்பை உண்டாக்குகின்றனர். இந்த உபரிமதிப்புத் தான் இலாபத்துக்கு தோற்றுவாய் இதுதான் முதலாளியின் செல்வத்திற்கான தோற்றுவாய். உபரி பற்றி வெளிப்படுத்திய கோட்பாடு மார்க்சியத்தின் முக்கிய கண்டு பிடிப்பாகும். மார்க்சியம் ஒன்றே கூலி அடிமைமுறையை ஈவிரக்கமின்றி எதிர்க்கும் ஒரே தத்துவம் என்று லெனின் நிரூபித்தார்.

மார்க்சின் மூன்றாவது உள்ளடக்கக் கூறான வர்க்கப் போராட்டம் எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரமாகவும் உந்து சக்தியாகவும் விளங்குகின்றது. சமூக அமைப்பில் உள்ள முரண்பாடுகளை வர்க்கப் போராட்டத்தின் ஊடாகவே தீர்த்துக் கொள்ள முடியும். இதுவரையில் அனைத்துப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டத்தின் ஊடாக மனித சரித்திரம் கடந்து வந்துள்ளது. மனிதர்களின், இயற்கையின் வளர்ச்சி என்பது முரண்பட்டதாகவும், இரசாயன மாற்றத்திற்கு உற்பட்டதாகவும் இருந்திருக்கின்றது. பரிணாம வளர்ச்சி என்பது கூட ஒன்றையொன்று போராடி விழுங்கியே வந்திருக்கின்றது. வர்க்கங்களை உள்ளடக்கியதே சாதியச் சிந்தனையும், அதனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் பொருளாதார அமைப்புமாகும்.

உற்பத்தி உறவு - உற்பத்தி சக்தி பற்றிய புரிதல் இல்லாவிடின் அடக்குமுறையாளர்கள் போராட்டங்களை சிதைத்துக் கொண்டே இருப்பார்கள். நிலமானிய உற்பத்தி முறையில் இருந்து முதலாளித்துவக் கட்டத்திற்கு நுழைகின்ற போது பழைய உற்பத்தி முறை மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. உழைப்பாளிகள் உழைப்புச் சக்தியை தொழில் நிறுவனங்களுக்கு விற்கும் முறைக்குள் நுழைகின்றார்கள். இயற்கையுடன் பிணைக்கப் பட்டிருந்த மக்கள் நகரங்களுக்கும், தெருக்களுக்கும் வீசியெறியப் படுகின்றார்கள். சுயபொருளாதார முறையில் வாழ்ந்த மக்கள் எதிர்காலம் நிச்சயமற்ற மிகை உழைப்பு சக்தியைக் கொண்ட தொழிலாளிகளாக ஆக்கப்படுகின்றார்கள்.

பழைய சமூக ஒழுங்கமைவு பொருளாதார கட்டமைப்புக்கு ஏற்ப முன்னைய சமூக ஒழுங்கமைப்பில் இருந்து மாறுதலுக்கு உள்ளாகின்றது. முதலாளித்துவ காலகட்டத்திற்கான சமூக ஒழுங்கமைவு வளர்ச்சியடைந்து வருகின்ற போது ஏற்படுகின்ற முரண்பாடே தேசிய இயக்கங்களாகும். தேசிய இனம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அடையாளங்களுடன் தேசத்தைக் கொண்ட பண்பை வளர்த்துக் கொள்கிறது. இது உயர்ந்த ஜனநாயகத்தின் வளர்சிக் கட்டமாகும். தொழிற்துறை வளர்ச்சியும், பரிவர்த்தனையும் எல்லைகளைக் கடந்து வளர்ந்து தொடர் வளர்ச்சியாக உள்ளது. மூலதனத்தின் வளர்ச்சி ஏகபோகமாவும், மூலதனத் திரட்சியினால் முதலாளித்துவ ஏகாதிபத்திய பொருளாதாரமாக வளர்ந்திருக் கின்றது. மிகை உற்பத்தி கொண்ட ஏகாதிபத்திய உலக ஒழுங்கில் சந்தைக்காக நாடுகளையும், தேசங்களில் இருப்பையும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமாகும்.

உள்நாட்டில் பிரதான முரண்பாடு, அடிப்படை முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது. இதே போல ஏகாதிபத்திய சகாப்தத்தில் சர்வதேச அலகில் பிரதான, அடிப்படை முரண் பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றது. இதில் எந்தக் கட்டத்தை முதலில் கடப்பது என்பது பற்றிய அரசியல் தந்திரோபாயம் வகுக்க சமூக விஞ்ஞானப் போக்கை விளங்கிக் கொள்ளாது சாத்தியமில்லை. பிரதான முரண்பாட்டைக் கடக்காது எவரும் அடுத்த அடி எடுத்துவைக்க முடியாது. இதைக் கவனிக்காத பட்சத்தில் எத்தனையோ இசங்கள் மக்களிடம் புகுத்தி போராட்ட உணர்வை சிதைக்க முடியும். சமூகத் தேவையை மறுதலித்த எந்தக் கோட்பாடும் நிலைநிறுத்திவிட முடியாது. சமூக வளர்ச்சிப் போக்கின் நிகழ்வை முன்னிறுத்திச் செயற்பட வேண்டும். இன்று பிரதானமான நெருப்பாக தேசியஇனப்பிரச்சனையே நிகழ்ச்சி நிரலில் உள்ளது. இதனால் ஒரு நாட்டில் பிரதான முரண்பாடு, சர்வதேச நிலையில் அடிப்படை, பிரதான முரண்பாடு பற்றிய தெளிவு தேவை. தேசத்தில் உள்ள அகமுரண்பாடுகள் பற்றிய தெளிவும் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியத்திற்கு எதிரான கருத்தமைவு

ஏகாதிபத்தியம் என்பது சும்மா எழுதிவிட்டுப் போகும் வெறும் சொல் அல்ல. அதற்குப் பின்னால் உள்ள முழுமையான கட்டமைப்பையும் அரசியலையும் உள்வாங்குவது அவசிய மானதாகும். வரைவிலக்கணத்தில் பரீட்சையம் இல்லாத வர்கள் இந்தியாவை ஏகாதிபத்தியம் என்று எழுதுவார்கள். ஏகாதிபத்தியம் என்பது அது உலகலாவிய ஆக்கிரமிப்பு வடிவத்தை கொண்டு செல்லும் நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டது.

மேற்கு ஏகாதிபத்தியங்கள் ஒற்றைத் துருவ அரசியல் போக்கில் இஸ்லாமிய எதிர்ப்புவாதம் (islamophobia) முன்னெடுத்தது. லத்தீன் அமெரிக்க நாடான வெனிசுவேலா, பொலிவியா தொடக்கம் சமூக ஜனநாயகப் பொருளாதார நாடுகளையும், முதலாளித்துவ பொருளாதாரம் கொண்ட அரபு நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. தனது சந்தைக்காய அலைகின்றது. மதப்பிற் போக்கு வாதிகளிடம் இருந்தும், அரசவம்சத்திடம் இருந்தும் முதலாளித்துவ அரசியல் நிலையை வளர்த்ததில் அரபுநாடுகளில் பாத் கட்சிகளுக்கு முக்கிய இடம் உண்டு. இரட்டைத் துருவ அரசியலில் பாத் புரட்சி வரவேற்கப்பட்டது. ஒன்றைத் துருவ அரசியலில் அவற்றை அழிப்பது தான் நடைபெற்றது. ஆக்கிரமிப்பை எதிர்த்த சதாம் இல்லாதாக்கப்பட்டார். பின்னர் கடாபி. இங்கு இந்த நாடுகள் மற்றைய அரபு நாடுகளை விட முற்போக்கானதாகவும் எண்ணை வளங்கள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. ஏகாதிபத்தியங்கள் சுதந்திரமான சந்தையைக் வேண்டி நிற்கின்றது. மதவெறியர்களை அழிக்கின்றோம் என்ற போர்வையில் மத்திய கிழக்கில் பழமையான கலாச்சாரத்தைக் கொண்ட நாடுகளை சுடுகாடாக்கியிருக்கின்றது. பயங்கரவாதிகளை உருவாக்கியதும் அமெரிக்கா அழிக்கின்றோம் என அதுவே நாடுகளின் மீது குண்டு போடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கான போட்டியை மார்க்சிய லெனியவாதிகள் எப்பொதும் எதிர்த்துக் கொண்டு தான் வருகின்றார்கள். அவர்கள் மறுகொலனியம் - புதிய கொலனியம் - அரைக்கொலனியத்திற்கு எதிரான போராட்டம் என்று வரையறுத்துள்ளார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நடைபெறுவது மறுகொலனியாதிக்கப் போர்கள். இதில் முள்ளிவாய்க்காலும் அடங்கும். ஏகாதிபத்தியங்கள் தமது சந்தைக்கு இடையூறாக இருக்கும் சக்திகளை அழிப்பார்கள். ஆக மறுகாலனியாதிக்கப் போரில் வீழ்த்தப்பட்டது ஈழமும் தான்.

ஈழத்தின் மீது மறுகொலனியாதிக்க ஆக்கிரமிப்பு யுத்தத்தை, இனவழிப்பு நடத்தியவர்கள் மீது கனிவு கொண்டு கியூபாவையும் பங்காளியாக முன்னிறுத்தப்படுகின்றது. உலக மறுபங்கீட்டு யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்ட சக்திகள் பற்றிய போதிய புரிதலை பெறவேண்டும். தேசிய இனங்களை அடக்கிய இந்திய பிரதமரான இந்திராவிற்கு வாழை, தோரணம் கட்டிய சமூகம் தான் நமது சமூகம். ஈழ தேசப் போராட்டம் இந்திய விஸ்தரிப்புவாதிகளையும் நண்பர்களாக நம்பிய கொடிய வரலாறும் நம்முடையது.

உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின், ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்றவற்றில் எமது விடுதலைப் போராட்டம் என்ன நிலைப்பாடு எடுத்திருந்தது? எவ்வளவு தூரம் செயற்பாடுகள் இருந்தது. பலஸ்தீனத்திற்கு இருக்கும் வெகுசன ஆதரவுப் பலம் எதனால் என்பதும் எவ்வாறு சாத்தியமாயிற்று எனஆராயப்பட வேண்டும்.

எமது உலகலாவிய ஒப்புறவு (Solidarity) வேலைத்திட்டம் எந்த வகையில் இருந்தது. ஒற்றைத் துருவ அரசியல் காலத்தில் எவ்வாறு இருந்தது.? இது நாம் எமது போராட்டம் எவ்வாறு கட்டியமைக்கப்பட்டது? எவ்வாறு வீழ்ந்தோம்? எவ்வாறு வீழ்த்தப்பட்டோம் என்பதை சுயபரிசோதனை செய்யாது. மற்றவர்கள் பக்கமாக திருப்பிவிடுவதாகும். மறுகொலனி யாதிக்கத்தின் அரசியலின் ஒரு பகுதியாக வீழ்த்தப்பட்ட நிலையில் மீளவும் இதுபற்றிய தேடலில் ஈடுபடாது லொபியில் ஈடுபடும் அவலம் தொடர்கின்றது. மக்கள் திரள் போராட்டத்தை தவிர்த்து விட்டும் இராசந்திர அரசியல் என்று திசை திருப்பப் பட்டு வருகின்றது. ஒடுக்கப்படும் தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தை புரட்சிகரமாக சிந்திக்கவிடாது தடுக்கும் கருத்துருவாக்கிகள் பற்றி அதிக கவனம் எடுக்கப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்காலின் பின்னர் தமிழ் மக்களை இணைக்கிப் போங்கள், அரசியல் என்பது சாத்தியப் பாட்டுக்குரிய ஒரு கலையாகும். மாறாக சாத்தியம் இல்லாதவைகளுக்காக காலத்தை விரையம் செய்கின்ற அரசியறிவியலாளர்களை கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமானது அழிவைத்தான் சந்திக்கும் என அனுபவவாதம் முன்னிறுத்தப்படுகின்றது. தமிழ் தேசம் போராடியதால் இவ்வளவு அழிவைப் பெற்றது. இனியும் தேசம் என்று பேசி அழிவைக் குடுக்க முடியுமா என்பதேயாகும். முள்ளிவாய்க்காலின் வீழ்ச்சி என்பது பெரும் கருத்தியல் யுத்தத்தை ஈழ தேசம் எதிர்க் கொள்கின்றது. இது பல்வேறு திசைகளில் இருந்தும் பல்வேறு அறிவுத் தளத்தில் இருந்து வருகின்றது.

வீழ்ச்சியின் பின்னரான காலங்கள் வேலிக்குள் வாழ்ந்தவர்கள் அகதிகளாகவும், போராளிகளின் கட்டாய சிறை வாழ்வு, சிந்தனை கட்டாயம் படுத்தப்படுகின்றது, சிந்தனை மலடாக்கப்படுகின்றது, ஐயவாதம் முன்னிறுத்தப்படுகின்றது, போராட்டமே தவறென்று கட்டமைக்கப்படுகின்றது, சிந்திப்பது மனப் பிறழ்வு என (மனநோயாளர்களாக) முத்திரை குத்தப்படுகின்றனர். இவ்வாறான நிலைகளைக் கடந்தே. சமூகத்தினை அறிவியல் சமூகமாக உருவாக்கவோ, மாற்றத்திற்கு உள்ளாக்கவோ முடியும். ஏகாதிபத்தியங்கள், நாடுகளின் அரசுகள், கிளர்ச்சியாளர்கள் நீதிக்காக போராடுவது பயங்கரவாதம் (அரசிற்கு எதிரான கிளர்ச்சி) என்று பிரச்சாரம் செய்கின்றார்கள். ஏகாதிபத்தியங்கள் சந்தைக்காய் நாடுகள் மீது ஆயுதத்தால் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டு பலஸ்தீன சிறுவர்களின் கல்லைக் கூட பயங்கர ஆயுதமாக சித்தரிக் கின்றது. ஈழ ஆட்சியதிகாரத்திற்கான ஆயுதப் போராட்டம் ஒருமுறை தோற்றது என்பதற்காக ஆயுதப் போராட்டம் சாத்தியம் இல்லை என வலதுசாரி தொடக்கம் போலி இடதுசாரிகள் வரையில் பிரச்சாரம் செய்கின்றார்கள். ஆயுதப் போராட்டம் என்பது ஒரு போராட்ட வடிவம் அவ்வளவுதான். மக்கள் எவ்வகையான போராட்டத்தை தொடர வேண்டும் என்று எதிரியே தீர்மானிக்கின்றது. ஒடுக்கும் ஆட்சி முறையை மாற்றுவது என்பது தலைகீழாக பழைய நிறுவனக் கட்டமைப்பை மாற்றியமைப்பதும், பலாத்காரத்தின் ஊடாகத் தான் நடைபெற முடியும். அனைத்து கட்டமைப்பும் தீவிர மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டிய அவசியத்தை குறைத்து மதிப்பீடு செய்யப்படுகின்றது.

கடந்த கால நிகழ்வுகள் என்பது இயங்கியல் ரீதியாக அரசியல் பொருளாதார ரீதியாக ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். முதலாளித்துவ சகாப்பத்தில் நுழைகின்ற போது ஏற்படுகின்ற சமூக மாற்றம் என்ன என்பதை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். முதலாளித்துவ சகாப்பதத்தின் நுழைவு என்பது உற்பத்தி முறையும், சமூக உறவு முறையும் முழுமையாக மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து விட்டது என்பது பொருள் அல்ல. கடந்த காலத் தவற்றையே மீளவும் செய்கின்றார்கள்.

புரட்சிகர நிலைப்பாட்டை ஏற்காது கடந்த காலத்தில் இரண்டு புரட்சியை சிங்கள மக்கள் பலிகொடுத்துள்ளார்கள். தமிழர்கள் இனவாதத்தை முன்னிறுத்தி முள்ளிவாய்காலில் பறி கொடுத்துள்ளார்கள். எனவே இன- மத- குல சாதி - பிரதேச பேதமின்றி ஒன்று சேர்வோம், போராடுவோம் என்கின்றார்கள். இந்தக் கூற்றில் நியாயம் இருப்பது போல வெளிப்படும். ஆனால் அது வரலாற்றுப் போக்கில் எதுவும் அவ்வாறு நடந்துவிடவில்லை.

குறுந்தேசியப் போக்கு அமைப்பில் ஏற்படுகின்றதா? அல்லது சமூகம் முழுவதும் இருக்கின்றதா என்ற பிரச்சனையை சமூக விஞ்ஞான ரீதியாக மொத்தத்துவம்- முழுமையான (Holistic approach) அணுகுமுறை ஊடாக வந்தடைய வேண்டும். ஆனால் சிந்தனைக் குறுக்கல்வாதம், திரிபுவாதம், சாத்தியவாதம், நடைமுறைவாத, சீர்திருத்தல்வாத நோய்க்குள் ஆட்பட்ட நிலையில் எழும் சமூக ஆய்வும், கருத்துக்களும் மொத்தத்துவப் பார்வையை மறுக்கின்றது. இது ஈழப் போராட்டத்தை யாழ்சைவவேளாளமாக, யாழ்மையவாதமாக, தமிழ்இனவாதமாக குறுக்கி விடுகின்றனர்.

தமிழ் இனவாதம் என்பதன் பின்னால் உள்ள பின்னவீனத்துவ திரிபுவாத சிந்தனை மறுப்பது குறுந்தேசிய அரசியல் போக்கை ஏற்றுக் கொள்வதாகது. ஒரு அமைப்பின் குறுந்தேசிய அரசியல் போக்கும் சிங்கள பௌத்த பேரினவாத சமூகக் கட்டமைப்பின் சிந்தனை வடிவமும் ஒன்றல்ல. ஆனால் அவை இரண்டும் ஒன்றாக முன்னிறுத்தப்பட்டு அனைத்தும் இனவாதம்- என முன்னிறுத்தப்படுவது திரிபுவாதம்.

தமிழ் மக்களின் சிந்தனை என்பது வர்ணாசிரமத்தில் (ஆசியபாணி கொடுங்கோன்மை) வக்கிரமும் அரைநிலமானிய சிந்தனைக் கட்டமைப்பாகும். வர்ணாசிரம வக்கிர கட்டமைப்பு இன்று உற்பத்தியை தீர்மானிக்கும் நிலையில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. ஆனால் சிந்தனைத் தளத்தில் தொடர்வது என்பது தவிர்க்க முடியாது. அது புதிய உற்பத்தி முறை மாற்றத்திற்கு உள்ளாகும் வரையில் முழுமையாக அகன்றுவிடப் போவதில்லை. உற்பத்தி முறை மாற்றத்திற்கு உள்ளானாலும் அதன் எச்சங்கள் தொடரவே செய்யும். இது புதிய கலாச்சாரப் புரட்சி அவசியமானது.

தேசிய இனங்களிடையே நம்பிக்கையீனத்தை ஊட்டியதில் போலி இடதுசாரிகளுக்கு நிறையவே பங்குண்டு. பிலிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணவர்த்தனாவால் [Philip Gunawardena] மலையாளத் தொழிலாளர்களுக்கு எதிராக பெருந்தேசிய நிலைப்பாடு ஆரம்பமாகியது. சிங்கள பெருந்தேசியவாதக் கட்சியான ஜேவிபி மலையக மக்களை ஐந்தாம்படையென வரையறுத்தும், இந்திய விஸ்தரிப்புவாதத்தின் அங்கம் என்று பிரகடனப்படுத்தியது. இது கொல்வின் ஆர்.டி. சில்வாவைப் [Dr. Colvin R de Silva] யாப்பு வரைவு எனத் தொடர்ந்து. முள்ளிவாய்க்காலின் போதும் கூட போலி இடதுசாரிகளின் ஒத்துழைப்பு இருந்து வந்துள்ளது. இந்தப் போலி இடதுசாரிகளின் செயற்பாடுகள் இடதுசாரியம் மீதான ஐயத்தையும் தமிழ் மக்களிடையே தோற்றுவித்துள்ளது.

தேசிய இனத்தின் ஜனநாயகக் கட்டத்தை மறுப்பதனால் சுயாட்சியும் சுயநிர்ணயமும் ஒன்று என்று இன்றும் வாதிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது திரிபுவாதம் தான். இது தான் சிந்திக்கும் மனிதர்களைக் கூட இடதுசாரியத்தில் இருந்து அன்னியப்படுத்துகின்றது. சுயநிர்ணயம் பற்றிய பொது நிலைப்பாடுகளை வைத்துக் கொண்டு இலங்கையில் எந்தப் போராட்டத்தையும் வெற்றி கொள்ள முடியாது. குறிப்பான பிரச்சனையில் ஈழ தேசம் விடுதலை அடையாது சிங்கள பௌத்த பேரிவாதக் கட்டமைப்பில் அகில இலங்கை புரட்சியை நடத்திவிடவும் முடியாது. முதலாளித்துவம் வளராது சோசலிசம் இல்லை. அது சாத்தியம் இல்லை. ஒரு கட்டத்தினை கடக்காமல் மற்றைய கட்டத்தை கடந்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்து முதல்வாதமான மையவாதம்

முதலாளித்துவத்திற்கு முன்னைய சமூகச் சிந்தனை (இனக்குழும- நிலப்பிரபுத்துவ) வாழ்வின் வெளிப்பாடுகள் தொடர்ச்சியாக முதலாளித்துவ சமூகத்திலும் தொடர்கின்றது. இங்கு அந்த சிந்தனை வடிவம் (Subjective) அகவுணர்வு சார்ந்த போலியுணர்வுக்குரியதாக இருக்கின்றது.

சமூகத்தின் சிந்தனை வடிவங்கள் எவ்வாறு கட்டமைக்கப் படுகின்றது என்ற புரிதல் என்பது அவசியமானதாகும். நாம் சமூகத்தின் முன் புத்திஜீவிகளாக பிரகடனப்படுத்துகின்ற போது அடிப்படையில் சமூகவிஞ்ஞானப் பார்வையில் சமூகத்தினை விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

சமூக உறவு எங்கும் ஏற்றத் தாழ்வு, பாகுபாடு நிறைந்ததாகவே உள்ளது. இது குடும்ப உறவு என்னும் போது பிள்ளைகளுக்கிடையேயான உறவு, உறவுகளுக்கு இடையிலான உறவு, குடும்பங்களுக்கு இடையேயான உறவு, பிற மனிதர்கள், சமூகங்களிடையேயான உறவு என்பது மேற்கு நாடுகளைப் போல் பயிற்றப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக மரபைக் கொண்டதாக இல்லை. இவைகள் இந்தச் சமூக அமைப்பில் மேல் கட்டப்பட்ட குடும்ப, சமூகம் என்பது இருக்கின்றது. இது பொருளாதார அமைப்பு தீர்மானிப்பதாகும். நிலமானியச் சிந்தனைக்குரிய ஜனநாயக மறுப்பு மீள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இங்கு சிந்தனை வடிவம் என்பது தனிமனிதர்கள் தீர்மானித்துக் கொள்வதில்லை. அது வாழ்நிலையே அதனை தீர்மானிக்கின்றது. அதேபோல அகமுரண்பாடுகள் சமூகத்தினை தீர்மானிப்பதில்லை. மாறாக புறநிலை (objecitve) என்பது பொருளாதார உறவுடன் கூடித்தீர்மானிக்கின்றது. இது இன்றையப் பொழுதில் மக்கள் பெரும்திரளின் கூட்டு வடிவத்தில் இருந்து உருவாகின்றது. சிந்தனைமுறை இனக்குழுமத்தில் இருந்தும் அது கடந்து நிலமானிய சிந்தனையில் இருந்தும் மாறுபட்டு முதலாளித்துவ சிந்தனையில் நுழைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடுச்சொற்கள்.....

நாம் வாழ்கின்ற சமூகம் மற்றவர்களை தாழ்வாக கருதும் பொருட்டான கருதுகோள்களைக் கொண்டுள்ளது. இந்தக் கருத்து எப்பவும் ஒரு பிரிவினருக்கு பொருந்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதல்ல. இவைகள் ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்புச் சார்ந்து இருக்கின்றது. இவைகள் அறிவுபூர்வமாக இருக்க வேண்டும் என்பதல்ல.

வடுச் சொற்கள் கொண்டு அழைப்பது ஒன்றும் புதியவையல்ல. சிலவவற்றைப் பார்ப்போம்.

..கிணறு காவியதுபடலைகட்டி

..திண்ணையிலே தூங்கிடுவான் தின்ற கோப்பையிலே பேண்டுவிடுவான்

.. தொப்பி பிரட்டி

.. மஞ்சல் கயிற்றுக்கு கழுத்து அறுத்தவன்

.. பனம்கொட்டை சூப்பி

.. தோட்டக்காட்டான்

பிரதேசங்களை குறித்து நிற்கும் சொற்களும் இருக்கின்றன இவைகள் சில

-- யாழ்ப்பாணத்தான்

-- தீவான்

-- மட்டக்களப்பான்

-- வடக்கத்தையான்

இவ்வாறு ஊர்பெயர் சொல்லி அழைப்பது என வெவ்வேறு பரிணாமங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சொற்கள் மூலம் மற்றவர்களை தரம் தாழ்ந்த, நிந்தனை செய்ய, அடக்க பயன்படுத்தப்படுகின்றது. இவைகள் இன்றைக்கும் எமது சமுதாயத்தில் இருந்து கொண்டு வருபவை. ஆனால் இவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமானிய பொருளுற்பத்தியை தொடர்ந்த சிந்தனையில் இருந்து வெளியானவைகளாகும். இவைகள் சந்தர்ப்பவாதம் கொண்ட வசைமொழிகளாக இருக்கின்றன.

நிலமானிய எச்சங்கள் இந்தச் சமுதாயத்தை எவ்வாறு அடக்கியாள்வது என்பது பற்றிப் புடம் போட்ட சிந்தனை வடிவங்களாகும். ஆணவம், அகம்பாவம், ஆதிக்கத்திமிர், ஆண்டான் அடிமைச் சிந்தனையான இவர்கள் கீழானவர்கள் என்ற மனப் போக்கு இவைகளை உள்ளடக்கியதாகவே இருக்கின்றது. இவைகள் மூலமாக ஒரு சமூகத்தை மாத்திரம் அல்ல, உற்பத்திச் சாதனங்களை தமதாக்கிக் கொள்ளும் தந்திரங்களை கொண்டதாக இருந்திருக்கின்றன. (மூளை உழைப்பை கொண்டு சுரண்டும் வர்க்கமும் இதில் அடங்கும்) சமூகஉறவு, சடங்கு, ஐதீகம், தவிர்த்தல் (துடக்கு) சமூக வடுக்கள் (code and communication, ritual, myth, taboo -socially stigmatized) என்ற கூட்டு வெளிப்பாடாகும். இவைகள் உற்பத்தியை தீர்மானிக்கும் நிலை உடைக்கப் பட்டுள்ளது. முதலாளித்துவத்திற்கு முன்னையை சிந்தனை வடிவம் தொடர்வது இயல்பானதே.

நிலமானியச் சிந்தனை முறை என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு பிரத்தியேகமானது இல்லை. நாட்டில் எல்லைக்குள் இருக்கின்ற மக்கள் கூட்டத்திடம் ஏற்ற இறக்கமாக இருக்கின்றது. இவ்வாறான சிந்தனை என்பது நிறுவனமயப்படுத்தப்பட்டு உள்ளன. இவைகள் சாத்திரம், சம்பிரதாயம், சடங்குகள், வழமைகள் (தேசவழமை) போன்ற போர்வைக்குள் மறைந்திருக்கின்றன. இங்கு இனக்குழும- நிலமானிய சிந்தனை முறைகளின் எச்சங்கள் என்பது சமூகத்தின் தீங்கான பொதுவுண்மையாக அரசியலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. முன்னேறிக்கொண்டிருக்கின்ற சமூகம் பழைய உறவுகளை கடந்து காலத்துடன் முழுமையாக கணக்கு தீர்க்கப்பட வேண்டும். இவைகளும் சமூகத்தினை ஒடுக்கும் வடிவங்கள் என்பது அகத்தின் பகை முரண்பாடுகளாகும். இவைகளை எதிர்த்துப் போராட வேண்டியது புதிய சமூகத்தை படைக்க விரும்புபவர்கள் கடமையாக இருக்க வேண்டும்.

இனக்குழும- நிலமானிய முறைக்கு உட்பட்ட சமூகஉறவு, சடங்கு, ஐதீகம், தவிர்த்தல் (துடக்கு) சமூக வடுக்கள் (code and communication, ritual, myth, taboo -socially stigmatized) மனிதர்களை பிரிக்கின்றது, அடக்குகின்றது, வளர்ச்சியை தடுக்கின்றது. சமூகச் சிந்தனை என்பது ஆசியபாணி கொடுங்கோன்மையான வர்ணாசிரத்தின்மேல் கட்டப்பட்ட சிந்தனையாகவும் இருக்கின்றது. முதலாளித்துவ கட்டத்திற்கு தேசிய இயக்கங்கள் வளருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் பிற்போக்குத் தனங்களை உடைத்துக் கொண்டு முன்னேறுகின்றது.

உலக முழுவதிலும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத் துவத்தின் மீது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. இங்கு வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கை வெட்டரிவாள், வேல்கம்பு கொண்டு எதிர்க் கொண்ட வாழ்வியல் சிந்தனையான போட்டி பொறாமை, வஞ்சகம், பில்லி, சூனியம் என்று சுருக்கிக் கொள்ள முடியாது. சமூகத்தில் உள்ள வட்டார வழக்கை பொதுமைப்படுத்தி விடமுடியாது.

நாம் எம்மை புத்திஜீவிகள் என்கின்ற போது நவீன காலத்திற்குரிய சிந்தனை வளர்ச்சியை உள்வாங்கிக் கொள்ளப்பட வேண்டும். பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கேற்ப விடயங்களை விளங்கிக் கொள்ள புதிய சொற்கள், வரையறைகள் உருவாகிக் கொண்டே வருகின்றது. இவ்வாறே அரசியல் பொருளாதார மேதைகளாக பிரெட்றிக் ஏங்கெல்ஸ், கார்ல் மார்க்ஸ் ஆகியோர் படைத்த இயங்கியல் பொருளாதாரக் கண்டுபிடிப்பிலும் அறியமுடியும். "என்னுடைய மாற்றங்கள் ஒரேயொரு விவகாரம் பற்றியவை. மூலத்தின்படி தொழிலாளர் தமது **உழைப்புக்** கூலிக்காக முதலாளிகளிடம் விற்கின்றார். ஆனால் இங்குள்ள வாசகத்தின்படி அவர் தமது **உழைப்பு** சக்தியை விற்கின்றார்கள்" (ப.7மார்க்ஸ் கூலியுழைப்பும் மூலதனமும்.) இவ்வாறே வெவ்வேறான பொருளாதார உறவுகளுக்குகேற்ற சமூக உறவுகள் என்பது இருக்கின்றது. அவ்வகையான சமூக உறவுகளை வெளிப்படுத்தும் சொல்லாடல்கள், வரைவிலக்கணங்களை சமூக விஞ்ஞானத்தின் ஊடாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

யாழ்மையவாதம் கருதுகோள் (thesis) பிற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட வாதமாகும். யாழ்மையவாதம் என்பது சமூகப் புரிதலை கொண்டதாக இல்லை. பழைய உற்பத்தி உறவில் தொடர்ந்து வரும் சிந்தனை வடிவத்தை அப்படியே முன்வைத்து தேசத்தின் இறைமை பற்றிய எதிர்வாதத்தை முன்வைக்கப் படுகின்றது. இவை ஒடுக்குமுறைச் இயந்திரத்திற்கும் துணைபோகின்ற போக்கைக் காணமுடிகின்றது. இவ்வகைச் சிந்தனை தேசித்தின் எழுச்சிக் கட்டத்தை கொச்சைப்படுத்தும் கருத்துருவாக்கத்திற்கு துணைபோவதாகும். யாழ் மையவாதம் என்பது இன்றைக்கு சிங்கள பேரினவாதக் கருத்துருவாக்கியான நளின் டி சில்வா என்ற சொல்வது போல தேசியப் பிரச்சனை என்பது ஆங்கிலம் தெரிந்த தமிழர்களே காரணம் என்பது போல் சுருங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றது.

யாழ் இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பினை யாழ்மையவாதச் சிந்தனைக்குரியவர்களாக கொள்வதில்லை. இவர்கள் முதலாளித்துவப் பண்பை ஏற்றுக் கொண்ட புத்தி ஜீவிகளின் கருத்துக்கள் அன்றையப் பொழுதில் முற்போக்கானதே. காரணம் இலங்கையின் சுதந்திரம், தீண்டாமை எதிர்ப்பு என்ற கோரிக்கை வைத்தது மாத்திரம் இல்லை. தமிழர்கள் சிங்களமும், சிங்களவர்கள் தமிழும் கற்க வேண்டும் என்று ஐக்கியத்தை முன்வைத்ததே காரணம் எனலாம். இது அன்றைக்கு முற்போக்கானதாக இருக்கலாம். அதனை இன்று பொருத்திப் பார்ப்பது அதுவும் பெரும் ஒடுக்குமுறையைச் சந்தித்த பின்னர் இதை ஒப்பிப்பது பொருந்தாது. தமிழ் தேசத்தினை மறுத்த சிந்தனையாகும். யாழ் இளைஞர்களின் வர்க்கப் பின்னணி என்பது முக்கியமானதாகும். அன்று மதம்மாறி, பொருள் உற்பத்தியில் உபரியைப் பெற்று சொத்துக்களையும் வசதிகளையும் கொண்டவர்களாகவும், உயர் வர்க்கத்தவர்களாக இருந்த அதிகாரிகள் வாரிசுகளே உயர்கல்வியைக் கற்றவர்களாக இருந்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தின் கல்வி கற்ற உயர் வர்க்கம் உருவாகுவதற்கும், அதிகார வர்க்கம் உருவாகுவதற்கும் அடித்தளம் இதுவாகவே இருந்துள்ளது. இவர்களைக் கொண்டே மலையகத்தில், சிங்கப்பூர், மலேசியாவிலும் அதிகாரிகளாக கொலனித்துவ ஆட்சியாளர்கள் பயன்படுத்தினார்கள். இவர்களின் அதிகாரச் சிந்தனை என்பது அரைநிலமானியச் சிந்தனைதான். முதலாளித்துவம் முழுமை வளர்ச்சி பெறாத சமூக உறவும், சிந்தனையும் முன்னேறிய ஜனநாயகமாக இருக்க முடியாது.

இதே போல யாழ்ப்பாணத்தைக் கொண்ட கல்விச் சமூகத்திற்கான உட்கட்டுமானம் அங்கிருந்து தான் தொடங்குகின்றது. கொலனித்துவாதிகளால் பல பிரபல்யமான பெரும் கல்லூரிகள் யாழ் குடா நாடு எங்கும் உருவாகியது. முதல் பெண்கள் கல்லூரி உடுவிலிலும் (1820) வெவ்வேறு ஆண்கள் பாடசாலைகள் 1817களின் பின்னாராக உருவாகியிருந்தது.

பிரதேசங்களிடையே ஏற்றத் தாழ்வுகள் இருக்க முடியும். வரண்ட நிலத்தையும் பாடசாலைகளையும் அதிகமாகக் கொண்ட சமூகம் விரைவில் நகர்புறமாகியது. இது ஆட்சியின் தலைநகர்களாக இருந்து வந்துள்ளது. சமூகத்தின் வளர்ச்சியை நீண்ட காலங்களாக இருந்து வருவதாகும். குறிப்பிட்ட பிரதேசம் உருவாக்கும் சமூக உறுப்பினர்களின் வர்க்கத் தேவை என்பது மாறுபடும். இந்த வகையில் யாழ்ப்பாணம், குறிப்பிட்ட அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பிலும் முன்னேறிய குட்டிமுதலாளிய இளைஞர்கள் தோன்றினர். பிரதேசங்களின் வளர்ச்சி சமச்சீராக எங்கும் வளர்ந்திருக்க முடியாது. அவ்வாறு கருதுவது இயங்கியல் ரீதியானது இல்லை. ஆனால் யாழ் குடாநாட்டில் இருந்து எழுந்த இளைஞர்களைக் வைத்துக் கொண்டு அதனை ஈழக் கோரிக்கை யாழ்மையவாதமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் யாழ் இளைஞர் காங்கிரஸ் என்ற குட்டிமுதலாளி அமைப்பும் அதன் உற்பத்திதான்.

குறிப்பாக 1966களில் பின்னர் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்று இல்லாது பிற சாதியைச் சேர்ந்தவர்களும் கல்வி கற்க முடிந்தது. தனியே ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது மாற்றத்திற்கு உள்ளாகியது. இங்கு யாழ்மையவாதம் அரைநிலமானியம் என்பதற்கு அப்பால் விசேடமான சிந்தனை என்பது கற்பனையும் அது எதிரிக்கு துணைபோகும் கருத்தியல் எனலாம்.

சாதியப் பாகுபாடு, நிந்தனை பாகுபாடு சமூகத்தில் இல்லை என்று மறுப்பது என்பது ஒன்று பாகுபாடு ஏன் அவ்வாறு இருக்கின்றது, அதன் இயக்கப்பாடு எவ்வாறு இருக்கின்றது என்று ஆராய்வது வேறாகும். எனவே ஆண்டாண்டு காலமாக விளங்கப்படும் காரண காரியங்களுக்கு அப்பால் சமூக விஞ்ஞானப் பார்வையின் ஊடாக தெளிவுகளை முன்வைக்கப்பட வேண்டும். பழைய உற்பத்தி முறையில் தொடரும் சாதியம், பிரதேசவாதம், தீவிரமதவாதம் என்பன பழைய உற்பத்தி உறவை தொடர்ச்சியாக வைத்திருப்பதாக இருக்கின்றது. இங்கு பொருளாதார அமைப்பின் மீது கட்டப்பட்ட சிந்தனை வடிவம் தீர்மானிக்கும் விடயங்களை தேசிய விடுதலைக்கு எதிராக நிறுத்தப்படுவதாகும்.

அதாவது சாதியம், பிரதேசவாதம், தீவிர மதவாதம் என்பது மக்களை அடக்கியாள்கின்றது. இந்தச் சிந்தனையின் அணுகு முறையைக் பின்பற்றி ஒடுக்கும் வர்க்கம் இவற்றை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டு வந்திருக்கின்றன. இவற்றின் மூலமாக மக்களை தமது கொடூர பிடியில் தொடர்ந்தும் வைத்திருந்தன, வைத்திருக்க முனைகின்றன. இவ்வாறான சிந்தனை என்பது நிறுவனமயப்படுத்தப்பட்டு உள்ளன. இவைகள் சாத்திரம்-சம்பிரதாயம்- சடங்குகள் - வழமைகள் (தேசவழமை இதுவும் சிறிலங்கா சட்டத்திற்கு உட்பட்டதுதான்) போன்ற போர்வைக்குள் மறைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவுணர்வுப் சிந்தனையில் இருந்து நவீன அரசியல் போக்கில் கூட மரபணு பற்றிப் பேசி சுயதிருப்தி கொள்ளும் மார்ந்தர் வகையைப் பார்ப்போமானால். திருச்சித்தமிழனை யாழ்பாணத் தமிழன் நிந்தனை செய்தார்களாம் என்ற கூற்றை வைத்துக் கொண்டும் அல்லது தொடர்ந்தும் சாதியப் பாடுபாடும், ஒடுக்குமுறையை தீர்த்துக் கொண்டு தேசியம் பற்றி கோரிக்கை முன்வைக்கட்டாம். அதேபோல ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்றது போன்று புரட்சிகரமான சமூகமாக இல்லை என்றும் நிலைப்பாடுகள் வைக்கப்படுகின்றது.

பிரெச்சு தேசியம் என்பது நிலப்பிரபுத்துவத்தினை சமரசம் செய்யாது. நிலப்பிரபுத்துவக் கூறாக அரச வம்சத்தினை அழித்து முதலாளித்துவ கட்டத்தை அடைந்தது. ஆனால் பல ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவ ஜனநாயகத்துடன் சில சமரசங்களுடன் கொண்டு புரட்சிக் கட்டத்தை அடைந்து. சமரசத்துடன் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்பது நிறைவேற்றப்பட்டது. ஆனால் கீழத்தேய நாடுகளில் இனக்குழுமங்கள், தேசிய இனங்கள் தேசங்களாக தோன்றிக் கொண்டிருந்ததிற்கும் அல்லது தேசிய இயக்கங்கள் முழுமைபெறான நிலையில் இருக்கின்றது.

லூயி உடன் மன்னராட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு முதலாளித்துவக் கட்டத்தை அடைந்ததும் அதற்கு மாற்றாக அரசவம்சங்கள் (இன்று பல அய்ரோப்பிய நாடுகளில் அரச வம்சம் தொடர்கின்றது) சமரசம் கொண்டு முதலாளித்துவக் கட்டத்தை அடையவில்லை என்று கொள்ள முடியாது. பழைய உற்பத்தி முறைகள் தொடர்ச்சியாக தன்னைத் தகவமைத்துக் கொள்ளும். இது சாதிக்கும் பொருந்தும் முதலாளித்துவத்திற்கு முன்னைய ஒடுக்குமுறை எச்சங்கள் என்பது உற்பத்தி மாற்றம் அடையாத வரையில் மாற்றமடையப் போவதில்லை.

முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் என்பது தென்கிழக் காசியாவில் இயல்பாக வளர்ச்சி ஊடாக மாற்றத்தினை கொள்ள ஆரம்பிக்கவில்லை. முதலாளித்துவ உற்பத்தி முறை கொலனித்துவ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறை, முதலாளித்துவ சமூகஉறவு, சிந்தனை, ஜனநாயகம் முழுமையாக மாற்றத்திற்கு உள்ளாக்கப்படவில்லை.

சாதியத்திற்கான பொருளாதார உற்பத்தி தளம் என்பது தமிழர் தேசத்தில் சிதைக்கப்பட்டு விட்டது. சிந்தனைத் தளத்தில் இயங்குவது என்பது தவிர்க்க முடியாததே. காலச் சூழலைக் கவனத்தில் எடுப்பதில்லை. சொற்கள் மதிப்பீடுகள், அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைகளில் அரசியலும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் கருத்தியலும் உண்டு. ஆனாலும் சுகாதாரத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட சமூகத்தவர்களால் மேற்கொள்வது தொடர்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

அடையாள அரசியல் கருத்துமுதல்வாதத்திற்கும், அகமுரண்பாட்டிற்கும் முன்னிலை கொடுத்து புனித முலாம் பூசுவது தான் தலித்தியம், இரட்டைத் தேசியம் என்ற கருத்துருவாக்கம். அடக்குமுறையையும், அகமுரண்பாட்டையும் உருவாக்கிக் கொள்ளும் இனக்குழும- நிலமானிய முறைக்கு உட்பட்ட (taboo - social stigmatized வசைகள், வடுச் சொற்கள்,) மனிதர்களை பிரிக்கின்ற சிந்தனை என்பது புதிய பொருளாதார அமைப்பு முறையை மாற்றியமைக்கின்ற போதே படிப்படியாக இல்லாதாக்க முடியும். லெனின் வரையறுப்பது போன்று ஆசிய பாணி கொடுங்கோன்மை இருந்து தேசியக் கட்டத்தில் விடுதலையடைய முடிகின்றது.

மரபுரீதியாக கடத்திவரப்பட்ட வடுச் சொல்லாகவே யாழ்மையவாதம் வந்தடைந்துள்ளது. இவ்வாறான வரையறைகள் மார்க்சிய லெனினிய அரசியல் பொருளாதாரச் சிந்தனையை கொச்சைப்படுத்துவதாகும். வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கை விளங்கிக் கொள்ளாது தமிழ் தேசத்தின் போராட்டத்தை வேளாளியமாக கொள்கின்றது. அகமுரண்பாட்டையும், கருத்துமுதல்வாத சிந்தனை வடிவத்தையும் பயன்படுத்துவது யார் என்றால் பேரினவாதம், அடையாள அரசியல் செய்பவர்கள், போலி இனவாத இடதுசாரிகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகமுரண்பாட்டை

அகமுரண்பாட்டை பிரதான முரண்பாட்டிற்கு மேலானதாக வைப்பவர்கள் யார்? இதன் பொருள் முரண்பாடு இல்லை என்பது அல்ல அது கலாச்சாரப் புரட்சியின் அங்கம் சார்ந்தது. ஒரே நேரத்தில் கவனிக்கப்பட வேண்டியதே. இன்று தமிழர் ஒரு தேசம் என்பதையும் அதற்கு எதிரான நிலைப்பாடுகள் மாத்திரம் இல்லை. அவற்றை இனவாதமாக சுருக்கிவிடும் போக்கும் இருக்கின்றது. இந்த அடிப்படையில் தான் மேலே விவாதிக்கப்பட்டது.

லெனின் முன்வைக்கின்ற வர்க்க வளர்ச்சிப் போக்கில் தேசிய இயக்கம் எவ்வாறு தோன்றுகின்றது என்பதை விளங்கிக் கொள்ளாத பாரம்பரிய இடதுசாரிகள் போல பேரினவாத ஜேவிபி உள்ளதில் ஆச்சரிப்படத் தேவையில்லை.

தேசிய இனப் போராட்டங்கள் பாட்டாளி வர்க்கத்தைப் பிரிக்கின்றது என்று பேரினவாத, பாராம்பரிய இடதுசாரிகளிடையே உள்ள மனப்பாட்டுவாதமாகும். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்பது உயர்ந்த கட்டமாகும். இவைகள் மாக்சின் உயர்ந்த சமூகத்தின் வளர்ச்சிக் கட்டத்தை அடைந்த பின்னராக அமைய இருக்கின்ற சமூகத்தின் நிலையாக அங்கு வர்க்கங்கள் அற்ற சமூகம், அங்கு அரசு உதிர்ந்து போகும் என்ற உயர்ந்த ஜனநாயக வடிவத்தின் வெளிப்பாடுகள். அந்த நிலையை அடைய நாம் நீண்ட தூரம் கடக்க வேண்டியிருக்கின்றது.

தேசிய இனங்கள் தேசமாக முதலாளித்துவத்தில் உருவாகின்றது. முதலாளித்துவ- தேசியக் கட்டத்தை அடையாமல் அடுத்த சமூகக் கட்டத்தை கடந்துவிட முடியாது. எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப் படுவதில்லை. தேசிய இனப்பிரச்சனையை உயர்கல்வி, சமவாய்ப்பு என்ற சுருக்கிவிடும் அபர்த்தம். இவ்வாறான ஆய்வுகள் எல்லாம் வலதுசாரி அரசியல் பிதட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக உரிமையை மறுத்துரைக்கின்ற மனிதர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்து வருகின்ற போதும் கூட்டுச் சமூக உறவில் இருந்து தனித்துவவாத - சமூக விழுமியங்கள்- தனிமனித உரிமை என்று வளர்ந்து தான் உள்ளது. பழைய சிந்தனை முறை, வாழ்வுமுறை, உற்பத்தி முறை எதனையும் புதிய பொருளுற்பத்தி முறை அங்கீகரிப்பதில்லை. அதேவேளை பழையதை உள்வாங்கிக் கொள்ளும் ஆனால் அது பழைய முறையில் தொடர்வதை அங்கீகரிப்பதில்லை. இவ்வாறு தேசிய இனங்களின், தேசங்களின் உரிமை என்பதை விளக்கிக் கொள்ள வேண்டும். தேசம் - தேசிய உரிமை என்பதை துடக்காகப் பார்ப்பது மாத்திரம் அல்ல, அதனை வர்க்கப் போராட்டமே என்பதை மறுக்கும் அணுகுமுறை தொடர்கின்றது.

கொலனித்துவத்தின் பின்னர் புதிய சொத்துடமை வர்க்கங்கள் கிழக்கு மாகாணத்தில் புதிய சொத்துக்களை வாங்கிக் குவித்தது, சாதியை மையங்கொண்ட உற்பத்தி முறைக்குள் சிந்தித்துக் கொள்ளும் போக்கும் இருந்துள்ளது. மூலதனத்தின் அளவில் (சொத்து அளவில்) ஏற்றத் தாழ்வு அதிக வேறுபாடாக (இவைகள் ஆய்விற்கு உரியதாகும்.) இருக்க முடியும். இதன் எதிர்வினைகளை கவனத்தில் கொள்கின்ற போது, யாழ்மையவாதம் என்போர் கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் சிந்தனைக் கட்டமைப்பைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. குடாநாட்டிற்கு அப்பால் உள்ள மனிதர்களின் சிந்தனை என்பது அரைநில மானியத்திற்கு அப்பாற்பட்டதல்ல. அவைகள் எவ்விதத்திலும் பெரிய மாறுபாடு இருக்க முடியாது. வட்டாரத்திற்கு வட்டாரம் ஏற்றத் தாழ்வுகள், தனித்துவங்கள், வழக்குகள் என்பன மாற்றத்திற்கு உள்ளாகியே இருக்கும். ஏன் மொழியில் கூட மாறுபாடான வட்டார வழக்குகள் உள்ளது.

இலங்கையில் உள்ள கத்தோலிக்க, கிறிஸ்தவ மதப்பிரிவுகள் நிலமானியத்தின் மீது கட்டப்பட்டது தான். விவிலியத்தின் அடிப்படையே நிலமானிய தீவிரப் பிடிப்பைக் கொண்டதே. கத்தோலிக்கம், கிறிஸ்தவம் கொலனித்துவவாதிகளால் கொண்டு வரப்பட்டாலும் முழுமையான மேற்கத்தைய வாழ்வியல் முறைகளை மேட்டுக்குடி பின்பற்றியிருக்க முடியும். ஆனால் வெகுமக்கள் மேட்டுக்குடிவாழ்விற்கு இசைவானவர்களாக இருக்கவில்லை. ஏன் மேட்டுக்குடி கூட வேலைக்கும் கல்விக்கும் மத அடையாளத்தை பயன்படுத்திவிட்டு வீட்டுக்குள் வந்த பின்னர் பழைய மத அடையாளங்களை அணிந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் கத்தோலிக்கமும் அரைநிலமானியத்தின் மேல் கட்டப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். இது முதலாளித்துவ ஒழுங்குமுறையுடன் ஒன்றித்திருத்தது. ஆனால் மெதடிஸ்ட் சபை பழமைப் போக்கை பின்பற்றும் போக்கைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

இதே சிங்கள கத்தோலிக்கர்கள் சிங்கள பெருந் தேசியத்தின் மீது (நிலமானிய) கட்டப்படவில்லை என்று இடதுசாரிக் கோட்பாட்டாளர் உள்ளார். ஆனால் சிங்கள் பெருந்தேசியத்திற்கு அப்பால் கட்டப்பட்டதற்கு சான்றாக சிங்கள கத்தோலிக்க பேராயர் அரசில் பௌத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில் பிரச்சனை இல்லை சமரசம் செய்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்திற்கு மாற்றாக மதத்தை நிறுத்துவது

தமிழ் தேசத்தின் இறைமையை ஏற்று சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தலைமை தாக்கத் தயாராக இல்லாத நிலையில் பாரம்பரிய இடதுசாரிய அமைப்புக்கள் உள்ளன. தேசியக் கோரிக்கை அமைப்பு வடிவம் எடுத்துவிடக் கூடாது என்பதில் த.தே.கூ, சிறிலங்கா மற்றும் இந்திய ஒடுக்குமுறையாளர்கள் வியூகம் அமைத்துச் செயற்படுகின்றார்கள். இந்த இடவெளியில் சிவசேனா போன்ற மதவாதிகளுக்கு இடம் கிடைக்கின்றது. ஏனெனில் பௌத்த சின்னங்கள் முளைப்பும், சிங்கள மயமாக்கல், என தேசிய இனஅழிப்பை மேற்கொள்ளும் பெருந்தேசியத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடாது அது மதத்திற்குரிய போட்டியாக காட்டப்படுகின்றது. இது பௌத்தத் திற்கும் சைவத்திற்குமான போட்டி அரசியல் இல்லை. இதில் சிவசேன வருகையை வேளாளியமாக, தேசியமாக புனைவதும் நடைபெறுகின்றது. இடதுசாரியம் இடைவெளிகளைப் பயன்படுத்தி நிலைப்படுத்திக் கொள்ளத் தவறுகின்றது. பின்னர் இந்துத்துவ வாதிகளின் எழுச்சிக்கான காரணத்தை அகற்ற முற்படாது, தலைமை தாங்க முனையாது புலம்புவது அர்த்தமற்றது.

சிவசேனா இந்துத்துவ முகத்துடன் இந்திய ஆளும் வர்க்கத்தின் இரக்கப் பார்வையை நோக்கி நகர்கின்றது. ஆனால் முள்ளிவாய்க்காலின் இறுதிகட்ட காலத்தில் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் “இந்துக்கள்” இறக்கின்றார்கள் என்று கோசத்தினை முன்வைத்தார். ஆனாலும் இந்திய ஆட்சியாளர்கள் அல்லது இந்துத்துவா அமைப்புக்கள் முள்ளிவாய்க்கால் அழிவை தடுத்து நிறுத்தவில்லை. இந்திய மற்றும் தமிழக பெருங்கட்சிகள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் ஒரு அங்கமாகத் தான் செயற்படுகின்றது என்பதை அரசியல் ரீதியாக மதிப்பீடு செய்யாத வரையில் இவ்வகையான தவறுகள் இருந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தவர்களிடையே இந்துத்துவாவை உள்ளே புகுத்துவது இந்திய விஸ்தரிப்புவாதத்தின் ஒரு அங்கம் மாத்திரம் அல்ல. சமூக அமைப்பை கோவிலைக் கொண்டே அணிதிரட்டும் தந்திரத்தைக் கொண்டது. எனவே பிற்போக்கு வலைப் பின்னலுக்குள் கொண்டு வரும் அபாயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஈழ தேசத்தின் இறைமைக்கான போராட்டத்திற்கு தயாரில்லாதவர்கள்

மதப்பிரச்சனையாக வடிவம் கொடுப்பது

சாதியப் பிரச்சனை முதன்மையான வடிவமாக முன்னிறுத்துவது

பிரதேசவாதத்தை முன்னிறுத்துவது என

ஈழ தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டத்தை சிதைக்க இன்னும் எத்தனை அடையாளங்களுடன் புதிய பாதைகளை திறக்கப்போகின்றார்களோ?

சிவசேனா என்பது இந்துத்துவாவின் கிளை என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. போராடும் மக்கள் கூட்டத்தை பிளந்து உரிமைக்கான போராட்டத்தை திசைதிருப்பவும், ஈழ தேசத்தின் அரசியல் பிரச்சனையை மதத்தினுள் கொண்டு செல்வது ஆபத்தான போக்கேயாகும். அரசியல் போராட்டத்தை சிதைக்கும் பெரும் ஆணிதான். சிவசேனாவை முன்னிறுத்துவதற்கு முன்னர் மாட்டிறைச்சி விற்பதற்கு எதிர்ப்பு, சிறு தெய்வ வழிபாட்டுக் கூறுகளை எதிர்த்து வந்தனர். இவற்றின் ஊடாக இந்துத்துவா ஆடையை முழுமையாக அணிவிக்க முயற்சி எடுத்து வந்த செயற்பாட்டாளர்களை வைத்து இந்திய ஆளும் வர்க்கம் பின் இயக்குகின்றது.

மதத்தின் அடையாளத்தை முதன்மை கொடுக்கின்றார்கள். மதம் ஒரு அபினி அது வறியவர்களின் புகழிடம். இலங்கையில் இருக்கும் மக்கள் இறைக் கொள்கையிலும், சமய நம்பிக்கையிலும் பிடிப்புக் கொண்டவர்கள். எனவே அவர்களுடைய மதப்பிடிப்பும் ஆதிக்க வர்க்கத்தின் வலையில் விழ இலகுவாக இருக்கின்றது. அதாவது மதத்தின் ஊடாக சமூகத்தினை முன்னோக்கிச் செல்லவிடாது ஆளும் வர்க்கம் திசைதிருப்பும். மக்களின் சிந்தனை வடிவத்தை பழைய உற்பத்தி முறைக்குள் பயிற்றப்பட்ட சிந்தனை வடிவம் தொடர்வது காரணமாகும்.

சிங்கள தேசம் என்பது பேரினப் பெருமைக்குள் கட்டப்பட்டும், அதன் சிந்தனை வடிவம் என்பது ஆட்சியின் ஊடே பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் பௌத்த சிலைகள் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெங்கும் முளைப்பது பெருந் தேசியத்தின் ஆக்கிரமிப்பின் ஒரு அங்கம் அதேவேளை தமிழ் தேசங்களில் மற்றைய மத சின்னங்கள் முளைப்பது மதஅடிப்படைவாதம்- மத வெறி- பிற்போக்குச் சிந்தனை வெளிப்பாடு - பகுத்தறிவு அற்ற நிலை - இந்துத்துவ- இஸ்லாமிய வெறி- கிறிஸ்தவ - அல்லோலுயா வெறி இந்துத்துவா நிகழ்ச்சி நிரல் என்ற போக்கை கொண்டது.

மதவாதம் எம்சமூகத்தில் பிரதான முரண்பாடு கொண்டதல்ல. அதேவேளை மதச் சார்பற்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். மதத்தினை அரசியல் நிகழ்ச்சிக்குள் புகுத்த முடியாது. அதேவேளை பேரினவாதத்தையும் மதப்பிடிப்பில் உள்ள தீவிரத் தன்மையும் ஒன்றல்ல. அவைகள் ஆயுதவடிவம் எடுக்கின்ற போது அவையும் ஆபத்தானதே. இங்கு இந்துத்துவாவின் போக்கு சிங்கள பௌத்த பேரினவாத இருப்பிற்கு உதவும் என்பது மாத்திரம் அல்ல. இது இந்திய விஸ்தரிப்புவாதத்தின் அங்கமாக இருக்கின்றது. இந்திய விஸ்தரிப்பு வாதத்தினை ஆதரித்துக் கொண்டு ஈழப் போராட்டம் வெற்றி கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுகளில் இருந்து
## விடயத்தை கையாள்வது

யாழ் இடப்பெயர்வு
முஸ்லீம் மக்களின் சக இருப்பு தகர்ப்பு
மேற்கின் சிந்தனையை ஒப்புவிப்பவர்களுக்காக உகந்த நாட்கள்.
ஒத்தோடிகளே
உங்கள் தாராள சனநாயக கருத்துக்களை தெளிந்து விடுங்கள்.

நல்லது
புனிதவான்களே
உங்களை சுத்தீகரித்து
சனநாயகவாதிகளாக
பிரகடனப்படுத்தும் நாள் தவற விடாதீர்கள்

தேசிய இயக்க காலத்தை இனவாதமாக
தேசிய வெறியாக
வெள்ளாளியமாக
யாழ்பாணியமாக
குறுந்தேசியமாக
பதியத் தவறாதீர்கள்

அகமுரண்பாடு
சாதிய
மத
பிரதேச கசப்பை
பிரதானமானவை என்று பிரகடனப்படுத்தவும் தயங்காதீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் உங்களை புனிதவான்காக காட்ட உள்ள சந்தர்ப்பம்
தவறவிடாதீர்
சனநாயக வாதிகளே.
உங்கள் சனநாயக இதயத்துடிப்பு
உயிர்த்துடிப்பானது என்று நம்புவோமாக..................!!!!

முள்ளி வாய்க்கால் வீழ்ச்சிக்கு முன்னர் ஒத்தோடி அரசியல் செயற்பாட்டாளர்களால், புலியெதிர்ப்புவாதிகளால், முஸ்லீம் தரப்புகள் தமிழ் மக்களை குற்றவுணர்வுக்குள் வைத்துக் கொள்வதில் தீவிரம் காட்டியே வருகின்றார்கள். இனவழிப்பிற்கு ஆட்பட்டிருக்கும் ஒரு தேசத்தின் மீதான ஒடுக்குமுறை என்பது பெருந்தேசியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புலிகள் வடக்கில் இருந்து முஸ்லீம்களை வெளியேற்றிய ஒரு நிகழ்வைப் பற்றித் தான் எப்பொழுதும் ஒரு பக்கமாக பேசப்படுகின்றது. இதனை தவறு என்று 1990களில் கண்டித்த முற்பேக்கு சனநாயக சக்திகள் உள்ளார்கள். ஆனாலும் புலிகள் 2002 வன்னி பத்திரிகையாளர் மாநாட்டிலும் தவறென ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இதே வேளை 1995இல் யாழ்ப்பாணத்தை விட்டு தமிழ் மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்து இன்றுவரையிலும் ஆட்சியதிகாரத்தில் இருப்பது, பதவி பெறுவது என்று முஸ்லீம் தரகு அணியும், சிங்கள ஆளும் வர்க்கமும் செய்து முடித்திருக்க வேண்டிய வேலையை இன்றும் செய்யவில்லை. ஆனால் துரித கதியில் சிங்கள மக்களுக்கு நாவற்குழி குடியேற்றத்திற்காய் வீட்டுவசதி செய்து கொடுத்துள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

ஆனாலும் இன்று தமிழ் மக்களை தொடர்ந்தும் குற்றவுணர்வுக்குள் வைத்துக் கொள்ளும் அரசியல் போக்கும் முஸ்லீம் ஆளும் வர்க்கத்தின் அரசியல் போக்கும் கவனத்தில் கொள்ளப் பட வேண்டியிருக்கின்றது.

சமூக இருப்பு (social - co existence) மறுக்கப்படுவதும் இனவழிப்பும் ஒன்றல்ல. இனவழிப்பு என்பது மொழியை அழிப்பது, பண்பாட்டை அடையாளத்தை அழிப்பது, பொருளாதாரத்தை அழிப்பது என்று உயிர்களையும் சேர்த்து அழிப்பது. புலிகள் செய்த தவறு சமூக இருப்பை மறுத்தாகும். மீள்குடியேற்றத்தை நினைத்தால் ரணில்- மைத்திரி ஒரு கையெழுத்தில் செய்துவிட்டுப் போய்விடலாம். புத்த சிலைகள் முளைக்கின்றதே அது எவ்வாறு இது பற்றி பகுத்தறிவுடன் சிந்தியுங்கள். தமிழ் மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவுணர்வுக்குள் வைத்திருக்கும் வாய்ப்பாட்டு வாதம் அவசியமற்றதாகும். முஸ்லீம்களின் வெளியேற்றம் சிங்கள தேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களின் நிலையை ஒத்ததாக இருக்கின்றது. இவ்வாறு ஒரு மக்கள் கூட்டத்தை வெளியேற்றுவதற்கு நியாயம் கற்பிக்கவே முடியாத தவறாகும். முஸ்லீம்களின் வெளியேற்றம் என்பது ஈழப் போராட்டத்தில் கறைபடிந்த ஒரு அத்தியாயம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அனைத்து தமிழ் தேசிய இயக்கங்களால் முஸ்லீம்கள் கொல்லப்படும் போது அதனை எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளனர். ஆனால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் ஜிகாத், மற்றும் அரச கூலிப்படை, முஸ்லீம் அரசியல்வாதிகளால் தமிழ் மக்கள் அடக்கப்பட்டும், கொல்லப்படுவது பற்றி ஏன் பேச முடியவில்லை? கிழக்கில் ஏற்பட்ட தமிழ் மக்களின் உயிர்சேதம் பற்றிய தரவுகளை யாரும் முன்வைத்தார்களா? இருக்கின்றனவா? அல்லது முஸ்லீம்களால் தமிழ் மக்கள் தாக்குதலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்படவில்லையா? தமிழ் மக்கள் மீது கிழக்கு ஈழத்தில் நடைபெற்ற இனவழிப்புப் பற்றி எவரும் பேசுவதில்லை. கிழக்கு மாகாண அழிவுகள் பற்றியும் உரத்து பேசப்பட வேண்டும். 1985 இருந்து நடத்தப்பட்டவைகள் அனைத்தும் பக்கச் சார்பற்று வெளிப்படுத்தப்பட வேண்டும். இங்கு தனியே புலிகளில் தவறுகளில் இருந்து தமிழ் மக்களை குற்றவுணர்வுக்குள் உள்ளாக்குவது அல்ல. இதுவும் ஒரு ஒடுக்குமுறை வடிவம் தன். தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரம் அல்லது முஸ்லீம்களின் உரிமையை மறுத்து விடுவது அல்ல. ஒரு அமைப்பின் இராணுவ- அரசியல் தந்திரோபாய முடிவுகளில் ஏற்படுகின்ற தவறும் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான கோரிக்கை தவறாக கொள்ள முடியாது. எனவே விடுதலை அமைப்பான புலிகளை விமர்சிப்பது தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டத்தினை மழுங்கடிக்கும் நோக்கோடு ஒத்தோடிகளால் தொடுக்கப்படும் விமர்சனம் என்பது தமிழ் தேசத்தின் எழுச்சியை கொச்சைப்படுத்துவதாகும்.

ஈழ விடுதலைக்காக போராடிய அமைப்புக்களில் தவறுகளாக முஸ்லீம், சிங்கள பொதுமக்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது அமைப்பின் தவறேயாகும். அதனை வைத்துக் கொண்டு ஈழ தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டம் என்பது பிற்போக்குத் தேசியம் என்று கொள்வது தவறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதலாகும்.

1. தமிழ் தேசத்தின் இறைமைக்கான ஆற்றிய முற்போக்கு பாத்திரம்

2. மக்களுக்கும் விடுதலை அமைப்பிற்கும் இடையோன உறவு

3. விடுதலை அமைப்பிற்கும் மற்றைய தேசிய இனங்களுக்குமான உறவு

4. விடுதலை அமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கும் உறுப்பினர்களுக்குமான உறவு அவை தீர்மானித்த சிந்தனை வடிவம்

5. சர்வதேச அரசியல் அரசியல் போக்குப் பற்றி அரசியல் மதிப்பீடும் அதில் குறைபாடுகளும் என தவறுகளை வெவ்வேறு தளங்களில் ஆராயப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு இஸ்லாமிய மத அடையாளம் 1983க்கு முன்னரை விட மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இஸ்லாமிய அடையாளம் முன்னிறுத்தப்படுவதும் வெவ்வேறு தளத்தில் உள்ளது. இது நிலத்தில் இஸ்லாமிய அடையாள மாற்றம், உடையில் அடையாளம் மாற்றம் என தீவிரப் போக்கை கொண்டு வளர்ந்து வந்துள்ளது. இஸ்லாமிய மார்க்க வழி என்று தீவிர நிலமானிய சிந்தனை வடிவம் பின்பற்றும் போக்கு என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அரபுநாடுகளின் தன்னார்வத் தொண்டு உதவி, அரசுகளின் உதவி தொடர் சங்கிலியாக இஸ்லாமிய ஒப்புறவின் பின்னால் உள்ளது. இஸ்லாமிய மக்களின் அடையாளத்தின் பின்னால் உள்ள மதச் சிந்தனையை தவிர்த்து விட்டும் சென்று விட முடியாது. நாம் இந்துத்துவாவின் ஆபத்தைப் பற்றிப் பேசுகின்ற போது இதனையும் பேச வேண்டியிருக்கின்றது. நல்லெண்ணம் என்பது மதச்சார்பின்மைமையை அடிப்படையாகவும் குறைந்தபட்சம் முதலாளித்துவ ஜனநாயக நோக்கியதாக இருக்க வேண்டும். அதனை மறுத்துக் கொண்டு முன் சென்றுவிட முடியாது. இஸ்லாமிய மத அடிப்படைவாதம் என்பது வெவ்வேறு அளவுகோளைக் கொண்டதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தலும் தேசியமும் பொதுப்புத்தியும்

*வல்வெட்டித்துறையில் ஏன் ஆமி காம்ப்போடப்பட்டது?*
*ஆனையிறவில் ஏன் போடப்பட்டது*

நமது "தேசியம்" தாழ்த்தப்பட்ட மக்களை கோவிலுக்குள் விட மாடடேன் என்று மாவிட்டபுரத்தில் சண்டித்தனம் செய்து மண் கவ்விய அடங்காத தமிழன் சுந்தரம் முன்மொழிந்த பிற்போக்கானது இந்தக் கூற்று அடிப்படையில் பிற்போக்கு கூறு இருப்பதன் காரணமாக உயர்ந்த ஜனநாயக கட்டம் அவசியம் அற்றதாகாது.

கடல்தொழில் சமூகத்தவர்களுக்கு இயற்கையிலேயே வீரம் இருந்ததாக கட்டுரைகளை படித்திருக்க முடியும். வடமாராட்சி, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பகுதிகளில் ஆமை, தங்கம், பீடி இலை, துணிகள் போன்றவற்றை கடத்தியவர்கள் விரல்விட்டு எண்ணிக்கை கொண்டவர்களாகும். கடத்தல் காரர்களுக்கும் படையினருக்கும் ஏற்படுகின்ற முரண்பாடு சட்டவீரோத செயலுக்கும் அதனை மீறுவபவர்களுக்குமானது. தொழில் ரீதியான லும்பன்கள் எங்கும் உண்டு. அமெரிக்காவில் விபச்சாரத்தினால் பெற்ற பணத்தைக் கொண்டு பெரும் சுகாதார, கல்வி நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றது. இவ்வாறு சிங்கள முதலாளி வர்க்கம் சாராய உற்பத்தியினால் பெற்றதை மீளமுதலீட்டு பெரும் பணக்காரர்கள் ஆகியிருக்கின்றார்கள். கடல்கொள்ளை தொடக்கம் கொலனிய ஆட்சி சுரண்டல் என்பது செல்வத்தை அந்த நாடுகள் ஈட்டிக் கொண்டிருக்கின்றது. சமூகத்தில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களில் செயற்பாடுகளை முழுமையான சமூகத்தின் பொதுப்போக்காக கொள்ள முடியாது.

புனிதர்களைக் மட்டும் கொண்டு எந்தப் புரட்சியையும் செய்துவிட முடியாது. கடத்தலில் ஈடுபட்டவர்களாக கருதப்படு பவர்கள் விரல்விட்டுக் எண்ணக் கூடியவர்கள் தம்மை போராட்டத்துடன் இணைத்துக் கொண்டார்கள் என்பதற்காக ஈழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின் போராட்டம் என்பது கடத்தல்காரர்களின் நலன் என்பது தர்க்கத்தை வெல்வதற்காக பயன்படும்.

ஆயுதப் போராட்டத்தை தனியே கடத்தல் காரர்களின் நலன் சார்ந்ததாக போராட்டத்தை எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் வாதமாகும். த.ஈ. விடுதலை அமைப்புக்களை விமர்சிப்பது தமிழ் தேசத்தின் அரசதிகாரத்தின் உரிமையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கப்பட வேண்டும். விடுதலை அமைப்புகள் அனைத்தும் தமிழ் சமூகத்தின் உற்பத்தியின் வெளிப்பாடு என்பதால் அதற்கான காரணத்தை நமது சமூகத்தில் இருந்துதான் தேடவேண்டும். தமிழ் விடுதலை அமைப்புகளின் குறைபாடுகள் அனைத்தும் பிரத்தியோகமான அம்சமாக கொள்ளத் தேவையில்லை. அதேவேளை விடுதலை அமைப்பைப் பற்றிய விமர்சனம் என்பது புலியெதிர்ப்பைக் கொண்டதாக இருக்கின்றது. தமிழ் தேசத்தின் தனியாட்சிக்கான போராட்டத்தினை மழுங்கடிக்கும் நோக்கோடு ஒத்தோடிகளால் தொடுக்கப்படும் விமர்சனம் என்பது தமிழ் தேசத்தின் எழுச்சியை கொச்சைப்படுத்துவதாகும்.

இங்கு ஒரு தேசியயினம் தேசத்திற்குரிய பண்பை கொடுக்கின்றது. மற்றையது போராடும் சக்தி எந்த வர்க்கத்தில் தலைமையில் நடைபெறுகின்றது பற்றியதான இரண்டு வேறுபாடுகள் கவனிக்கப்பட வேண்டும். அரைநிலப்பிரபுத்துவத்தில் இருந்து முதலாளித்துவத்தினை நோக்கி வளர்வதும் முற்போக்கானது தான். அது சோசலிசத்தை நோக்கிய புரட்சிப் பாதையை துரிதப்படுத்தக் கூடியதாகும்.

போராடும் தலைமை, அவர்களின் வர்க்கநிலையை வைத்துக் கொண்டு போராட்டத்தையே தவறு என்று கூறுவது தவறு. ஈழத்தைப் பொறுத்த வரையில் குட்டிமுதலாளிய ஊசலாட்டப் பிரிவுகளை அழித்து விட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழ தாயகம் என்ற இலட்சியத்திற்காய் மற்றவர்களை அழித்து தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். அந்த அமைப்பின் சிந்தனை வடிவம் என்பது சமூக அமைப்பின் சிந்தனை வடிவத்தில் மேல் அமைந்து கொண்டது தான். இடதுசாரிகள் 1983 வரையில் ஐக்கிய இலங்கை என்ற கற்பனை தேசியத்தினுள் இருந்தார்கள். அந்த இடைவெளி வர்க்கப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க வெற்றிடத்தை இன்றுவரைக்கும் ஏற்படுத்தியிருக்கின்றது.

பலஸ்தீனத்தில் மதச் சார்பற்ற நிலையில் இருந்த போராட்டம் என்பது மதவாதச் சக்திகளின் ஆளுமைக்குள் உள்ளாக்கப்பட்டதற்கு அக- புற அரசியல் காரணங்களை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே எமது சமூகத்தில் இருந்து வெளிப்பட்ட சிந்தனை வடிவம் உயர்ந்த ஜனநாயக வடிவத்தை கொடுத்திருக்கவில்லை. முற்போக்கு தேசியமாக இல்லை என்பது சமூக அமைப்பை விளங்கிக் கொள்ளாதவன் விளைவு மாத்திரம் அல்ல, பாட்டாளி வர்க்கம் தலைமைபாத்திரம் ஏற்று நடக்காததும் ஒரு காரணமாகும். இங்கு முற்போக்குத் தேசியம், பிற்போக்குத் தேசியம், குறுந்தேசியவாதம் போன்ற சொல்லாடல்கள் அரசியல் தளத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய இனம் தேசமாகின்ற என்ற மூன்றாவது வகை தேசியக் கட்டமாகும். இது நிலமானியத்தினை சிதைப்பதன் ஊடாவே இடம்பெறுகின்றது. இந்த வகையில் அது முற்போக்கானது. மற்றையது முதலாளித்துவத்தை ஊக்கப்படுத்துவதும் ஆகும்.

ஒரு சமூகத்தில் உள்ள குட்டி முதலாளித்துவ அரசியல் போக்கைக் கூட கண்டு பயப்பிடுவது ஆளும் வர்க்கத்தை விட ஒத்தோடி அரசியல் போக்காகும். (திரிபுவாதம், சந்தர்ப்பவாதம், renegade- ஓடுகாலி என்று லெனின் வார்த்தையில் அழைக்கலாம்) அகமுரண்பாடுகளையும், அமைப்புக்களின் செயற்பாட்டுத் தவறுகளையும் முன்னிறுத்துபவர்கள். சமூக மாற்றத்தின், வர்க்கப்புரட்சியின், இன, மத, குலத்திற்கு அப்பால் சிந்திக்க வேண்டும் என்றும், தமிழர் என்பதற்கு அப்பால் மனிதர் என்று சிந்திக்கட்டாம். சமூக அமைப்புப் பற்றிய கொச்சைப் புரிதலின் வெளிபாடுகளாகும். இவை மாக்சியத்தினை அன்னியப்படுத்தும் வேலை செய்யப்படுகின்றது.

தமிழ் மிதவாதத்தின் குறும் தேசியவாதத்தின் வீரியம் கொண்ட இளைஞர் படையை தமது நாற்காலிக் கனவுகளை நிரந்தரமாக்க உசுப்பேத்தி தரப்படுத்தல் என்றும் தமிழாராட்சி மகாநாட்டுக் கொலை என்றும் தமிழனத் துரோகியென்றும் துரோகிகளை கொன்றவர்கள் மாவீரர்கள் என்றும் துரையப்பாவின் கொலையுடன் வீரியம் பெற்றதுதான் தமிழ் குறும் தேசியவாத்தின் பாதை. இங்கு ஒரு நாட்டு அரசிற்கும் தேசிய அரசிற்குமான வித்தியாசம் விளங்கிக் கொள்ளவில்லை. மற்றையது தமிழ் தரகு வர்க்கத்தின் குணாம்சத்தையும், நடத்தைகளையும் தமிழ் தேசியமாக புனைவது நடைபெறுகின்றது. இலங்கை நாட்டிற்கான அரசு அமைப்பு இருக்கின்றது. அதுவும் சிங்கள தேசத்தின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டதாக இருக்கின்றது.

முன்னர் வெட்டரிவாள், வேல்கம்பு கொண்டு அடிதடி பழிவாங்கல் என்பன தான் சமூக சிந்தனை வடிவமாக இருந்தது. அங்கு சட்டத்தின் ஆட்சி என்பது முழுமையாக வளரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்திற்கு புகைப்பிடிக்கும் சிறுவர்கள், துடினம் செய்யும் சிறுவர்களை தெருவால் போவோர் கண்டால் கண்டிப்பார்கள். அன்று கண்டித்த போது பிரம்பை பயன்படுத்துவது, அல்லது தலையில் குட்டுவது. இது ஆயுதங்கள் கிடைத்த போது மிகவும் கொடுமையான முறையில் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு கூறுவதன் ஊடாக எதனையும் புனிதப்படுத்துவது இல்லை. முன்னர் குறிப்பிட்டது போன்று மக்களுக்கும் விடுதலை அமைப்புக்கும் இடையோயான உறவு மிகவும் மோசமாக இருந்துள்ளது. உயர்ந்த ஜனநாயக வடிவம் சமூக உறவில் இல்லாத காரணத்தை அறிவது அவசியம்.

தேசிய இன இயக்கத்தின் போக்கும் தேசிய இன அரசுகளை நிறுவும் திசையிலானதாகும். அவ்வரசுகளின் கீழ் நவீன முதலாளித்துவத்தின் இந்தத் தேவைகள் மிகவும் நன்றாக பூர்த்தி செய்யப்படும். மிகவும் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த லட்சியத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன. எனவே, மேற்கு ஐரோப்பா முழுவதற்கும் ஏன் நாகரீக உலகம் முழுவதற்குமே முதலாளித்துவ காலப்பகுதியில் தேசிய இன அரசு மாதிரிப் படிவமானது சகஜமானது என்பதை மறுக்கும் போக்கு உள்ளது. ஆக போராட்டத் தலைமையைக் கொண்டு நிலமைகளை ஆராயமுடியாது. சமூக அமைப்பும் அதன் போக்கில் இருந்து ஆராயப்பட வேண்டும். இந்தத் தவறை புலியெதிர்ப்பாளர்கள், தலித்தியவாதிகள், சிங்கள போலி இடதுசாரிகள், இரட்டைத் தேசியம் என்போர் உள்ளார்கள். சிந்தனை வடிவம் உடனடியாக மாறுவதில்லை என்பதை மார்க்ஸ் விளக்கியுள்ளார். அதனை விளங்கிக் கொள்ளாத இடத்தில் சமூகபொருளாதார மொத்த சமூக உளவியல் பாங்கை விங்கிவிடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடதுசாரியத்தின் புரிதல் பற்றி

ஈழத்தில் பொருந்தக் கூடிய வகையில் சிந்திப்பது என்பது மார்க்சிய அணுகுமுறையை பயன்படுத்திக் கொண்டு ஆய்வை மேற்வதன் கொள்வதன் ஊடாகவே சாத்தியமானதாகும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளில் வரலாற்றில் தவறுகள் உள்ளது. 1983 வரையிலும் பாரம்பரிய பொதுவுடமைக் கட்சிகளிடையே தேசிய இனம்- தேசம் பற்றிய கருத்தில் தவறான போக்கு இருந்துள்ளதை அறிய முடிகின்றது. "தமிழ் முதலாளி தமிழீழம் கேட்கிறான்கூஷி கூஷிசாதியச் சமூகமாக இருக்க கூடிய, வர்க்க சமூகமாக பிளவுபட்டு இருக்கிற தமிழ் சமூகத்தில் என்னவிதமான வேலைத்திட்டம் இருக்கு என்ற கேள்வியை நாங்கள் எழுப்பி இருந்தம்" என்று இயங்கில் புரிதல் அற்ற பார்வை இருந்து வந்துள்ளது. இந்தச் சிந்தனை வடிவம் இடதுசாரியம் என்று தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டு இருப்பவர்களிடம் இன்றும் உள்ளது. இந்தச் சிந்தனை வடிவம் என்பது மார்க்சிய லெனினியத்தினை திரித்துக் கொண்டு எழும் சிந்தனை வடிவமாகும்.

இவ்வாறான திரிந்த சிந்தனை முன்வைக்கப்படுவதை அம்பலப்படுத்த வேண்டியது சமூக மாற்றத்தை விரும்புபவர்கள், நம்புபவர்கள், ஜனநாயக உரிமையை முன்னிறுத்திப் போராடும் சக்தியைக் கட்டியெழுப்ப முக்கியமானதாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தேசிய ஜனநாயக உரிமையையும், சமூக மாற்றத்திற்கான பயணத்தில் அவசியமானதாகும்.

தோழர் சண்முகதாசன் மீதான விமர்சனம் அமைப்பு ரீதியாக முன்வைக்கப்படுகின்றது.

1. இலங்கையின் தொழிலாளி வர்க்கப் புரட்சியில் தோட்டத் தொழிலாளரின் பங்கு.
2. தொழிற்சங்கங்களை அரசியல் மயப்படுத்தல்
3. பாராளுமன்னத் தேர்தல் தொடர்பான நிலைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆயுதமேந்திய புரட்சி பற்றிய நிலைப்பாடு.

5. மூன்றாமுலகக் கோட்பாடு பற்றிய நிலைப்பாடு

6. கலாச்சாரப் புரட்சியின் பற்றிய நிலைப்பாடு (ப.22 கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்)

மேற்கண்ட விமர்சனக் குறிப்புகள் என்பது சர்வதேச ஒழுங்கு பற்றிய அரசியல் மதிப்பீடு, மற்றையது உள்நாட்டில் அரசியல் போக்கு பற்றிய மதிப்பீடாகும். இந்த மதிப்பீடு முழுமையற்றதாக இருக்கின்றது. இதில் தோழர் சண்முகதாசன் பற்றிய விமர்சனம் என்பதற்குள் சுருக்கிவிடுகின்ற போது ஆராயப்படுகின்ற விடயம் திசை திருப்பப்படும் எனவே இங்கு தவிர்க்கப்படுகின்றது. இவற்றிற்கு அப்பால் பல்வேறு விடயங்களை ஆக்கம் முழுவதும் தொட்டுச் செல்கின்றது.

அதேவேளை 1949 இல் இருந்து 1991 வரையிலான வரலாற்று ஓட்டத்தை தோழர் சண்முகதாசன் (தலைவர் இலங்கை பொதுவுடமைக்கட்சி) சுயவிமர்சனம் செய்துள்ளார். அந்தப் புத்தகத்தில் தமிழ் மக்கள் சுயநிர்யணம் இருக்கின்றது என்பதும் பின்னரே சிங்கள தேசம் அதனை பயன்படுத்த வேண்டாம் என்று கேட்க முடியும் என்ற நிலைப்பாட்டினை முன்வைத்துள்ளார். அதேபோல தொழிற்சங்க வேலைக்குள் முடங்கிவிட்டதாகவும் சுயவிமர்சனம் செய்துள்ளார். குறிப்பாக இந்திய - ஈழப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தது மாத்திரம் அல்ல. இந்திய விஸ்தரிப்புவாதத்தினையும் எதிர்த்தார், தொழிற்சங்க வேலையில் அதிகம் மூழ்கியதாக குறிப்பிடுவதானது மிகவும் முக்கியமானதும் மொத்தத்துவம் கொண்ட விமர்சனமாகும். மூழு இடதுசாரியமே தொழிற்சங்கவாதத்தினுள் தான் மூழ்கியிருக்கின்றது.

ஆக தவறு ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ளும் தலைமைப் பண்பு எம்மை சிந்திக்க வைக்கின்றது. இதிலிருந்து எங்கு தவறு நடைபெற்றது என்பதை மதிப்பீடு செய்யும் கடமை நமக்கானது. இதன் பொருள் பொதுவுடமைவாதிகள் ஆற்றிய வரலாற்றுக்கடமையை கொச்சைப்படுத்துவதாகாது. அரசியல் போக்கில் இருந்தும் சமூக அமைப்பில் இருந்தும் செய்யப்படும் ஆய்வுப் போக்கு முதன்மையானதும் சரியானதும் ஆகும்.

அதேபோல சமூக ஓட்டத்தின் புரிதல்களும் வெவ்வேறு நிலைப்பாடுகளுக்கு வந்தடைய உந்துகின்றது. இங்கு போலிச் (பெயருக்கு) சுதந்திரத்தின் பின்னர் (தரகு ஆட்சி) சமாதான வழியிலும் பின்னர் இளைஞர்களால் ஆயுத வழியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தென்னிலங்கையை மையமாகக் கொண்ட பெருந்தேசியவாத போலி இடதுசாரிகளின் சாகவாத - இளைஞர்களால் சிதைந்தது. ஒடுக்கும் பெருந்தேசியத்தில் இருந்து உருவாகிய இந்தச் சக்திகள் ஒடுக்கப்படும் தேசத்தின் உரிமையை ஏற்றுக் கொள்ளாது ஐக்கியப்பட்ட போராட்டத்தினை ஆரம்பத்திலே சிதைந்தனர். இதேபோல தமிழ் தேசத்தின் போராட்டம் இனவாதமாகக்ஷ, பிரிவினைவாதமாக பிரகடனப்படுத்தி தேசிய இனங்களிடையே சந்தேகத்தினை ஏற்படுத்தினர். உண்மையில் ஜனநாயகப் புரட்சியை, ஒடுக்கப்படும் தேசத்தினதும், சிறுபான்மை மக்களின் ஐக்கியத்தினை முன்னிறுத்தி போராடியிருக்க வேண்டும். பெருந்தேசியத்தில் உள்ள முற்போக்குச் சக்திகளின் கடமை என்பது சொந்த இனத்தின் ஒடுக்குமுறை சக்திக்கு எதிராக போராடியிருக்க வேண்டும்.

இதே போல மலையக மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு அங்கமாக ஜேவிபியின் நிலைப்பாடு இருந்துள்ளது. இதே போல பூர்வீகத் தமிழர்களையும் இந்திய சார்பினராகவே மதிப்பிட்டிருந்தது. தேசிய ஒடுக்குமுறையின் உச்சத்தை மலையக மக்கள் இன்று எதிர்க் கொள்கின்றார்கள். இவர்களை தேசிய இன அடையாளத்தினைச் சிதைத்து கண்டித் தமிழர், இலங்கைத் தமிழர் என்ற "முற்போக்கு" வடிவம் கொடுக்கும் கயமை அரசியல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது உயர்ந்த வடிவமாக தோன்ற முடியும். ஆனால் மலையக மக்களின் ஜனநாயக வளர்ச்சிப் போக்கினை எதிர்த்து விடுகின்றது.

மலையக் பாட்டாளி வர்க்கத்தை வர்க்கப் போராட்டத் திற்கான முன்னணிப்படையாகவும் அவர்கள் தலைமையில் புரட்சியை முன்னெடுப்பது என்ற மதிப்பீடு முன்வைக்கப்பட்டது. இவர்கள் ஒடுக்கப்படும் வர்க்கம் என்பதற்கு அப்பால் ஒரு தேசிய இனம் என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவில்லை. இவர்களுக்கு தனியே வர்க்க ஒடுக்குமுறை என்பது மட்டும் இருந்துள்ளது என்ற மதிப்பீட்டு முடிவு தவறானதாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பெருந்தோட்டத்தில் பிணைக்கப்பட்ட கட்டாயத் தொழிலாளிகளாக இருக்க இன்னொரு பகுதியினர் வெவ்வேறு இடங்களில் பல்வேறு துறைகளிலும், வேலையற்ற அன்றாடம் காய்சிகளாக இருந்துள்ளன. சிங்கள பௌத்த பெருந்தேசியம் கண்டிப் பெருமையும் நிலவுரிமையையும் நிலைநிறுத்திக் கொள்ள குடியேற்றங்களையும், வாக்குரிமை பறிப்பு, நாடுகடத்தல் போன்ற செயற்பாடுகளை செய்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் மலையக மக்களுக்கான தனியாக வேலைத்திட்டம் இடதுசாரிகளிடமும், தமிழ் தேசிய இயக்கத்தினரிடமும் இருக்கவில்லை. மலையக மக்கள் மீதான சிங்கள பௌத்த தேசத்தின் அரசியல் ஓட்டம் என்பது திட்டமிட்டு செயற்பட்டு வந்திருக்கின்றது. இந்த நிலையை மதிப்பீடு செய்யாத குறை என்பது இருக்க வாக்குரிமை பறிப்பு என்பதை தமிழ் மக்கள் செய்த துரோகமாக காட்டுவதில் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். தரகு அணியின் தவறை இற்றைக்கு வரையிலும் தமிழ் மக்களின் துரோகமாக கட்டமைக்கப்படுகின்றது. "யாழ்மையவாதத்தின்" செயற்பாடாக சந்தர்ப்பவாதமாக ஈழத்திற்கு எதிராக எதிர்ப்பிரச் சாரம் செய்யப்படுகின்றது. இவ்வாறு தொடர்ச்சியாக செய்யப்படும் எதிர்ப்பிரச்சாரம் என்பது குறிப்பிட்ட மேட்டுக்குடியினரிடம் சென்றடைகின்றது.

இவைகளைக் கடந்தும் 1990 இருந்து இன்றைய காலத்தில் எடுத்துக் கொண்டால் ஈழத்தில் தமிழர்களிற்கு பொருத்தமான பிரயோக மார்க்சிய மெய்யியல் உருவாக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். தேசபக்தன் பத்திரிகை - நவசகாப்தம் போன்ற பத்திரிகையில் PROVA அமைப்பு ஈழப் போராட்டம் பற்றிய அரசியல் ஆய்வை வைத்திருந்தது. இந்த முயற்சி கூட தோல்விக்கு உள்ளாகியிருக்கின்றது. இவ்வாறே தமிழீழ மக்கள் கட்சி என்பதும் தோல்விக்கு உள்ளாகியது. எவ்வளவுதான் உயர்ந்த கோட்பாடு இருந்தாலும் அதற்கான தளம், நடைமுறையில் செயற்பாடு இல்லாது இடத்தில் நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டி வரும். இதுவும் வரலாற்று முயற்சிகளில் ஏற்பட்டதோல்வியே.

ஆனாலும் மேற்கண்ட அமைப்புகளின் தொடர்ச்சியாக கோட்பாட்டுப் புரிதல் தரகு விடுதலைப் புலிகள் தரகு அணியா, தேசிய அணியா என்ற என்ற விவாதம் என்பது தமிழ் தேசத்தின் போராட்டத்தினைப் பற்றிய புரிதலில் உள்ள மாறுபாட்டை காட்டியிருக்கின்றது. அடிப்படையில் தேசிய இன இயக்கத்தின் போக்கும் தேசிய இன அரசுகளை நிறுவும் திசையிலானதை விளங்கிக் கொள்ளவில்லை எனலாம். இதுவும் தமிழ் இளைஞர்களின் போராட்டத்தின் பின்னால் குறிப்பான பொருளாதார அடிப்படை என்பது அரைநிலமானியத்தில் இருந்ததைப் போல அடித்தளம் என்பது இருக்கவில்லை. ஆனால் அவர்கள் தேசிய இலக்கை நோக்கி அவர்களின் செயற்பாடுகள் இருந்துள்ளது. இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான போராட்டம் உச்ச நிலைக்குத் தான் சென்றது. இங்கு பிராந்திய வல்லரசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புக்கு தரவு வர்க்கத்தவர்களாலும், குட்டி முதலாளிய சக்திகள் வரவேற்புக் கொடுத்திருந்தார்கள்.

தரகு வர்க்கம் என்னும் போது அதற்கான பொருளாதார, சிந்தனைக் கட்டுமானம் என்பது அவசியமானதாகும். தமிழ் தரகு அணிக்கு அந்த அடித்தளம் உள்ளது. அரைநிலமானியச் சிந்தனைக்குட்பட்ட குறைகளை வைத்து பாசீசம் என வரையறுப் பதும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகும். ஆசிய பாணி கொடுங்கோன்மை மீது கட்டப்பட்ட அமைப்புக்களும் அதன் வடிவங்களும் அதற்கு உட்பட்டே இருக்கும். அரைநிலமானியச் சிந்தனைக்கு உட்பட்ட பலவீனங்கள் கொண்டதாக இருந்ததினால் அது முதலாளித்துவ இயல்பை கொள்ளவில்லை எனக் கொள்ள முடியாது. "முதலாளித்துவ இயல்புகள் சிலவற்றை கொண்டவராக நிலப்பிரபுக்கள் பல யப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற் கான தமது ஆவலைச் சிறிது வெளிப்படுத்தினர். ஆகவே யப்பானுக்கு எதிரான பொதுப் போராட்டதில் நாங்கள் அவர்களுடன் ஐக்கியப்பட வேண்டும்". (ப36 சீனப்புரட்சியும், சீ.க. கட்சியும்) இங்கு ஆவல் என்று தோழர் மாவோ குறிப்பிடுவது ஒரு சமூக ஒழுங்குப் போக்காகும். இந்த ஒழுங்கும் போக்கு சமூக பொருளாதார உற்பத்தி சார்ந்த நடத்தையை தீர்மானிக்கும் சமூக உறவை சுட்டிநிற்கின்றது. இதற்கு தேவையான சமூக உறவு என்பது தீர்க்கமான முடிவுகள் எடுப்பதற்கு அடிப்படையானது. தேசத்தின் விடுதலைக்கு எதிரான சக்திகளை எதிர்த்து தீர்க்கத்துடன் போராடிக் கொண்டிருந்த 1990களில் இந்த விவாதம் தவறான பொருள் கொண்ட புரிதலை அடிப்படையில் கொண்டதாகும்.

இன்று முதலாளித்துவ இயல்பு அற்றவர்களாக இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. கூஷிகூஷிதரகு முதலாளித்துவத் தன்மையுடைய பெரும் பூர்சுவா வர்க்கம் ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளிகளுக்கு நேரடியாகச் சேவை செய்கின்ற, அவர்களால் ஊட்டி வளர்க்கப்படுகின்ற வர்க்கம். எண்ணிக்கையற்ற தொடர்புகள் நாட்டுப்புறத்திலுள்ள நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் அதை நெருக்கமாகப் பிணைத்திருக் கின்றன. ஆகவே, சீனப் புரட்சி வரலாற்றில் அது சீனப்புரட்சியின் ஒரு இலக்காக இருந்து வருகின்றதேயொழிய, என்றுமே இயக்கு சக்தியாக இருந்ததில்லை.

இருப்பினும், தரகு முதலாளித்துவ தன்மையுடைய பெரும் பூர்சுவா வர்க்கத்தின் வேறுபட்ட பகுதிகள் வேறுபட்ட ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்திருக்கின்றன. (ப37 சீ.பு.சீ.க.கட்சியும்) இவர்களே யப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சரணாகதியடைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களாவும், யப்பான் சார்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

ஈழத்திலும் தரகு வர்க்கத்தின் தன்மை கொண்ட நிலமானிய சக்திகள் ஏகாதிபத்தியத்திற்கு சார்ந்து ஏவளாளிகளாக செயற்படுகின்றனர். இவர்கள் இந்திய, அமெரிக்க அன்னியர்களுக்கு சேவகம் செய்பவர்களாக இருக்கின்றார்கள். தரகு வர்க்கம் நேரடியாக எந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்ற நியதி என்பது இல்லை. ஆகவே இது நேரடியாக எதனையும் எதிர்க்கும் அரசியல் போக்கு என்பது இல்லை. கொலனித்துவ காலங்களில் முண்டு கொடுத்து பதவிகளையும், சுகங்களையும் அனுபவிப்பது, இதற்கு தனது அடையாளம் என்பது முக்கியமற்றது. தன்னை ஆள்வபவனுக்கு நல்லவனாக காட்டிக் கொள்கின்றது. தரகு வர்க்கத்தின் சமூக உறவை நுண்ணியல் ரீதியிலும் நோக்குதல் வேண்டும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வர்க்கத் தன்மையை வெளிப்படுத்தாது. தனியே தமிழர்கள் என்ற ஒரு காரணத்திற்காக அவர்களின் வர்க்கத்தன்மையை மறைத்து அரசியல் மதிப்பீடு செய்து விட முடியாது. இன்று (2015 தேர்தலின் பின்) ஆளும் வர்க்கத்தினையும் எதிர்க்கட்சியையும் தரகு அணியாக வைத்து ஏகாதிபத்திய நலனைப் பேணுகின்றது. இங்கு விடுதலை அமைப்பான விடுதலைப்புலிகளை தரகு அணி, பாசீச சக்தி என்று வரையறுப்பது இயங்கியலாக முடியாது.

இடதுசாரிகளாக பிரகடனப்படுதுபவர்கள் தலித்தியம், பாரம்பரிய இடதுசாரியம், பேரினவாத -இடதுசாரியம் புலிகளை காரணம் காட்டி அவர்களில் வரலாற்றுக் கடமையை செய்ய முடியவில்லை என்று கூறுவது தவறான கருத்தாகும். இந்த வரலாற்றுக் காலத்தில் போராட்டத்தை காரணமாக கொண்டாலும் இடதுசாரிகள் போராட்டத் தலைமை ஏற்க எடுக்கப்படும் முயற்சிகள் என்ன? பொதுத்தளத்தில் முன்னைய வாய்ப்பாட்டுவாதம் மீளவும் ஒப்பிக்கப்பட்டே வருகின்றது. வாய்ப்பாட்டுவாதம் என்பது சமூக மாற்றத்திற்கான போராட்டத்திற்கு எவ்வித பயனும் இல்லை.

இங்கு இடதுசாரிகள் மாக்சியத்தை ஏற்றுக் கொண்ட பிரிவுகளும் உள்ளது. போலி இடதுசாரிகளாக இவர்கள் பேரினவாதிகளாகவும், பொருளாதாரவாதத்திலும் மூழ்கிச் சீரளிந்தவர்களாக உள்ளனர். தென்னிலங்கை இடதுசாரியப் போராட்டப் பாரம்பரியம் (பிரதான போக்கில்) என்பது இன்று வரையிலும் தன்மை மாற்றிக் கொண்டதாக இல்லை. தென்னிலங்கை இடதுசாரி அமைப்புக்களின் வேலைத்திட்டத்தில் விஜயன், ஆரியம் என்ற கட்டுக்கதையிலிருந்து அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவர முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தக் கட்டுக்கதையை முறியடிப்பதற்கு என்ன செய்தார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம். ஏன் புத்த சிலைகளை அமைப்பதும், குடியேற்றங்கள் மேற்கொள்கின்ற போது சிறிலங்கா பிரசைகள் எந்த இடத்திலும் சென்று குடியேற முடியும் என்றவாதம் முன்வைப்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

தேசம் பற்றிய பிரச்சனையில் போதிய புரிதல்- உடன்பாடின்மை. இது பாரம்பரிய தென்னிலங்கை மற்றும் தமிழர் தலைமை கொண்ட இடதுசாரி கட்சியிடம் உள்ளது. இன்று இடதுசாரியம் என்று கூறுவோருக்கிடையே புரிதல் பற்றிய பிரச்சனை உள்ளது. மனித வளர்ச்சிப் போக்கில் முதலாளித்துவ- தேசிய கட்டத்தை கடந்துதான் செல்ல முடியும். இவைகள் பற்றிய போதிய புரிதல்- உடன்பாடின்மை வெளிப்படுகின்றது. இவைகள் இடதுசாரித்தின் நோயாக உள்ள நிலையில் இவற்றைக் கடந்து வரவேண்டியுள்ளது.

இன்று ஒற்றைத் துருவ முறை மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்தும் சந்தையைப் பிடிக்கும் போட்டிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. தமிழ் தேசம் ஏகாதிபத்தியத்தாலும், உள்நாட்டு பெருந்தேசியத்தினாலும் அடக்கப்பட்டுள்ளது. பிரதான முரண்பாடு அடிப்படை முரண்பாடுகளுக்கு இடையில் அடையாள அரசியல் (சாதி- தலித்திய- பிரதேச) முன்னிறுத்தி இருக்கின்ற தனலை (நெருப்பு) அணைப்பதில் தன்னார்வ முனைப்புக்கள் வேகமாக புகுத்தப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சனை -ஆதிக்கசாதி நலனே தனது தமிழ்த் தேசியம் என வடிவப்படுத்தி இயங்கி வந்தார்- என வரையறுக்கும் இரட்டைத் தேசியம்- புலிகள் தான் தமிழ் தேசியம் (போராடிய சக்தி என்பதை மறைத்துக் கொண்டு) என்று ஒற்றைப் பரிமாணத்தில் விளக்கம் கொடுப்பவர்கள். பாரம்பரிய இடதுசாரியம் தமிழ் பூர்சுவா வர்க்கத்தின் போராட்டமாக வரையறுத்துக் கொள்ளும் அவலம். இவர்களுக்கு தமிழ் தேசத்தின் போராட்டம் துடக்காகி விடுகின்றது. இன்றைய வரலாற்று ஓட்டம் என்பது தேசிய இயக்கங்களின் காலமாகும்.

ஐரோப்பாவில் 1789 - 1871 வரையான காலத்தை லெனின் தேசிய இன இயக்கங்களின், தேசிய இன அரசுகள் உருவாக்கப்படும் காலம் என்று வரையறுக்கின்றார். தென்கிழக்காசியாவில் அங்கமாகிய ஈழத்திலும் ஆசிய பாணி கொடுங்கோன்மை இருந்துவெளியேற வேண்டிய காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகம் பூராகவும் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவம் அடையும் இறுதி வெற்றியின் காலப்பகுதி தேசிய இன இயக்கங்களுடன் இணைந்துள்ளது. பண்ட உற்பத்தி முழு வெற்றியடைவதற்கு, முதலாளி வர்க்கம் உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்ற வேண்டும். ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட அரசியல் வழியில் ஒற்றுமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் அதற்கு வேண்டும். அந்த மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்று விளங்கவும் குறுக்கே நிற்கும் தடைகள் யாவும் அகற்றப்பட வேண்டும். - இங்குதான் இந்த இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கிறது. மனித இடைத் தொடர்புக்கு மிக முக்கிய சாதனம் மொழியாகும். நவீன முதலாளித்துவத்திற்கு சரியான விதத்தில் மெய்யாவே தடையற்ற விரிவான வாணிகத்துக்கும், பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்த மக்கள் சுதந்திரமான, விரிவான பிரிவுகளாக அமைவதற்கும், இறுதியாக சந்தையுடன் ஒவ்வொரு பெரிய, சிறிய உரிமையாரும், விற்போரும் வாங்குவோரும் பரஸ்பர நெருக்கமான தொடர் ஏற்படுத்திக் கொள்ளவும் மிக முக்கியமான நிபந்தனைகளில் மொழி ஒற்றுமையும் தங்கு தடையற்ற வளர்ச்சியும் அடங்கும்.

எனவே ஒவ்வொரு தேசிய இன இயக்கத்தின் போக்கும் தேசிய இன அரசுகளை நிறுவும் திசையிலானதாகும். அவ்வரசு களின் கீழ் நவீன முதலாளித்துவத்தின் இந்தத் தேவைகள் மிகவும் நன்றாக பூர்த்தி செய்யப்டும். மிகவும் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த லட்சியத்தை நோக்கி இட்டுச் செல்கின்றன. எனவே, மேற்கு ஐரோப்பா முழுவதற்கும் ஏன் நாகரீக உலகம் முழுவதற்குமே முதலாளித்துவ காலப்பகுதியில் தேசிய இன அரசு மாதிரிப்படிவமானது சகஜமானது" (ப76 (தே.இ.பா.வ.சர்1) இந்தப் பகுதியில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் மொழி, நிலம்,பொருளாதாரம், பொதுஅடையாளம் என்பதையும் சேர்ந்தே வாசிக்கப்பட வேண்டும்.

"இதன் விளைவாக, சட்ட வரையறைகளை வைத்துக் கொண்டு ஜாலவித்தை செய்வதன் மூலமோ அன்றி, சூக்குமமான இலக்கணக்களைப் புனைவது மூலமே அன்றி தேசிய இன இயக்கங் களின் வரலாற்று, பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் வாயிலாக தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதன் பொருளை நாம் புரிந்து கொள்ள விரும்பும் பட்சத்தில், இந்த தேசிய இனங்கள் அன்னிய தேசிய இன அமைப்புகளிலிருந்து அரசியல் வழியில் பிரிந்து, சுதந்திரமான தேசிய இன அரசாக உருப்பெறுவதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் என்ற முடிவுக்குத் தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத வகையில் வந்து சேருவோம்". (77) (தே.இ.பா.வ.சர்1) இதனை மறுத்த இடதுசாரிகளே இலங்கை வரலாற்றில் எங்கும் தொடர்கின்றது. இங்கு இடதுசாரியம் கடமையாற்றியது பற்றிய இடைவெளியை விமர்சிப்பதன் மூலமே அடுத்த கட்டத்தினை கடக்கமுடியும்.

பாரம்பரிய இடதுசாரியமானது "சுயநிர்ணயம் என்றால் என்ன என்பதை அதன் முழுமையான பொருளில் சிங்கள வெகுசனங்கட்கு விளக்கி அவர்கள் பேரினவாதிகளால் திசைதிருப்பப்படாலம் தடுப்பது சிங்கள முற்போக்காளர்களின் கடமையாகும். சுயநிர்ணயம் என்றால் பிரிவினைக்கான உரிமை என்பதை விடவும் விரிவான பொருளை உடையது என அறிய மக்களுக்கு உரிமை உண்டு. முக்கியமாக, ஐக்கிய இலங்கை என்ற வரம்பிற்குள், சம்பந்தப்பட்ட தேசிய இனங்கள் தேசியப்பிரச் சனைக்குத் தீர்வுகளை ஆராய்வதற்கான உரிமையும் அது குறிக்கிறது என்பதும் விளக்கப்பட வேண்டும். சிறந்த தீர்வு சமஸ்டி அரசு முறையாக பிரதேச சுயாட்சியா வேறுவகையான தன்னாட்சி முறையா என்பது கலந்தாலோசித்துத் தீர்மானிக்க வேண்டிய விடயம். எவ்வாறாயினும், ஒரு தீர்வின் உறுதிப்பாடு, சனநாயகம் வலுப்படுத்தும் நோக்கில் அதிகாரத்தின் அதிகபட்சப் பரவலாக்கத்தால் மேலும் வலுப்பெறும் என்பது இங்கு வற்புறுத்தப்பட வேண்டும்". (ப. 19 சுயநிர்ணயம் பற்றி-இமயவரம்பன்) சுயநிர்ணயம் என்றால் பிரிந்து போகும் உரிமை என்று அர்த்தமாகிறது. ஆனால் அது பிரிந்து போகிற காரியமாகும் அவசியமில்லை என்கிற போக்கில் சிந்திப்பது தாய்நாட்டுப் பற்றுக்குப்பால் இது லெனினியத்திற்கு எதிரான நிலைப்பாடாகும். இங்கு உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான ஐக்கியத்திற்கு எதிராக என்ற பொருளில் சுருக்கிப் பார்ப்பது லெனினின் தேசிய ஜனநாயகம் பற்றிய புரிதலுக்கு மாற்றானதாகும். வர்க்க உணர்வு பெறான சமூகக் கட்டமைப்பும், பெருந்தேசிய சிந்தனைக் கட்டமைப்புகள் அரசியல் அதிகாரத்தை மறுத்து நிற்பதை மறுக்கின்றார்கள். ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்க இயக்கம் இருந்து அதைவிட ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய விடுதலை இயக்கம் முன்னணியில் இருக்குமாயின் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் பிரிவினையையும் அங்கீகரிக்க வேண்டும். அதே நேரத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சிக்குத் தயாராய் இருக்கவேண்டும் என்பதை ஸ்வீடன், நோர்வே கட்சிகளின் அணுகுமுறையும் லெனின் அணுகுமுறையும் உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த பேரினவாதத்தினுள் மூழ்கியுள்ள நிலையில் ஒடுக்கும் தேசிய இனத்தில் ஜனநாயக இயக்கங்களோ, பாட்டாளி வர்க்க இயக்கங்களோ இன்றி அது பிற்போக்கில் மூழ்கி இருக்கும்போது, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய விடுதலைப்போராட்டத்தை உறுதியாக தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்பதை அயர்லாந்து போலந்து பிரச்சினைகளில் மார்க்சின் அணுகுமுறை உணர்த்துகின்றது.

வரலாறு என்பது முன்னோக்கிச் சென்று கொண்டுதான் இருக்கின்றது. வரலாறு முன்னோக்கி நகர்ந்து செல்வதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்ய முடியும். தேசிய இனங்கள் முதலாளித்துவத்தின் தேசமாக பரிணமிப்பதை மறுக்கும் கூற்றையும் நாட்டரசையும், தேசிய இன அரசையும் வித்தியாசம் அற்று நோக்கப்படுகின்றது. நாடு என்கின்ற நிலப்பரப்பில் உள்ள எண்ணற்ற தேசங்கள் அடங்கியிருக்கும். அதேவேளை தேசிய அரசுகள் என்கின்ற போது சமவுரிமை பெற்ற அரசுகளைக் குறிக்கின்றது. சமவுரிமை பெற்ற அரசுகள் சோவியத் ஒன்றியத்தில் இடம்பெற்றிருந்தது.

"தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்துவோர் எல்லாக் காலத்திலும் இலங்கை ஒரே தேசமாக இருக்கவில்லை எனவும் பிரித்தானிய ஏகாதிபத்தியமே அதை ஒன்றுபடுத்தியது எனவும் கூறுவதில் உள்ள உண்மை, அந்த வாதத்தின் தொடர்ச்சியாக இலங்கை தமிழ் - சிங்கள இராச்சியங்களாக இருந்து வந்தது என்று காட்ட முனையும் போது இல்லாமல்போய் விடுகிறது. தேசிய அடிப்படையிலான அரசு, நிலமான்ய சமுதாயத்திற்குப் பிற்பட்டது என்பதோடு இந்தியத் துணைக்கண்டத்திற் கூட, நாடுகள் மொழி, இன அடிப்படையிலேயே அமைந்திருக்கவில்லை என்பதையும் நினைவில் நிறுத்துவது பயனுள்ளது. சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளும் பிற சிற்றரைசுகளும் பிற்காலத்தில் பல்லவ அரசும் இனவாரியான தேசிய ஐக்கியத்தை வலியுறுத்துவன அல்ல." (ப32 இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்) ஆற்றல் வளங்கொண்ட தேசிய இனங்களின் இருப்பையும், இனக்குழும வாழ்வியல் எச்சத்தையும் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் பரந்து வாழ்ந்த மக்கள் திட்டமிட்ட தாக்குதல் காரணமாக சுத்திரீகரிப்புச் செய்யப்படுவதையும் இயங்கியல் ரீதியாக விளங்கிக் கொள்ள முற்படாததை மேற்கண்ட மேற்கோள் உணர்த்துகின்றது. சமூக ஒழுங்கமைவு என்பதை மறுத்த சடத்துவவாதம் என்பதும் மேலோங்கியிருக்கின்றது. 1833 ஜனநாயக தேசிய இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்திருக்கவில்லை. அன்று கருநிலையில் தேசமான பரிணமிக்கக் கூடிய தேசிய இனங்கள் இருந்திருக்கின்றன. இதனை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நிலப்பிரபுத்துவ அரச வம்சங்களின் அரசுகளும் முதலாளித்துவ தேசியஇன அரசுகளும் ஒன்றல்ல.

ஒரு பொருளாதார அமைப்பு என்பது மாறிச் செல்கின்ற போது அதற்கு போதிய கட்டமைப்புக் கொண்ட ஜனநாயக வளர்ச்சி இல்லை என்றால், அதன் தேவையை அடைய அனைத்தையும் மீறித்தான் முன்னோக்கிச் செல்கின்றது. இந்த மாற்றம் சமாதான முறையில் அல்லது பலாத்காரத்தின் ஊடாக நடைபெறலாம். வர்க்க பேதம் அற்ற சமூகத்தில் சரியானதற்கும் பிழையானதற்குமான இடையேயும், பழையதற்கும் புதியதற்கும் இடையேயான முரண்பாடு இருந்து கொண்டே தான் இருக்கும்.

நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முன்னோக்கிச் சென்று முதலாளித்துவம் கட்டத்தை அடைகின்ற போது அதற்கான ஜனநாயக உரிமைகள், உட்கட்டுமானம், நிறுவனமயமாதல் என்பது மாற்றத்திற்கு உள்ளாகி வந்திருக்கின்றது. ஏகாதிபத்திய முதலாளியக் கட்டத்தில் பல்வேறு வகையான நிறுவனங்கள் (institutions) உருவாக்கப்பட்டு அவைகள் தேவையான அளவு சிறப்புத் தேர்ச்சி கொண்ட வேலைப் பிரிவினைகளைக் கொண்டு செயற்படுகின்றது. இந்த நிறுவனங்களின் (சர்வதேச வேலைப் பிரிவினை வளர்ந்த நிலை, சந்தை, நிதிமூலதனம், மிகை உற்பத்தி) கொள்கை வகுப்புக்கள் கூட ஏகாதிபத்தியங்களிடையே முரண்பாட்டைக் கூட ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையானது தமிழ் 'இனவாதி'களாலோ அல்லது ஆயுதக் குழுக்களின் தான் உருவாக்கியதன்று. தேசிய இனப்பிரச்சனை என்பது தனியே இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியோகமானதல்ல.

இதே காலத்தில் கொலனித்துவத்தின் விழைவாக மாத்திரம் அல்ல. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு செல்கின்ற போது மொழியின் தன்னாட்சி, பொருளாதாரத்தில் தன்னாட்சி, நிலத்தின் மீதான தன்னாட்சி, கலாச்சாரப் பண்பாட்டு தன்னாட்சி என்று தேசிய இனங்கள் பண்பைக் கொண்டதாக வளர்கின்றது. இந்த வளர்ச்சிப் போக்கை அடைகின்ற போது கோரிக்கைகள் முரண்பாடாக வெளிப்படுகின்றது.

இனக்குழும வாழ்க்கை என்பது இடம் விட்டு இடம் நகரும்போக்கைக் கொண்டது. நாடுகளாக தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைகளைப் போடுவதற்கு முன்னர். இனக்குழுமங்கள் இடப்பெயர்வுக்கு சுதந்திரம் இருந்தது. இந்தச் சுதந்திரம் இல்லாதாக்கப்பட்டு சந்தையை பகிரும் எல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. புவிப்பரப்பில் எல்லா இடங்களிலும் நிலப்பிரபுத்துவம் ஒரே நேரத்தில் வளர்ச்சியடையவில்லை. இவ்வாறு மக்கள் இடம்பெயர்வுகள் தொகையாக பல்வேறு காரணங்களுக்காக இருந்துள்ளது, மொழியைப் பாதுகாத்துக் கொள்வதன் ஊடாக அவர்களின் அடையாளம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு ஐரோப்பாவில் வசிக்கும் சாமி (Samis) மக்களை குறிப்பிடும் போது அவர்கள் ருஸ்யா, பின்லாந்து, நோர்வே, சுவீடன் என பரந்து வாழ்கின்றார்கள். அவர்களின் வாழ்வு முறை என்பது இனக்குழும வாழ்வியில் இருந்து இன்று விடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு தேசிய இனமாகும்.

நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முதலாளித்துவ கட்டத்திற்கு அடைகின்ற போது புதிய எல்லைகளைக் கொண்ட நிர்வாக அலகுகளாக பரிணமித்துள்ளது. ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் (nation) இருக்க முடியும். இதற்கு உதாரணம் சுவீஸ், பெல்ஜியம், இந்தியா என பல நாடுகள் உள்ளது.

ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களை நிர்வாக வசதிக்காக இணைத்த போக்கினை இலங்கை, குர்து (சிரியா, ஈரான், ஈராக், துருக்கி என பிரித்துள்ளார்கள் - காஸ்மீர் தேசிய இனமும் பாக்கிஸ்தான் - இந்தியா என்று பிரித்துள்ளனர்) போன்ற தேசிய இனங்களையும் தேசங்களையும் குறிப்பிடலாம்.

இவ்வாறான தேசிய இனங்கள், தேசங்கள் வரலாற்று ஓட்டத்தை மையப்படுத்தியதாகவும் அரசியல் பொருளாதார வளர்ச்சிப் போக்கை கணிக்காத ஆய்வுகள், சிந்தனைகள், வெளிப்பாடுகள் தீர்வுகள் என்பது வரலாற்றில் எவ்வித புரட்சிகர பாத்திரத்தை கொடுக்கப் போவதில்லை. வரலாற்று அனுபவம் என்பது முழுமையான உண்மையாக இருப்பதில்லை. அனுபவவாதம் என்பது வரலாற்று உண்மையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் அலகிம்

உலகம் முழுவதும் நிரந்திரப்புரட்சி நடக்க வேண்டும். சர்வதேச அலகில் இருக்கும் பிரதான முரண்பாடு தொழிலாளி வர்க்கத்தின் மீதான ஒடுக்குமுறைதான் மூலதந்திரம் என்பார்கள். தேசிய இனப்பிரச்சனையை விட வர்க்கப் பிரச்சனை தான் உள்ளது. ஆனால்

- அரைநிலமானியம் உடைய வேண்டும்

-முதலாளித்துவக் கட்டம் கடக்க வேண்டும்

இதில் ஏற்படுகின்ற தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுமுக்கியமானது. இதுவே ஒரு குறிப்பான நாட்டில் பிரதான முரண்பாடாக இருக்கின்றது. சோசலிச சமூகத்தை நோக்கி நகர வேண்டியிருப்பதால் படிப்படையாகவே கட்டம் கட்டமாக கடந்தாக வேண்டும்.

இந்த நிலையில் குறைந்தபட்ச சீர்திருத்தத்தை முன்வைக்கும் புதிய ஜனநாயக மாக்கிசிய லெனினியக் கட்சி மீது நான்காம் அகிலம் விமர்சனத்தை முன்வைக்கின்றது. தோழர் செந்திவேல் (புஜமாலெக) தெரிவித்த கருத்தை "மக்களுக்கு மாற்றம் வேண்டும். அவர்கள் அடிப்படை கொள்கையில் இருந்து மாற்றுக் கொள்கைக்கு வர வேண்டும். பிற்போக்கு தமிழ் தேசியவாதம் தான் உள்ளது. முற்போக்கு தமிழ் தேசியவாதம் வரவேண்டும்." தமிழ் கூட்டமைப்பு மற்றும் த.தே.ம.முன்னணியும் "பிற்போக்கு தமிழ் தேசியவாத கொள்கைகளை" பின்பற்றுவதாக கூறிக்கொண்ட அவர், பு.ஜ.மா.லெ.க. "முற்போக்கு தமிழ் தேசியவாதத்தை" முன்னெடுப்பதாகத் தெரிவித்தார்.

இந்த வேறுபடுத்தல் பொய்யானதாகும். எந்த வடிவத்திலும், தமிழ் தேசியவாதத்தில் அல்லது உண்மையில் தேசியவாதத்தில் எந்தவித முற்போக்கும் கிடையாது. 1980களில், பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ.) இலங்கையில் தமிழீழ விடுதலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் போன்ற முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் அனைத்தும், கூர்மையாக வலதுபக்கம் திரும்பி, சகலவித ஏகாதிபத்திய-விரோத நிலைப்பாடுகளையும் கைவிட்டு, பெரும் வல்லரசுகளிடம் சரணாகதி அடைய முயன்றன. இந்த அரசியல் மாற்றமானது இந்த அமைப்புக்கள் அனைத்தும் அடித்தளமாக கொண்டிருந்த தேசிய பொருளாதார ஒழுங்கமைப்பு வேலைத் திட்டத்துக்கு முழுமையாக குழிபறித்த, உற்பத்தியின் பூகோளமயமாக்கலின் தாக்கத்தை பிரதிபலித்தது. (<https://www.wsws.org/tamil/articles/2016/mars/srln-m18.shtml>)

மேலும் 2009ல் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டமை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு தமிழ் முதலாளித்துவ அரசை அமைக்கும் அதன் திவாலான தேசியவாத முன்னோக்கியதன் விளைவே ஆகும். அதன் இரக்கமற்ற ஜனநாயக-விரோத வழிமுறைகளால் தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் அந்நியப்பட்ட போதிலும் கூட, கொழும்பு அரசாங்கத்தின் குற்றங்களுக்கு முழு சிங்கள மக்களையும் கண்டனம் செய்தமை, புலிகள் இயக்கம் இலங்கையில் அல்லது மிகவும் பரந்தளவில் தெற்காசியா மற்றும் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்துக்கு அழைப்புவிடுக்க இலாயக்கற்றது என்பதை உறுதி செய்தது. இலங்கை இராணுவம் புலிகளின் கடைசி கோட்டைகளையும் சுற்றிவளைத்த போது கூட, அவர்கள் கொழும்பை ஆதரித்த அதே பெரும் வல்லரசுகளுக்கே பயனற்ற வேண்டுகோள்களை விடுத்தனர் என்று எழுதுகின்றார்கள்.

நாம் முன்னர் பார்த்தது போல ஒரு அமைப்பின் சிந்தனை கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்பினால் உருவான வெளிப்படும் அதுவே விடுதலை அமைப்பின் பலவீனமாகும். ஆனால் தேசிய இனங்களின் முதலாளித்துவக் கட்டத்தை அடைவதை மறுப்பதும் வெவ்வேறானவை. பலஸ்தீன, ஈழப் போராட்டத்தை பிற்போக்கானது என்பது மாத்திரம் அல்ல மறைமுகமாக ஒடுக்கும் சோவனிச, சியோனிச ஆக்கிரமிப்பாளர்களின் சேவகர்களாக மாறிவிடு கின்றார்கள். குறிப்பான நாட்டுச் சூழலில் எவ்வகையாக கோட்பாடு என்பது பற்றி புரட்சிகரமான திட்டம் இருப்பதில்லை. பொதுவான கோட்பாடு ரீதியாகத் தான் ரொட்ஸ்கிகள் அரசியல் மதிப்பீடு செய்வதும் பொதுவான உலகம் தழுவிய புரட்சியின் சிந்தனை வடிவத்தில் இருந்து அவர்கள் வெளிவரப் போவதில்லை.

இலங்கை என்ற நாட்டுக்குள் இருக்கின்ற தேசங்கள், தேசிய இனங்களின் உரிமை பற்றியதும் சமூகப் புரட்சியும் வென்றெடுக்கப்பட வேண்டுமென்றால் அரசியல் ரீதியான மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானதாகும். அதேவேளை பு.ஜ.மா.லெகட்சியினரின் கருத்தும் தவறானதாகும். ஆனால் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டத்தை பு.ஜ.மா.லெகட்சியினர் தான் தலைமை தாங்கி நடத்த வேண்டும். சமூக ஒழுங்கமைவு அதன் வளர்ச்சி பற்றி தெரிந்து கொண்டவர்களாக இல்லை. முதலாளித்துவக் கட்டத்தை அடையாது சோலிசத்தை அடையமுடியாது. சோவியத்திலும், சீனத்திலும் முதலாளித்துவக் கடமை முடிக்கப்பட்டது, அங்கு தலைமை புரட்சிகரக் கட்சி தலைமைவகித்தது. ஆனால் ஈழத்தில் தலைமை புரட்சிகரக் கட்சியிடம் இருக்கவில்லை என்பதற்காய் ஈழ தேசத்தின் போராட்டம் முற்போக்குத் தேசியம் இல்லை என்பது வெறும் அபர்த்தமான நோய் இடதுசாரிகள் என்பவர்களிடம் பீடித்திருந்தது, பீடித்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடதுசாரிய வாய்பாட்டு- அகநிலைவாதம்

தமிழர்கள் ஒரு தேசம் அவர்கள் மொழியை தன்னாட்சி கொள்வது, நிலத்தை தன்னாட்சி கொள்வது, கலைபண்பாட்டுத் தன்னாட்சி கொள்வது, பொருளாதாரத்தை தன்னாட்சி கொள்வது இவை அனைத்தும் கொண்டதுதான் ஒரு தேசம். இந்தப் புரிதல் இல்லாத அரசியல் போக்கில் இருந்து பிரச்சனையை அணுகுவது அல்ல.

இலங்கையிலும் 1833 கொலனித்துவ காலத்தின் முன்னரே தேசமாக வளரக் கூடிய ஆற்றல்வளம் கொண்ட தேசிய இனங்கள் இருந்து வருகின்றது. அவ்வாறு இருந்த போதிலும் எண்கணக்கில் அமைந்த நிலையில் சிங்கள தேசத்திடம் முழு நாட்டின் ஆட்சியதிகாரம் கொடுத்து விட்டுச் செல்லப்பட்டது. நாட்டு அரசிற்கும் தேசிய அரசிற்குமான வித்தியாசம் விளங்கிக் கொள்ளாத நிலை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. தாய்நாடு என்ற வாய்பாட்டுவாதம் போலிச் பெயருக்கு) சுதந்திரத்திற்கு முன்னரே முன்வைக்கப்பட்டது. ஒரு நாட்டுக்கள் பல தேசிய இனங்கள் இருக்க முடியும். இது நாட்டிற்கான அரசு. தேசங்கள் இருக்கின்ற போது தேசங்களில் ஆட்சியதிகாரத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் கூட்டரசாகின்றது.

1900 களில் கொலனித்துவவாதிகளிடம் அதிகாரம் பற்றிப் பேசப்படுகின்றது. அப்போ ஆணைக்குழுக்கள் நியமித்து 'சிறுபான்மையினர்' என்ற புரிதலில் இருந்தே அரசியல் அதிகாரம் பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால் சேர்.பொன் அருணாசலம் தொடங்கி 1976 வரையில் தேசம் பற்றிய புரிதல் இல்லாதிருக்கின்றது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (Jaffna Youth Congress) ஆங்கிலேயரின் அதிகாரத்தை அகற்றுதல், முழுமையான சுயாட்சி பெறுதல், தேசிய ஒற்றுமை, மது விலக்கல், தீண்டாமை ஒழித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல முற்போக்குக் கொள்கைகளை இவர்கள் முன்வைத்தனர். இவர்களின் கொள்கை அன்றையக் காலத்தில் முற்போக்கானது தான். ஆனால் முதலாளித்துவ சகாப்தம் பற்றிய புரிதல் அவர்களிடம் இருந்தது இல்லை. அவர்களின் சீர்திருத்தப் போக்கு என்பது தேசிய எழுச்சி பற்றிய புரிதல் அவர்களிடம் இல்லை. தேசிய இயங்கங்களில் வளர்ச்சிப் போக்கை கொள்ளா படித்த குட்டிமுதலாளியக் கோரிக்கை இன்று முன்வைப்பது இயங்கியலாக இருக்க முடியாது. இதனை இன்று முன்வைத்து பழப்பெருமை, தேசியக் கட்டத்தை இகழ்வதற்காக பயன்படுத்த முடியும். மார்க்சிய லெனினிய தேசியக் கோட்பாட்டை உள்வாங்கிய இயக்கமும் அதுவல்ல. திரு. காந்தி என்ற சனாதனவாதியை அழைத்து வரவேற்ற ஒரு குட்டிமுதலாளிய அமைப்பின் சிந்தனை வடிவம் கோட்பாடுகள் புரட்சிகரமாக இருக்க முடியாது.

இவ்வளவு கால வரலாற்று ஓட்டத்தில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஒரு புதிய பரிமாணத்தை அடைகின்றது. இதனை குறுந்தேசியவாதம் என்று வரையறுப்பதும் உண்டு, இடதுசாரி எழுச்சியை திசைதிருப்ப வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கொண்டு வந்ததாகக் கொள்வதும் உண்டு. 1949- 1976 மென்வலு- தரகு வர்க்கமாக இருந்த தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றவர்களுக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தமே வட்டுக்கோட்டை தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஒடுக்குமுறையும், இளைஞர்களின் எழுச்சியுமே காரணமாகியது.

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியில் என்பது ஆக்கிரமிப்பும் அரைநிலமானிய- குறை முதலாளித்துவ வளர்ச்சியை பாதுகாத்து, தேசத்தினை இல்லாதாக்கின்றது. இந்த வியூகத்தில் செயற்படும் பெருந்தேசியவாதத்தை அலட்சியம் செய்துவிட முடியாது. இது போலிச் (பெயருக்கு) சுதந்திரத்திற்குப் பின்னால் லங்கா என்ற இறைமைக்குள் அனைவரையும் அடக்கி தமிழர் தேசத்தை சிறுபான்மையாக்கி ஆட்சியுரிமையை மறுத்துள்ளது. தேசத்தின் மறுக்கப்பட்ட ஆட்சியுரிமை பற்றித் தான் இப்போ முதன்மைப் பிரச்சனை. போலி வேசத்தில் ஐக்கியம், நல்லிணக்கம், ஒரு தேசம், ஒரு நாடு, இலங்கையில் வாழும் மக்களுக்கு ஓடுவது ஒரே இரத்தம் என்ற ஜீவகாருண்யவாதத்தில் இருந்து அல்ல. அடக்குமுறையாளர்களின் நிலைப்பாடுகளில் இருந்து விடயங்களை அணுகிக் கொள்ள முடியாது. உழைக்கும் மக்களின், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக விரோதிகளால் பரப்பப்படும் பிரச்சாரமானது சமூகமாற்றத்திற்கு எதிரானதாகும். சோசலிசம் கிடைத்த பின்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்ற கற்பனைப் போக்கும் உள்ளது.

இங்கு தமிழர்கள் சிறுபான்மை என்றும்- தேசிய இனம் என்றும் வரையறுத்து விட்டுச் செல்கின்றார்கள். இங்கு நாட்டிற்கும் தேசத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் உள்ளார்கள்.

1. சிறிய நாடு என்ற சிந்தனை

2. சிறுபான்மை தேசிய இனங்கள்

3. 4 தேசங்கள் என்ற போக்கு

4. 4 தேசிய இனங்களுக்குமான சுயநிர்ணயம்

5.ரொட்கிய உலகம் தழுவிய புரட்சி கண்ணோட்டம்.

திரிபுவாதிகள் மற்றும் சீர்திருத்தல்வாதிகளின் கருத்தை அறிவதன் ஊடாகவே அதன் போக்கை முழுமையாக அறிய முடியும்.

"சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்களையும் வேடர் எனப்படும் பூர்வீக மக்கள், மலேயர், பறங்கியர் வேறும் சிறுபான்மை மக்களையும் ஒன்றிணைத்துள்ள இலங்கையர் எனும் உணர்வு நிலைக்குரியது இலங்கைத் தேசியம். குறுந்தேசியவாதம், இலங்கைத் தேசியத்துக்கு உட்பட்டதாக, ஏனைய தேசிய இனங்களின் சமவுரிமையைக் கவனங்கொள்ளாது, தனித்து 'மேலாண்மை' உணர்வோடு உள்ள சிறு தேசிய இன ஒடுங்கிய மனப்பாங்கு குறுந்தேசியவாதம்."

"தமிழ்த்தேசியம், வடக்கு-கிழக்குக்கு அப்பாலும் உள்ள தேசிய இனம். ஒப்பிட்டளவில் நிலத்தொடர்புடன் 'தமிழ்த்தேசம்' கூடிய வாய்ப்புடையதாயினும் இதன் பிரிவினை எல்லைக்கு அப்பால் தமிழ்த்தேசிய இன மக்கள் கணிசமாக உள்ளனர். இலங்கையில் சிங்கள - தமிழ்த் தேசங்கள் இரண்டுள்ளன என்பது முழுமை பெறாது, மேலும் முஸ்லிம் - மலையகத் தேசங்களும் உண்டு. இவற்றின் சுயநிர்ணய உரிமையில் முந்திய இரண்டு தேசிய இனங்களுக்கு மட்டும் கூடுதல் உரிமை கிடையாது. நான்கு தேசிய இனங்களும் சமநிலையில் உரையாடும் களம் ஒன்றுக்காக இணைந்து போராடுவோம் !

இங்கு ஈழ - இலங்கை என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். இலங்கை என்று பொதுவாக அறியப்பட்டது பின்னர் சிறிலங்கா என்று மாற்றமடைகின்ற போது அதற்கான அதிகார உள்ளடக்கம் மாற்றமடைகின்றது. சிங்கள தேசம் தன் தேசிய இனத்தை முன்னிறுத்தி மாற்றிய பெயராகும். இவ்வாறு மாற்றிய போதே தேசத்தின் சமவுரிமை மறுக்கப்படுகின்றது என்பதை கோட்பாட்டு ரீதியாக உள்ளவாங்கப்பட வேண்டும். இவற்றிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக குரல் கொடுப்பது குறுந்தேசியமாகாது, சிங்கள தேசிய மக்களும், தமிழ் தேசிய மக்களும் தமக்கிடையே வளங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அல்லது பிரித்துக் கொள்ளும் போர் தேசியப் போராகின்றது. சிங்கள பேரினவாத அரசுகளாக இருந்தபடி தமிழ் சிங்கள மக்களை சுரண்டுகின்றது என்பது தமிழ் பிரிவு தனக்கான பங்கைக் கோரும் போர் எப்போதும் சுரண்டல் வர்கத்திடமே எழுகின்றது. இதனால் தேசிய தேசியம் என்பது முதலாளித்துவக் கோரிக்கை என்கின்றார்கள்.

இனக்குழுமங்களாக இருக்கின்ற போது சிதறி வாழும் மக்கள் மொழியைக் கலாச்சாரத்தை பாதுகாக்க முடியும். அவ்வாறே பரந்து வாழ்ந்த தமிழ் மக்களை வெட்டரிவாள் கொண்டு திரத்தியடித்தது. அந்தந்தப் பிரதேசங்களை தமக்கு மட்டுமாக்கியது. இது ஒன்றும் புதிய பரிமாணம் அல்ல காரணம் இனக்குழும வாழ்க்கையில் வளங்களையும், பிரதேசங்களையும், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக எதிர் இனக்குழுமங்களை விரட்டியடித்து தமக்கான எல்லையை பாதுகாத்து வருவதாகும். இது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் இவ்வாறான நிகழ்வுகள் உலகம் பூராகவும் நடைபெற்று வந்திருக்கின்றது. அண்மைய வரலாற்றில் ஆட்சியதிகாரம், மத அதிகாரம் கொண்டு றொவெண்டாவில் இனவழிப்பு நடைபெற்றது. ஆக சமூகத்தில் வாழும் எல்லைகள் மாற்றப்பட்டுக் கொண்டு தனித்த ஒரு குழுமத்தைக் கொண்ட பிரதேசங்கள் அதிகாரத்தின் ஊடாக நிலை நிறுத்தப்படுகின்றது. இவற்றை தனியே கலவரம் என்று கடந்துவிட முடியாது. இது பொதுவான இனக்குழுமங்களுக்கு இடையே வளங்களை கைப்பற்றுவதற்கான நடைமுறையில் சகஜமான ஒன்றாகும்.

நுண்ணியலில் இனங்களுக்கிடையிலான பகை முரண்பாடாகப் பொருளாதார வளர்ச்சிகளின் வாயிலான பங்குச் சண்டைகள் வருகின்றன. பங்குகள் பொருளாதாரப் போட்டிகளோடும், அத்தகைய பொருளாதாரத்தால் நிலைபெறும் அரசியல் அதிகாரத்துக்கான போட்டிகள் இனங்களுக்கிடையில் முட்டிமோதும்போது இலங்கையில் இனமுரண்பாடாக இவை எட்டின. இதன் அகரீதியான தாக்கமானது இலங்கை மக்களது மனங்களின் இனப்பகையாகக் காலாகாலம் வளர்ந்திருக்கும்படியாக இலங்கையின் பொருளாதார முரண்பாடுகள் இருத்தி வைக்கப்பட்டன. இவைகள் நுண்ணியலில் நடைபெறும் மாற்றங்கள். நுண்ணியலில் நடைபெறும் மாற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவதை புறநிலையில் இருந்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**“அனைத்து நாட்டுத் தொழிலாளிகளும் ஒரேவிதமான நலன்களையும் ஒரே விதமாக எதிரியையும் கொண்டுள்ளார்கள். மேலும் ஒரே விதமான போராட்டத்தை அவர்கள் நடத்த வேண்டியுள்ளது”.** (ஏங்கெல்ஸ்) ( இந்தப் புரிதலே என்னிடமும் பல ஆண்டுகளாக இருந்தது) அது பொதுவான அடிப்படை முரண்பாட்டைக் கொண்டது என்பது உண்மையே. இது ஏகாதிபத்திய சகாப்தத்திற்கு முன்னைய முன்மொழிவுகள் தான் மாறாக ஒரு குறிப்பான நாட்டின் பிரச்சனையை ஒட்டிய கோட்பாட்டு முடிவாக இல்லை. ஒரு நாட்டில் உள்ள தேசம் சொந்த ஒடுக்குமுறைக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக போராட வேண்டும். இங்கு தேசியப் போராட்டம் இரண்டு தளங்களைக் கொண்டதாகும். சுதந்திரக் குடியரசை அமைத்துக் கொள்ளும் அரசுரிமை தமிழ் தேசத்திற்கு உண்டு. இந்திய பொதுவுடமைவாதிகள் சுந்திர சோவியத் குடியரசை அமைந்துக் கொள்ளும் தந்திரோயாயத்தை முன்வைப்பவர்கள் மா.லெ அமைப்புகள் உள்ளது. இதே வேளை தமிழ்நாடு சுதந்திரக்குடியரசாக உருவாகவேண்டும் என்று தமிழ் நாடு மார்க்சிய லெனியக் கட்சி போராடுகின்றது.

தேசிய இனப்பரிவினையைத் தாண்டி ஐக்கியப்பட்டு சுரண்டலுக்கு எதிராக போராடினால் வர்க்க எதிரியை பிளவு ஏற்படுத்த முடியாது போய்விடும். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடவும், தலைமை தாங்கவும், பிரிவினைவாதமாகவும் வரையறுத்த நிலையில் எவ்வாறு மதிப்பீடு, கோட்பாட்டு முடிவு இயங்கியலாக முடியும்? தேசியவிடுதலைப் போராட்டம் பாட்டாளி நடத்துவதில்லை என்ற கூற்று பிரதான முரண்பாட்டை கவனத்தில் கொள்ளவில்லை. பி.ஏங்கெல்ஸ் கூறுகின்ற நிலை என்பது பொதுவான கோட்பாடாகும். இது குறிப்பான இடத்தை நோக்கியதாக இல்லை. சிந்தனை மாற்றம் என்பது புறநிலையில் இருந்து வருவதாகும், அகநிலையில் இருந்து மாறுவது இல்லை. இங்கு ஒரு தேசிய இனம் என்பது வர்க்கங்களின் கூட்டா அல்லது ‘சமூக ஒழுங்கமைவு’ (ப.41 க.க.அ) அடித்தளமா என்பதற்கான விடை காண வேண்டியுள்ளது.

வர்க்கம் என்பது உற்பத்தி முறையுடன் மாறுகின்றதாகும். ஒரு சமூக ஒழுங்கமைவிற்குள் (objectivism) தான் வர்க்கம் இருக்க முடியும். சமூக ஒங்கமைவில் வர்க்கம் இல்லாமலும் இருந்துள்ளது. ஆதிப்பொதுவுடமைச் சமுதாயத்தில் வர்க்கம் இல்லை. வர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத காலத்திலும் சமூக ஒழுங்கு இருந்துள்ளது. அது தாய்வழிச் சமூகமாக இருந்ததும். மனிதர்களின் சமூக ஒழுங்கமைவு கணம் (Clan) அல்லது சிறுகுடிகளாக இருந்து இனக்குழுமங்களாக நிலப்பிரபுத்துவத்துடன் 'தேசிய' இனமாகின்றன.

சமூகத்தில் சரிக்கும் பிழைக்கும் இடையேயான போராட்டம் நடைபெறுகின்றது. சமூக வாழ்வியல், சமூகப் பிரச்சனை விஞ்ஞான ரீதியாக ஆராய வழிகாட்டுவதுதான் சமூக விஞ்ஞானம். தனியே வர்க்கத்தை மட்டும் கொண்டு சமூக ஓட்டத்தை தனித்தனியாக ஆராய முடியாது. சமூக ஒழுக்கமைவுக்குள் இருக்கின்றவை தான் வர்க்கமாகும். வர்க்கங்களிடையே சமூக ஒழுங்கமைவு என்று வர்க்கத்தையும், வர்க்கப் போராட்டத்தையும் சடமாக பார்த்து ஆராய முடியாது. இதற்கு மொத்தத்துவம் - முழுமையான அணுகுமுறையைக் கொண்டது (holistic approach) தான் மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும்.

வர்க்கங்கள் என்பது சமுதாயப் பொருள் உற்பத்தி நடவடிக்கைகளில் மனிதப் பிரிவுகள் வகிக்கும் பாத்திரமாகும். உற்பத்தி சாதனத்தை உடமையாளராகக் கொள்ளும் முதலாளியும் உழைப்புச் சக்தியை விற்கும் தொழிலாளியும் உருவாகின்றார்கள். இதுதான் "இதுதாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறாகும். (ப.41.க.க.அறிக்கை) மனித சமுதாயம் வாழ வேண்டும் என்றால் உழைக்க வேண்டும்". வர்க்கங்கள் போரிடுகின்றன, சில வர்க்கங்கள் வெற்றியடைகின்றன, சில வர்க்கங்கள் ஒழிக்கப்படுகின்றன. இத்தகையது தான் வரலாறு. இத்தகையது தான் ஆயிரமாயிரம் ஆண்டுகால நாகரீகத்தின் வரலாறு. இந்தக் கண்ணோட்டத் திலிருந்து வரலாற்றை விளக்குவது சரித்திரவியல்-பொருள்முதல்வாதம், இந்தக் கண்ணோட்டத்துக்கு எதிராக நிற்பது சரித்திரவியல் - கருத்துமுதல்வாதம். (11.மா.மேற்கோள்கள்)

உடை, உணவு, உறைவிடம் இவற்றை பெற்று மனித சமுதாயத்திற்கான கௌரவம் வேண்டும். உழைப்பு சக்தியை விற்பதன் ஊடாகவே அது சாத்தியமாகும். தரப்படுத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், நிலப்பறிப்பு, வாழ்விடங்களில் இருந்து அவர்களை அகற்றி தமக்கான எல்லையைக் கொண்டதாக ஆக்கும் தாக்குதல் போக்கு, மொழியுரிமை என்பற்றின் ஊடாக கூட்டு உரிமை பறிக்கப்படுகின்றது. தேசம் என்ற சமூக ஒழுங்கமைவு சிதைவுக்குள் உள்ளாக்கப்படுகின்றதால் சமூகத்திற்கு நெருக்கடி தோன்றுகின்றது. சமூக ஒழுங்கமைவில் தேசியஇனம் முதலாளித்துவ கட்டத்தின் வளர்ச்சியே தேசமாகும். வர்க்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு என்று அணுகுவது குறிப்பானதில் இருந்து பொதுவை நோக்கிய அணுகுமுறை. மாறாக சமூக ஒழுங்கமைவு என்பது புறநிலையில் இருந்து சமூகத்தைப் பார்ப்பதாகும். உற்பத்தி முறையும் உபரி, பரிவர்த்தனை என்பன உற்பத்தி முறைகளை மாற்றியமைக்கின்றன. இவற்றில் ஏற்படும் வளர்ச்சியின் முரண்பாடுகள், நவீன காலத்தில் தேசிய சமூக ஒழுங்கமைவிலும் முரண்பாட்டை தோற்றுவிக்கின்றது.

இலங்கையர் என்ற தேசியம் என்பது லங்கா - என்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தினை அனுசரித்துச் செல்லும் - அடக்கிவிடும் பெருந்தேசியவாதம். அதனை மறுத்து பெருந்தேசியத்தின் கருத்தான இதுதான் இலங்கையர் தேசியம் என்று கூறுகின்றார்கள். எண்கணக்கை வைத்துக் கொண்டு தமிழர் ஒரு தேசம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை.

சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவதுடன் கூடியது. அது தேசத்திற்கு மட்டும் தான் உரியது. மாறான தேசிய இனங்கள் தேசமாக வளர அனுமதிப்பதும், வளர்வதற்கான சந்தர்ப்பம் கொடுப்படும் மார்க்சியம் வலியுறுத்துகின்றது. இலங்கையில் இரண்டு தேசங்களும் இரண்டு தேசிய இனங்கள் உள்ளது (அதாவது 4 தேசிய இனங்கள்) இங்கு மலையக, தமிழ் பேசும் முஸ்லீம்களின் உரிமையை எவரும் மறுத்துவிட முடியாது. அந்ததந்த தேசத்தினுள் வாழும் மக்களும் தமது ஆட்சியைக் அமைக்க சுயாட்சி வடிவங்கள் உருவாக்கிக் கொள்ள முடியும். ஆக தமிழ் பேசும்முஸ்லீம்கள் தமிழ் தேசத்திற்கு உட்பட்ட பகுதியிலும் லங்கா என்ற தேசத்தில் உள்ள முஸ்லீம்கள், மலையக மக்கள் சுயாட்சிப் பகுதியை பெற்றுக் கொள்ள உரிமை உடையவர்கள். தேசத்திற்கான அரசியல திகாரமும் தேசிய இனத்திற்கான சுயாட்சியும் ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டைத்தேசிய திரிபு

*"மேலும் சில கூற்றுக்கள்-*

*சுயநிர்ணய உரிமையை ஏற்பது-ஏற்காதது பற்றி...*

*யார் ஏற்றால் என்ன ஏற்காமல் விட்டால் என்ன தமிழ்மக்களுக்கு இயல்பாகவே சுயநிர்ணய உரிமை உண்டு. இதுதமிழ்மக்களுக்கு யாரும் யாசகம்-பிச்சை போடும் விடயமல்ல!*

*ஒடுக்கப்படும் தேசங்கள்-தேசிய இனங்களுக்கு தன் தலைவிதியை தானே சுயம் கொண்டு தீர்மானிக்கும் உரிமை உண்டு. இது அவைகளின் பிறப்புரிமை. இது யார் யாருக்கும் யாசகம் செய்வதும் பிச்சை போடும் கையேந்தல் நிலையும் அல்ல. இதுவே சுயநிர்ணய உரிமையின் ஆத்மார்த்த உயிரோட்டம் கொண்ட செல்தெறியாகும்.*

*பிரிவினையுடன் கூடியதுதான் மட்டும்தான் சுயநிர்ணயமல்ல, அதுவும் அதனுள் ஒன்று, பிரிவினையற்றவைகளும் உண்டு. இலங்கையில் ஒன்றாக இருந்த வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. இது வட-கிழக்கு மக்களின் சுயநிர்ணயத் தேர்வல்ல, பேரினவாத அரசின் தேர்வாகும்.*

*இனவாத காரிருள் மேகங்கள் சூழ்ந்துள்ள வடகிழக்கு மக்கள் மத்தியில் நிறைவான சுயம்கொண்ட (வட-கிழக்கு பிரிவினையா இல்லையா?) தேர்வை இன்று செய்ய முடியாது.*

*தவிரவும் கடந்தகால தமிழ்த் தேசியத்தின் வரலாற்றை உற்றுநோக்கின்... அது முஸ்லிம் மக்களினதும்-சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களினதும் சுதந்திரம் சுயாதிபத்தியம் சுயநிர்ணயம் என்பவற்றை ஏற்றதும் இல்லை அனுசரித்து சென்றதும் இல்லை.*

*இன்று கிழக்கில் மூவின மக்களும் சரி-சமனாக வாழ்கின்றனர். இங்கு இவ்மூவின மக்களுக்கான சுயநிர்ணய வகைபாகத்தின் வகைப்பட்ட தமிழ்த்தேசியத்தின் தீர்வு என்ன? சுயநிர்ணயம் சமன் பிரிவினை எனவே மூவின மக்களும் பிரிந்து போங்கள் என்பதா? எனவே சுயநிர்ணய வகைபாகத்தின் செல்நெறி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உயர்-இந்து-வேளாள கருததியலின் பாற்பட்டதாகவ ல்லாமல் எமது நாட்டின் ஸ்தூல நிலைமைக்கேற்ப பிரயோகிக்க- இது இரட்டைத் தேசியம்

நான்கு தேசங்களது உரிமை வென்றெடுக்கப்பட வேண்டியுள்ளது. சிங்களத் தேசமும் முப்பது வருட யுத்தத்தின் முடிவில் தனது சுயநிர்ணய உரிமையை இழந்துவிட்டுள்ளது. இதனைச் சம்பந்தப்பட்டவர்களும் உணரா வகையில் பறித்ததில் பிராமணிய உத்தி வியப்புக்குரியது. எமது பார்வை இந்திய மக்களது விடுதலையோடும் இணைந்ததாக வியாபித்தாக வேண்டியது. குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுவதை நாங்கள் குறைத்தால் நல்லது". (மேல் உள்ள கருத்துக்கள் முகநூலில் விவாதிக்கப்பட்டவை )

இலங்கையில் நான்கு தேசங்களாக இல்லை. நான்கு தேசிய இனங்களும் அவற்றில் வளர்ந்த தேசங்களாக சிங்கள, தமிழ் தேசமே உள்ளது. நான்கு தேசங்கள் என்பது திரிபுவாதமேயாகும். சிங்கள தேசம் தனது சுயநிர்ணயத்தை இழந்துள்ளது என்ற கூற்று என்பது அபர்த்தமானது. சிங்கள தேசம் அன்னியச் சக்திகளின் உதவியுடனும் உள்நாட்டில் இருந்த தரகு வர்க்க (தமிழ், முஸ்லீம்) த்தின் உதவியுடன் தமிழர் தேசத்தை முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதன் ஊடாக அன்னிய சக்திகளுக்கு சந்தையைக் கொடுக்காது போராடிக் கொண்டிருந்த தேசத்தை ஆக்கிரமித்து சந்தையை திறந்து விட்டுள்ளது. மேலும் சிங்கள தேசம் தனக்கான தனியாட்சிக் கொண்டதாக இருக்கின்றது. அந்த ஆட்சியதிகாரத்தை வைத்தே மற்றைய தேசிய இனங்களை ஒடுக்குகின்றது. இங்கு பொருளாதாரவாதத்தின் (சர்வதேச அளவில் பிரதான முரண்பாடு- அடிப்படை முரண்பாடு) அடிப்படையில் சிங்கள தேசம் சுயநிர்ணயம் இழந்ததாக கூறுகின்றார்கள்.

இந்தப் பகுதியில் வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் தாயகம் அங்கு முஸ்லீம்களின் தாயகமும் கூட அதேவேளை போராட்ட அமைப்பின் தவறையும் தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்தினையும் திரிப்பதையும் அவதானிக்கலாம். அதே போல சிங்கள குடியேற்றம் நடைபெற்றதையும் அது திட்டமிட்ட குடியேற்றம் என்பதை ஏற்க மறுப்பதையும் கவனிக்கப்பட வேண்டும். அதேவேளை தமிழர் தாயகத்தை துண்டாடும் உரிமையை யாருக்கும் உண்டு? இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் கடந்த 100 வருடங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் குடிசன மதிப்பீடு பற்றிய பிரஞ்ஞை இவர்களிடம் உள்ளதா? ஏன் இவர்கள் வசதியாக மறுக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிடம் ஜீவகாருண்யச் சிந்தனை இருக்கலாம், இவர்கள் உயர்வான சனநாயக வாதிகளாக இருக்கலாம். ஆனால் இங்கு முகவரி மாற்றப்படுவது ஒரு தேசத்தின் அடையாளம். குடிப்பரம்பல் திட்டமிட்டு செயற்பட்டதை நல்லெண்ணம் கொண்ட ஜீவகாருண்யவாதிகள் இலகுவாக மறந்து விடுகின்றார்கள்.

பலஸ்தீன வரலாற்றை எடுத்துக் கொண்டால் திட்டமிட்ட புதுக்குடியிருப்புக்கள் ஊடாக நிலங்கள் பறிக்கப்படுகின்றது. இஸ்ரேலிய சியோனிசவாதிகளின் செயற்பாட்டை அப்படியே பின்பற்றுகின்ற நிலைதான் தமிழ் தேசத்தில் சிங்கள தேசத்தினரால் மேற் கொள்ளப்படுகின்றது.

லங்கா என்ற சிங்கள தேசத்தில் ஜேவிபி போன்ற பெருந்தேசிவாதிகள் பிரசைகளுக்கான உரிமை பற்றிக் கதைக்கின்றார்கள். ஆனால் லெனியம் உரிமை கிடைத்த பின்னர் சேர்ந்து வாழ்வதைப் பற்றிப் பேசுகின்றது. இன்றைய சிங்கள தேச பெருந்தேசியவாதிகள் (நாவற்குழி குடியேற்றம் Assimilation - intergration-segregation போன்ற உலகக் போக்குகள் உள்ளது இல்லாதாக்கல், ஒதுக்கல், இணைந்துவாழ்வது -) இல்லாதாக்கல் நடைபெறும் காலமாகும். சோவியத் எங்கும் எவரும் வாழலாம் காரணம் அங்கு அனைவருக்கும் சுயநிர்ணய உரிமை இருந்தது. ஆனால் இலங்கையில் அப்படி இல்லை. சிங்கள தேசம் சொல்லும் எல்லோரும் எங்கும் குடியிருக்கலாம் என்பது ஆக்கிரமிப்பேயாகும். இவ்வாறான ஆக்கிரமிப்பை எதிர்ப்போரை இனவாதிகள் என்று திரிக்கப்படுகின்றது. ஒரு தொகுதி மக்கள் சிங்கள தேசத்தில் விரும்பியவாறு குடியேறி தனியாக பிரதேச அமைப்புக்களை உருவாக்கி விட முடியாது. ஏன் மலையக மக்கள் சொந்த நிலம், வீட்டுமனை போன்றவற்றிற்காக இன்னும் போராடுகின்றார்கள்.

"சுயநிர்ணய சுதந்திரத்தை, அதாவது பிரிந்து போகும் சுதந்திரத்தை ஆதரிப்போர் பிரிவினைவாதத்தை ஊக்குவிக் கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது விவாகரத்துச் சுதந்திரத்தை ஆதரிப்போர் குடும்ப பந்தங்கள் அழிக்கப்படுவதை ஊக்குவிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது போலவே முட்டாள்தானமானது, வஞ்சனையானது. பூர்ஷ்வா சமூகத்தில் பூர்ஷ்வா திருமண முறை சார்ந்து நிற்கும் தனியுரிமை மற்றும் ஊழல் நடத்தைகளைத் தாங்கி ஆதரிப்போர் எவ்வாறு விவாகரத்துச் சுதந்திரத்தை எதிர்க்கிறார்களோ அதே போல முதலாளித்துவ அரசில் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதானது, அதாவது தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையினை நிராகரிப்பதானது, ஆதிக்க தேசிய இனத்தின் தனியுரிமைகளையும் ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் தாங்கி ஆதரிப்பதே தவிர வேறெதுவுமல்ல." (தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை - பக்கம் 118-119) இதற்கு மாற்றாக சுயநிர்ணயம் என்பதே பிரிந்து போய் தனியரசு அமைப்பது தான் என்பதை ஏற்றுக் கொள்ளாது தமக்கு ஏற்ப திரிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் வர்ணாச்சிரமத்தின் ஆதிக்கத்தில் என்பது தமிழக- இந்திய சமூக அமைப்பில் இருந்து மாறுபட்டது. அதிலும் உற்பத்தியில் நிர்ணயம் செலுத்தும் நிலையில் ஈழத்தில் உடைக்கப்பட்டுள்ளததை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இங்கு சமூகச் சிந்தனைகளைப் போக்குவது பற்றிய பிரச்சனையில் அகமுரண்பாட்டை பிரதான முரண்பாட்டிற்று இணையாக நிறுத்துவது சமூக இயக்கப் போக்கினை மறுத்து நிற்கின்றது.

இரட்டைத் தேசியம் என்பது அடிப்படையில் இயங்கியல் மறுப்புக் கண்ணோட்டம் கொண்ட ஆய்வு முறையின் ஊடாக வந்தடைந்துள்ளது. அது சமூகத்தை அகநிலையில் இருந்து புறநிலையைப் பார்க்கின்றது. ஆனால் இயங்கியல் பொருள்முதல்வாதப் அணுகுமுறை என்பது புறநிலையில் (general to particular) இருந்து சமூகத்தையும், சமூகத்தில் இருந்து புறநிலையையும் ஆராய்கின்றது. அகநிலையை முதன்மைப்படுத்தி பொருளாதாரக் கட்டமைப்பை விளக்காது ஆராய முடியாது.

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் மென்மேலும் தமிழ் மக்களின் இறைமைக்கான போராட்டத்தினை சிதைப்பதில் அனைத்துப் பகுதியில் இருந்தும் தாக்குதல் வருகின்றது. இதில் குறிப்பான வாய்ப்பாட்டுவாதம் இடதுசாரிகளால் தொடரப்படுகின்றது. எழுக தமிழ் மீதான பாரம்பரிய இடதுசாரி அமைப்பின் கருத்தை இங்கு பார்ப்போம்.

**கேள்வி:**

தமிழ்மக்கள் பேரவை பெரும் எழுச்சி பேரணியையும் கூட்டத்தையும் நடத்தவுள்ளது. அதனை முன்னைய பொங்குதமிழ் நிகழ்வு போன்று நடத்தி தமிழ்மக்களை அணிதிரள வைத்து தமிழர் பிரச்சினையை உலகறியச் செய்யப் போவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

**பதில்:**

தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவூட்டுவதும் அதன் மூலமாக வெகுஜன போராட்ட எழுச்சித் தளத்துக்கு நகர்த்தி செல்வதும் அவசியமானதாகும்.. ஆனால் தமிழ் மக்கள் பேரவையானது எத்தகைய அறிவூட்டலையும் எழுச்சியையும் ஏற்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனிக்கின்றது என்பது கேள்விக்குரியதாகும். அறிவுபூர்வ அரசியல் அற்ற எழுச்சி என்பது குறுகிய இனவாத உணர்ச்சியூட்டலாகவும் பதவிகளை இலக்கு வைத்த செயற்பாடாகவே அமையும். அது ஒரு போதும் தேசிய இனப்பிரச்சினைக்கு சாதகமாக அமையாது. பதிலுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்திக் கொள்ளும்.அதனை யே இறுதி யுத்த சூழலுக்கு முன்பாக இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு ஒன்று .இரண்டு நிகழ்வுடன் காணமுடிந்தது. அதனின்று பட்டறிவு கொள்ளாது மீண்டும் பொங்கு தமிழ் எழுக தமிழ் என முழக்கமிடுவது தமிழ் தேசியவாத பிற்போக்கு தனமாகவே அமைந்து கொள்ளும். (தோழர் சி.கா செந்தில்வேல் -உ சாத்துணை இல.3) பாதகமான விளைவு என்ன? அது எவ்வாறுஅமையும் போராட்டம் என்பதே தவறா?

எழுக தமிழ் போன்ற நிகழ்வை புரட்சிகர கோசத்துடன் முன்வைத்திருக்க வேண்டிய பாட்டாளி வர்க்கத் தலைமையின் கடமையாகும். ஆனால் முற்போக்கு தேசிய சக்திகளை தலைமை தாங்க வேண்டும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இங்கு தனியே உணர்ச்சி ஊட்டுவதாகவும், தமிழ் தேசிய பிற்போக்குத் தனமானதாகவும், இனவாதக் கோசமாக தென்னிலங்கை இடதுசாரிகள் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

ஒடுக்கும் தேசத்தில் உள்ள இடதுசாரி களும் சரி, பாரம்பரிய இடதுசாரிகளும் சரி எழுக தமிழ் இல் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தக் கோரிக்கைகளை கூட மறுதலிக்கின்றார்கள். குட்டிமுதலாளிகளின் கோரிக்கையை இனவாதம் பேசுகின்றனர், மக்களை உறுப்பேத்துகின்றார்கள், மீண்டுமொரு முள்ளிவாய்க்காலுக்கு தயார் செய்கின்றார்கள் என்கின்றார்கள். மேற்கண்ட முத்திரை குத்தலின் ஊடாக குட்டிமுதலாளிய தமிழ் சக்திகள் வைத்த கோரிக்கையை மறைக்கின்றனர். எழுக தமிழ் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் நடைமுறை ரீதியாக போராடியாக வேண்டும் அல்லவா. மாறாக தமிழ் இனவாதம் என்றால் சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்புப் பற்றி பேசும் கடமையில் இருந்து தப்பிவிடலாம்.

இடதுசாரியத்தின் வாய்ப்பாட்டுவாதம் தொடர்ச்சியான ஒரு பெரும் இடையூறாக இருக்கின்றது. இடதுசாரிகளின் வாய்ப்பாட்டுவாதம் என்பது ஒடுக்குமுறையை எதிர்க் கொள்ளும் இளம் தலைமுறையிடம் இடதுசாரியத்தின் மீதான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகின்றார்கள்.

கடந்த காலத்திலும் இதே தவறுகள் இடம்பெற்றுள்ளது. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்களின் ஜனநாயகக் கட்டத்தை விளங்கிக்கொள்ளாது (தோழர் லெனின் வரைவை) "தமிழ் இளைஞர்கள் இதேவழியில் போய் இடதுசாரி சக்தியாக வளர்ந்து விடுவார்கள் என்று தூரநோக்கோடு கணிப்பிட்டது. கூட்டணி தான். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னணியே அதுதான். இனிமேல் சமஸ்டி என்றோ, பாராளுமன்றப் பாதை என்றோ, தமிழ் இளைஞர்களை வைத்திருக்க முடியாது. இந்த இடதுசாரிப் பக்கத்திற்குப் பால் வலுவான சக்தியாக வந்துவிட்டால் அது பெரிய ஆபத்து என்றதை உணர்ந்து தான், அவர்கள் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதை அவர்கள் கொண்டு வந்து உண்மையாக மனமுவந்து (தமிழீழத்தை வென்றெடுப்பதற்காக அல்ல. இளைஞர்களை இடதுசாரிப் பக்கம் போகாமல் திசை திருப்புவதற்காவே அந்தக் கோரிக்கையை கொண்டு வந்தார்கள்.

தமிழீழக் கோரிக்கை வைச்ச உடனேயே நாங்கள் அதை கடுமையாக எதிர்தனாங்கள். வட்டுக்கோட்டை மாநாடு இடம்பெற்ற இடத்தைச் சுத்தி சுவர்கள்ள சுலோகங்கள் எழுதினனாங்கள். கூஷதமிழ் முதலாளி தமிழீழம் கேட்கிறான் என்று தமிழீழத்திற்கு விரோதமான கோசங்கள் தான்" (ப. 20 சாதியப் போராட்டம் சில குறிப்புகள்) இதனைத் தொடர்ந்து தேசியக் கோரிக்கை வைத்தவர்களுக்கும் இடதுசாரி அமைப்புக்களிடையேயும் தமிழீழம் சாத்தியமா? சாத்தியமில்லையா? என்று பட்டிமன்றங்களும் நடைபெற்றன.

இதில் ஒரு வரலாற்று ஓட்டத்தைப் பற்றிய அரசியல் மதிப்பீடு என்பது முக்கியமானதாகும். இங்கு வட்டுக்கோட்டை தீர்மானம் என்பது இடதுசாரிகளின் பயத்தினால் ஏற்பட்டது என்பது தவறான அரசியல் மதிப்பீ. இவ்வாறே மலையத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது, நாடுகடத்தப் பட்ட விடயங்கள் என்பது இடதுசாரிகள் எழுச்சி பெற்றுவிடுவார்கள் என்ற காரணத்தினால் என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் மலையக மக்கள் பெரும் தொகையைக் கொண்ட தேசிய இனமாக வளர்ந்து விடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே இடம் பெற்றது 1915- 1958 வரையிலும் தொடர்ச்சியான தாக்குதல்கள் ஏற்பட்டுள்ளது. முஸ்லீம்கள் மீதான தாக்குதல், மலையாளிகளின் மீதான தாக்குதல், மலையக மக்கள் பின்னர் பூர்வீக தமிழர்கள் மீதான தாக்குதல்களாக வளர்ந்து வந்துள்ளது.

இதே காலத்தில் இளைஞர்களில் இடதுசாரியம் பேசியவர்கள் கூட தேசிய இனங்களின் தேசியக் கட்டம் பற்றிய குறை கொண்ட நிலை இருந்துள்ளது. இடதுசாரிய பின்புலத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சக்திகளின் தலைமையில் இயக்கங்கள் உருவாகியிருக்கின்றது. அன்றைய நிலையில் இடதுசாரிகளின் தவறான மதிப்பீட்டிற்கு மாற்றாகச் சிந்தித்துள்ளார்கள்.

பாரம்பரிய இடதுசாரிகள் சுயநிர்ணயம் என்றால் சமஸ்ரி, சுயாட்சி என்று விளங்கி வைத்திருக்கின்றார்கள். "சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாக ஜனநாயகத்தோடு மனித உரிமையோடு இணங்கப்பட்டதாக ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியை வென்றெடுப்பதற்கான உண்மையான சுயநிர்ணய உரிமைப் போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். அது முழு இலங்கை மக்களின் விடுதலையில் ஒரு பகுதியாக அமைய வேண்டும்". (ப. 33 சாதியப் போராட்டம் சில குறிப்புகள்) சுயநிர்ணயம் என்பது தனியரசு அமைப்பது தான் தான் சுயநிர்ணயம் என்ற லெனினிய வரையறையை திரிக்கப்படுகின்றது. சுயநிர்ணய உரிமை கிடைத்ததன் பின்னராக விரும்பிக் கூட்டாட்சியை ஏற்படுத்துவ என்பதும் சுயாட்சியும் ஒன்றல்ல. தமிழ் தேசம் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பில் இருந்து விடுதலையடைவது என்ற முதன்மைப் போக்கை மறுத்து முழு இலங்கை மக்களின் விடுதலையில் ஒரு பகுதியாக முன்னெடுக்கப் போவதும் லெனிய திரிபு கருத்தேயாகும். ஏனெனில் சுயநிர்ணயம் என்பது ஒடுக்கும் தேசத்தில் இருந்து அரசியல் வழியில் சுதந்திரமாக பிரிந்து போகும் உரிமை ஒன்றைக் குறிக்கிறது.

இந்த நாடுகளில் முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங்கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது. எல்லாக் காலனிகளுக்கும் நஷ்ட ஈடு இல்லாமல், நிபந்தனையற்ற வகையில் உடனடியாக சுதந்திரம் அளிக்க வேண்டும்- இந்தக் கோரிக்கையின் அரசியல் அர்த்தம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை- என்பதைக் கோருவதோடு சோஷலிஸ்டுகள் நின்றுவிடக் கூடாது. இந்த நாடுகளின் தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ- ஜனநாயக இயக்கங்களில் உள்ள அதிகப் புரட்சிகரமான சக்திகளுக்கு உறுதியான ஆதரவு கொடுக்க வேண்டும். தங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக அவைகளின் ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு அல்லது புரட்சிகரமான யுத்தத்துக்கு - அது ஏற்படுமானால்- உதவி செய்ய வேண்டும். (ப. 193 .இ.பா.வ.சா்)

தேசிய இனங்கள் ஜனநாயகத்திற்கான கட்டத்தை அடைய முற்படுவது தனிமனிதர்களின் சிந்தனையில் இருந்து அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நீங்களோ நானோ தடுத்து விறுத்திவிட முடியாது. 1922 களில் பொன் அருணாசலம் காலத்தில் இருந்த தலைமையை விட புதிய தலைமை 1949 இல் ஏற்படுகின்றது. இது பின்னர் 1977 க்குப் பின்னர் தேர்தல் பாதையை, சமரசவாதத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது. நாம் விரும்பி ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட வில்லை.

வளர்ந்து செல்லும் முதலாளித்துவமானது, தேசிய இனப்பிரச்சனையில் இரண்டு வரலாற்றுப் போக்குகளை அறிந்திருக்கிறது. ஒன்று- தேசிய இன வாழ்க்கையும் தேசிய இன இயக்கங்களும் துயிலெழுதலும், எல்லா விதமான தேசிய இன ஒடுக்குறைக்கும் எதிராய் போராட்டம் மூளுதலும், தேசிய இன அரசுகள் அமைக்கப்படுதலும், இரண்டாவது - எல்லா வடிவங்களிலும் தேசிய இனங்களிடையே ஒட்டுறவு வளர்ந்து மேலும் மேலும் துரிதமாதலும், தேசிய இனப்பிரிவினைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும், மூலதனத்தின் பொதுவாகப் பொருளாதார வாழ்வின், அரசியல் விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண்டாக்கப்படுதலும் இவ்விரு போக்குகளும் முதலாளித்துவத்துக்குரிய உலகம் தழுவிய விதியாகும். முன்னது முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பத்தில் ஆதிக்க நிலையில் உள்ளது. பின்னது முதிர்ச்சிடையடைந்து சோசலிச சமுதாயமாக உருமாற்றம் பெறுவதை நோக்கிச் செல்லுகின்ற முதலாளித்துவத்தின் இயல்பினை வெளிப்படுத்துவதாகும். (ப.32 - தே.இ.பா.வ.சர்)

முதலாளித்துவத்திற்கு முந்தைய கட்டத்தின் தன்மையைத் தனிப்படப் பெற்றிருக்கும் அரசு அமைப்பான ஆசிய பாணி கொடுங்கோன்மையை சிதைத்துக் கொண்டே முன்னேறி வருகின்றது. இதனால் நிலமானிய சமூக உறவுகள் சிதைக்கப்படுகின்றது. தனது உற்பத்திற்கேற்ற சமூக உறவும், புதிய வகை ஜனநாயக வடிவங்கள் தேவையாகின்றது.

தனிநாட்டுக் கோரிக்கை என்பதை பிரிவினைவாதமாகவும், முதலாளிகளின் கோரிக்கையாகவும் பார்ப்பது அபர்த்தமான கோட்பாட்டுப் புரிதலாகும். தோழர் லெனினுக்கும் தோழர் ரூசா லக்செம்பேர்கிற்கும் போலந்தின் சுயநிர்ணயம் பற்றிய கோட்பாட்டு பிரச்சனையில் எந்த நிலைப்பாட்டுப் படிப்பினையை மார்க்சியர்கள் விளங்கிக் கொண்டதாக இல்லை. பிரிந்து போகும் உரிமையை ஆதரிப்பது நீங்கள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பூர்சுவா தேசியவாதத்தை ஆதரிக்கின்றார்கள் என்று நம்மைப் பார்த்து கூறப்படுகின்றது. ரோசா லுக்சம்பர்க் இதைத் தான் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான நமது பதில் பின்வருமாறு- இல்லை, இப்பிரச்சனைக்கு செயல்பூர்வமாக தீர்வு காண வேண்டும் என்பது முதலாளி வர்க்கத்துக்குத் தான் முக்கியமானது. தொழிலாளர்க ளுக்கோ இரு போக்குகளின் கோட்பாடுகளையும் வேறுபடுத்தி அறிவதுதான் முக்கியதானது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் ஒடுக்குவோரை எதிர்த்து எந்த அளவுக்குப் போராடுகிறதோ அந்த அளவுக்கு நாம் அப் போராட்டத்தின் எல்லா நிகழ்வுகளையும் எப்போதும் வேறு எவரைக் காட்டிலும் அதிக உறுதியாகவும் ஆதரிக்கிறோம். ஏனென்றால் நாம் ஒடுக்குமுறையின் சிறிதும் விட்டுக் கொடுக்காத நிலையுறுதியுள்ள எதிரிகளாவோம். ஆனால் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் எந்த அளவுக்குத் தனது சொந்த பூர்சுவா தேசியவாதத்திற்குச் சார்பாக நிற்கிறதோ அந்த அளவுக்கு நாம் அதை எதிர்க்கிறோம். ஒடுக்கும் தேசிய இனத்தின் தனியுரிமைக ளையும் வன்முறையையும் எதிர்த்துப் போராடுகிறோம், ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தன் பங்குக்குத் தனியுரிமை கோரி நடத்தும் முயற்சிகளை எவ்விதத்திலும் அனுமதிக்க மாட்டோம்.

பிரிந்து போகும் உரிமை என்ற கோசத்தை நமது கிளர்ச்சியில் முன்னிறுத்தி ஆதரித்து பேசத் தவறுவோமேயானால் நாம் முதலாளி வர்க்கத்தின் பிடியில் தானே சென்று சிக்கிக் கொள்வோம் என்பது மட்டுமல்ல, ஒடுக்கும் தேசிய இனத்தின் நிலப்பிரபுக்கள் மற்றும் அதன் வரம்பிலாக ஆட்சியின் பிடியிலும் கூட தானே சென்று சிக்கிக் கொள்வோம். ரோசா லுக்சம்பர்க்குக்கு எதிரான இந்த வாதத்தை காவுத்ஸ்கியால் நெடுநாட்டிளுக்கு முன்னே பயன்படுத்தினார். இந்த வாதம் மறுக்க முடியாதது. போலந்தின் தேசியவாத முதலாளி வர்க்கத்தினருக்கு உதவக் கூடாதே என்ற கவலையில் ரோசா லுக்சம்பர்க் ருஸ்யாவின் மார்க்சியவாதிகளின் வேலைத் திட்டத்திலுள்ள பிரிந்து போகும் உரிமையை நிராகரிக்கிறார். அவ்வாறு செய்வது மூலம் அவர் உண்மையில் மகா ருஸ்ய கறுப்பு நூற்றவருக்கு உதவுகிறார். அவர் உண்மையில் மகாருஸ்யர்களின் தனியுரிமைகளை (தனியுரிமை களை விட மோசமானவற்றை) சந்தர்ப்பவாத நோக்கில் சகித்துக் கொள்வதற்கு உதவுகிறார். (101-102) (தே.இ.பா.வ.சர்) தேசியவாத முதலாளி வர்க்கத்தினருக்கு உதவக் கூடாதே இதே கூச்சலை ஜேவிபி தொடக்கம் பெரும்பான்மையான போலி இடதுசாரிகளிடம் இருந்து வரும் ஒப்புவிப்பாகும். இதில் தமிழ் முதலாளிகளுக்கு உதவுகின்றார்கள் என்ற பிரச்சாரம் என்பதையும் மறுபக்கத்தே சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பை பாதுகாக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பெருந்தேசியவாதம் பூர்சுவாத் தன்மையை விட நிலப்பிரபுத்துவத் தன்மை கொண்டது. இதனை ஆரிய- சிங்கள- பௌத்த பேரினவாதச் சிந்தனையுடன் ஒப்பிட்டு பார்க்க முடியும். சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் என்பது தென்னிலங்கைச் சக்திகள் வரலாற்றில் இருந்து கடன் தீர்த்துக் கொள்ளவில்லை. ஒடுக்கும் தேசத்தில் உள்ள இடதுசாரிகள் மார்க்சிய லெனினிய வழியை மறுத்தவர்களாகவே இருக்கின்றார்கள். தேசிய இயக்கங்களை ஏற்றுக் கொள்ளாத எந்த அமைப்பும் மார்க்சிய அமைப்புக்களாக இருக்க முடியாது. ஆனால் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு இருப்பது இடதுசாரிய அதிகாரத்தில், இடதுசாரிய ஆட்சியில் மாத்திரமே. நம்பிக்கையுடன் முன்வாருங்கள். கைகோர்த்துக் கொள்ளுங்கள் என சோசலிச ராச்சியத்திற்காக காத்திருக்கின்றார்கள்.

சிறிய நாட்டில் எவ்வாறு சுயநிர்ணயத்தைக் கொண்ட தனியரசை உருவாக்குவது என்ற வாதம் ஒரு வகையில் தாய்நாட்டைக் காப்போம் என்ற சுயநிர்ணயத்தை மறுக்கின்றனர். சாத்தியம், சாத்தியம் அற்றது என்பதைத் தீர்மானிப்பது கொள்கை, போராட்ட வடிவமும் அதனை பிற்பற்றும் மக்கள் கூட்டமும் தான் தீர்மானிக்க முடியும். சுயநிர்ணயத்திற்கு போராட வேண்டும் என்கின்ற சக்திகள் எவையும் மக்களை அணிதிரட்டிப் போராடவில்லை. இன்று தமிழ் தேசியப் போராட்டத்தை தலைமையேற்றுள்ள தரகு அணி சிதைப்பதை விட்டு அதற்கு மாற்றாக குட்டி முதலாளிய அணி சீர்திருத்தத்தையும் முன்வைக்கின்றது.

ஜனநாயகத்திற்கான போராட்டம் என்பது பின்னடைவிற்கு உள்ளாகியிருக்கின்றது. ஆனால் அது எந்தக் காலத்திலும் அவ்வாறு எழுச்சியை அடையாது என்பது அல்ல. முள்ளிவாய்க்கால் ஏன் ஏற்பட்டது என்று சுயஆய்விற்கு உள்ளாக்கிச் செல்கின்ற போதுதான் அடுத்த கட்டத்திற்கான போராட்டத்தில் வெற்றி கொள்ள முடியும். மாற்றம் ஒன்றே மாறாதது!

ஈழத்தின் அரசியலதிகாரத்திற்கான போராட்டம் அரசியல் பொருளாதார புறச்சூழலுக்கு ஏற்ப அந்தப் போராட்டம் முன்தள்ளப்படும். கடந்த காலத்தை வைத்துக் கொண்டு போராட்டம் என்பதே தேவையில்லை என்ற கற்பிதம், ஆக்கிரமிக்கப்பட்ட தேசம் என்ற அரசியல் மதிப்பீட்டினை திசைதிருப்பும் திரிபுவாதப் போக்கு எவ்விதத்திலும் சமூக மாற்றத்திற்கு உதவப் போவதில்லை. சமூக மாற்றம் என்பது அகநிலை தீர்மானிப்பது இல்லை. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிநிலையில் இருந்து மாற்றம் கொண்டுவர நினைப்பது என்பது மதவாதமே அன்றி அரசியல் விஞ்ஞானப் போக்கைக் கொண்ட பாதையல்ல. தனிமனிதருக்கான (பிரசை) சமவுரிமை என்பது நிகழும் சமூக அமைப்பில் எந்தவகையிலும் சாத்தியம் இல்லை. தனிமனிதர்களுக்கான சமவுரிமை என்பது முதலாளித்துவக்கட்டம், சோசலிசக் கட்டம் இவைகளை கடக்காது சாத்தியமில்லையாகும். சமூகம் வெவ்வேறு படிமுறை வளர்ச்சியின் ஊடாகவே முன்னேறிச் செல்கின்றது. அந்த வளர்ச்சி என்பது தனிமனிதர்களின் அரசியல் சிந்தனையில் இருந்து நடைபெறுவது இல்லை. சமவுரிமை என்பது தேசங்களுக்கானதே. தேசத்தின் அரசியலதிகாரத்திற்கான எழுச்சி என்பது பிற்போக்கானது என்றோ அல்லது முதலாளித்துவக் கோரிக்கை என்றோ அரசியல் மதிபீடு என்பது இயங்கியல் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய முதலாளிகள்

இரண்டாம் உலக போருக்குப் பின்னரான சர்வதேச நிலை என்பது வல்லரசுகள் தமது ஸ்ரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அதிகமாக இருந்தது. யுத்தத்தின் வீழ்ச்சியில் இருந்து எழுவதற்கு முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் தங்களிடையே பொருளாதார, இராணுவக் கூட்டுக்களை உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில் தேசிய இயக்கங்கள் கொலனித்துவத்திற்கு எதிராக உருவாகி வந்திருக்கின்றது. சோவியத் சமூகப் பொருளாதார அமைப்பு தனது குடிகளுக்கு அடிப்படை உரிமையை உறுதிப்படுத்தியிருந்தது. ஆனால் அவ்வான உரிமைகளை மேற்கில் சலுகையாக மாற்றிச் செயற்படுத்தினார்கள். இவ்வாறு சலுகை கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டிருந்தது. யுத்தம் என்பது அழிவுகளையும், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை என்பவற்றை சமாளிக்க வேண்டும் என்றால் மக்களின் தேவை குறைந்தபட்சமாவது உறுதிப்பட வேண்டியிருந்தது. 1990 களின் பின்னர் சமூக நல திட்டங்களில் பாரிய மாற்றத்தை மேற்குநாடுகளில் ஏற்படுத்திவிட முடிந்தது. மக்களின் உரிமையைப் பறித்துக் கொள்ள 1990 பின்னரான சோவியத் சிதைவு ஒற்றைத் துருவ அரசியல் போக்கு உதவியது.

உலக வல்லரசுகள் தமது முகாம்களை அமைக்க வேண்டிய கட்டாயம் இருந்திருக்கின்றது. மிகையுற்பத்திற்கான சந்தை கொள்ள மூன்றாம் உலக நாடுகள் என்பன மறைமுக ஆளுமைக்குள் கொண்டுவர இடையறாது செயற்பட்டு வருகின்றது. பழைய கொலனித்துவ நாடுகளில் கீழும், விடுதலைக்காய் போராடிய மக்கள் சோவியத் பக்கமும் நின்றிருந்தனர், 1950 உலகப் போக்கில் இலங்கை முதலாளித்துவ வர்க்கம் விருப்பியிருந்தது. இதில் அரசுடமையாக்கம் என்பன நடைபெற்றது. அன்றைய அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் வங்கிகளைக் கூட தேசியமயமாக்க வேண்டிய தேவை இருந்தது. முதலாளித்துவ பணஇயந்திரம் என்பது முதலாளித்துவ அதிகாரத்தின் கீழ் வந்தது கவனிக்கப்பட வேண்டியது. யுத்தத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த முதலாளித்துவத்தை மீள் கட்டியமைக்க வங்கி என்பது அவசியமாக இருந்தது.

அரச மயமாக்கல் என்பதே தேசியமாகவும், ருஸ்ய, சீன, இந்திய சார்பான நிலைப்பாடுகளே தேசியமாகவும், தேசியமுதலாளிகளாக கருதிக் கொண்டார்கள். தேசிய முதலாளிகள் என்ற வாய்ப்பாட்டுவாதமும், இலங்கைத் தேசியம் என்ற கற்பனைவாதம் போலிச் சுதந்திரத்தின் பின்னர் தொடங்கியது சந்திரிக்கா பண்டாரநாயக்க காலம் வரை வந்துள்ளது. இதில் முன்னைய போலி இடதுசாரிகள் தொடர்ந்தும் இனவழிப்பு யுத்தத்தினையும், பாசீச சிங்கள அரசியல் தலைமையையும் பாதுகாத்துக் கொண்டு வந்திருக்கின்றன.

போலிச் சுதந்திரத்தின் பின்னர் பௌத்த - சிங்கள தேசியவாதம் கூஷிதேசியமுதலாளிகள் என்ற கருத்துருவத்திற்கு பின்னால் அணிதிரட்டது. SWRD பண்டாரநாயக்காவினால் தொடங்கப்பட்டு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவினால் உச்சத்துக்கு வந்தது. 1972 இல் autonomous constitution என சுதேசியத்தை முன்னிறுத்திய அரசியமைப்பு என்று பிரகடனப்படுத்தியது. இதன் ஊடாக சோல்பரியாப்பு இன் 29 சரத்தில் இருந்த சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு இல்லாதாக்கப்பட்டது. அதில்

1. எந்த மத சமூக பிரிவினர்களினதும், சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடையூறுகளை விளைவிக்க கூடிய சட்டங்கள் எதையும் இயற்றக்கூடாது.

2. பிற சமூக பிரிவு மக்களுக்கு வழங்கப்படாத ஒன்று வேறு எந்த சமூக பிரிவு மக்களுக்கும் வழங்க கூடாது.

3. பிற மத பிரிவு மக்களுக்கு விதிக்கப்படாத தடைகளை வேறு எந்த சமூக பிரிவு மக்களுக்கும் விதிக்ககூடாது.

4. அரசியல் யாப்பில் மத சம்மந்தமான சட்ட விதிகளை திருத்துவதாக அல்லது மாற்றி அமைப்பதாக இருந்தால் அந்த மதத்தினை பிரதிநிதித்துவபடுத்துகின்ற தலைவர்களின் ஆலோசனையை பெற்ற பின்பே மாற்ற வேண்டும்.

இவைகள் அப்பாற்சென்று குடியேற்றங்கள் மேற்கொள்ளல், வாக்குரிமையைப் பறித்தது, தனது மொழிக்கு முன்னுரிமை கொடுத்தது, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கிடைத்தது மலையக தேசிய இனத்தின் வளர்ச்சியை மறுத்துக் கொண்டு குடியுரிமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறித்தது மாத்திரம் அல்ல. அவர்களை நாடு கடத்தி மலையக தேசிய இனத்தின் பரம்பலைச் சிதைத்தது. இன்றும் சிதைத்துக் கொண்டு வருகின்றது. இங்கு தேசியம் என்பது இலங்கைத் தேசியம் என்ற கற்பனைக் குதிரையில் இடதுசாரியம் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

ஐக்கிய இலங்கை என்றும் தேசிய முதலாளிகள் என்றும் சமரசவாதக் கோட்பாட்டினுள் செயற்பட்டு வந்த பாரம்பரிய இடதுசாரியம் தேசிய முதலாளிகளின் வழியை பிடித்துக் கொண்டு இடதுசாரிகள் இருக்க பௌத்த பெருந்தேசியவாதம் வளர்ந்து வந்தது. அதனைக் கவனிக்காது விட்ட இடதுசாரியம் என்பது இலங்கை என்ற நாட்டுப் பக்தியின் முதன்மை கொண்டது. தேசத்தினை எண்ணிக்கையின் அடிப்படையில் சிறுபான்மை என்று சொல்லிக் கொண்டு சமாந்திரமான தமிழ் தேசத்தினையும் முழுமையாக அடிமையாக்கியுள்ளது.

1956களில் அரசமயமாக்கப்பட்ட நிகழ்வு என்பது அதிகாரப் போட்டியில் ஏற்பட்டதின் விளைவாகும். ஐ.தே. கட்சியை விட சு.கட்சி தான் பௌத்த விசுவாசி, அரசமயமாக்கல் என்ற போட்டியுடன் கூடிய அரசியல் மாற்றங்களும் அடங்கியதுதான். குடியரசாக 1972 பின்னர் வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

அன்றைய உலக ஒழுங்கில் தம்மை ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக காட்டிக் கொள்வதும், அணிசேரா நாடுகளில் அங்கம் வகித்ததும், ஆளும் வர்க்க நலனையே பாதுகாத்து நின்றிருக்கின்றது. தேசிய முதலாளிய போக்கு என்று கொள்ளப்பட்ட SWRD பண்டாரநாயக்க. தான் முன்னர் வைத்த சமஸ்ரிக் கோரிக்கையை கைவிட்ட நிகழ்வு என்பது சிங்கள பௌத்த பெருந்தேசிய நலனுக்கு உட்பட்டதுதான். இலங்கை தேசியம் என்று ஒன்றை சமஸ்ரி ஊடாக கட்டமுடியாது. சிங்கள தேசம் தனக்கான ஆட்சியுரிமையை பெற்றிருந்த காரணத்தினால் அங்கு கண்டி, கரையோரச் சிங்களவர்கள் என்ற பிராந்தியப்பாடு என்பது வர்க்க அணிகளாகவும் அதிகார மையங்களாகவும் மாறியிருந்தது.

இவர்தான் பௌத்த சங்கத்திற்கு கொடுத்த உறுதிமொழிக்கமைய சிங்களம் மட்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். பூர்சுவாச் சிந்தனையை விட நிலமானியச் சிந்தனையும், பௌத்த பெருந்தேசியச் சிந்தனையை புறந்தள்ளிவிட்டுச் சிந்தித்த ஆட்சியாளர்கள் இல்லை எனலாம்.

இலங்கை இடதுசாரிகள் தேசிய முதலாளிகள் ஒன்று இருப்பதாக கற்பனை செய்து கொண்டார்கள் என்றுதான் மதிப்பீடு செய்ய முடிகின்றது. சீனத் தலைவர் தோழர் மாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பானியர்களின் ஆக்கிரமிப்பு எதிராக போராடிய சீனத்தில் ஆட்சித் தலைவராக இருந்த சியாக்காய் சேக்குடன் ஐக்கிய முன்னணி அமைத்து சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடினர். இங்கு அன்று யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடிய ஆட்சியாளர்களுடன் நிலையில் அவர்களை தேசிய முதலாளிய வர்க்கப் பிரிவு என்று வரையறுத்திருந்தார். அதில் பூர்சுவா தேசியவாதிகளின் நலன்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதை வரையறுத்துக் கொள்கின்றார். அன்றைய சீன தந்திரோபாய நிர்ப்பந்தம் என்பது யப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட வேண்டிய நிலையில் வகுக்க வேண்டியிருந்தது. ஆனால் இலங்கையில் அவ்வாறு நேரடி ஆக்கிரமிப்பு யுத்தத்திற்குள் ஈடுபட்டிருக்கவில்லை. இந்த அரசியல் சூழலில் இடதுசாரியம் மற்றவர்கள் நிழலில் தங்கியிருக்க வேண்டியதில்லை. மேலும் புதிய ஜனநாயக மார்க்சிய லெனினியக் கட்சி, விடுதலைப்புலிகள், ஜேவிபி, பிரேமதாசா இந்திய ஆக்கிரமிப்புக்கெதிராக ஒரு ஐக்கிய முன்னணி உருவாக்கப்படவில்லை என்றாலும் எதிர்த்தார்கள். (கட்டுரைக்கு பொருத்தம் இல்லையென்பதால் விடுதலைப்புலிகள் பிரேமதாசா உடன்படு பற்றி இங்கு விவாதிக்கவில்லை. ஆனாலும் முழு இலங்கைக்கு எதிரான இந்திய இராணுவப் பிரசன்னமாக கொள்ளும் இடத்தில் இவ்வகையான முரண்பட்ட சக்திகள் பொது எதிரிக்காக திரள்வது தவிர்க்க முடியாத தந்திரோபாயப் பிச்சனையே.)

"முதலாளித்துவ இயல்புகள் சிலவற்றை கொண்டவராக நிலப்பிரபுக்கள் பல யப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கான தமது ஆவலைச் சிறிது வெளிப்படுத்தினர். ஆகவே யப்பானுக்கு எதிரான பொதுப் போராட்டதில் நாங்கள் அவர்களுடன் ஐக்கியப்பட வேண்டும் என்றார். மேலும் பிரதான எதிரிகளாக என்று வரையறுக்கும் போது ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் அதாவது ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பூர்சுவா வர்க்கமும் நமது நாட்டிலுள்ள நிலப்பிரபுத்துவ வர்க்கமேயன்றி வேறு எதுவுமல்ல. ஏனென்றால், தற்போதைய கட்டத்தில் இவையிரண்டுமே பிரதான அடக்குமுறையாளராகவும் சீன சமுதாயத்தின் முன்னேற்றத்தின் பிரதான முட்டுக்கட்டைகளாகவும் இருக்கின்றன. சீன மக்களை அடக்க இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று கூட்டுச் சேர்ந்து கொள்கின்றன. அவற்றில் ஏகாதிபத்தியத்தின் தேசிய அடக்குமுறை மிக்க இன்னால் விளைவிப்பதாயிருப்பதால் ஏகாதிபத்தியமே சீன மக்களின் முதன்மையான எதிரியாகவும் மிகக் கொடிய எதிரியாகவும் விளங்குகின்றது". (ப28 சீ.பு.சீ.க.கட்சியும்) ஆக இங்கு ஒரு நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பான சூழலுக்கான பிரதான முரண்பாடு அடிப்படை முரண்பாடு மாறுபடுகின்றது. இவ்வாறு இருக்கின்ற போதும்

அனைத்து நாட்டுத் தொழிலாளிகளும் ஒரேவிதமான நலன்களையும், ஒரே விதமாக எதிரியையும் கொண்டுள்ளார்கள். மேலும் ஒரே விதமான போராட்டத்தை அவர்கள் நடத்த வேண்டியுள்ளது என்ற பொதுவிதியை சீனத்தின் யுத்த தந்திரமாக கொள்ள முடியாது. இவ்வாறே பெருந்தேசியக் கட்டமைப்புக்கள் இருந்து கொண்டு தேசத்தின் சமவுரிமை பேசுவதாகும். இதேவேளை ஏகாதிபத்தியங்களின், இந்திய ஆக்கிரமிப்பு நேரடி யுத்த முனைக் களம் முன்னர் இருந்தது இல்லை.

ஆனால் இலங்கையில் ஆட்சியாளர்கள் எவரும் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக இருந்திருக்கவில்லை. அவர்களின் அரசியல் என்பது ஏகாதிபத்திய பிராந்திய நலன்களுக்கு இடையில் ஆட்சி அமைப்பை பாதுகாப்பதாகவே இருந்து வந்துள்ளது. இலங்கை பொதுநலவாய நாட்டில் ஒரு அங்கத்தவராக இருந்துள்ளது.

சிங்கள சொத்துடமையாளர்கள், தேயிலைத் தோட்ட முதலாளிகள் என இருந்துள்ளார்கள். இவர்களில் சாராய உற்பத்தியினால் உருவாக பணக்காரர்களும் இருந்துள்ளார்கள். குடாநாட்டில் சிறு விவசாயிகளின், குத்தகை விவசாயிகளின் புகையிலைப் பயிர், வெங்காயம் பயிரிட்டனர். கிழக்கில் போடியார்கள் நிலத்தை அதிகமாய்க் கொண்ட பெரிய விவசாயிகள் இருந்துள்ளனர். இந்தியாவைப் போல பெரும் நிலவுடமையாளர்கள் இருந்ததில்லை. எனினும் சுயசார்பு பொருளாதாரத்தினால் குடாநாட்டு விவசாயிகள் பலனடைந்தனர்.

1972 களில் உள்ளூர் உற்பத்திக்கான பொருளாதாரத் திட்டத்தை மேற்கொண்ட போதிலும் அரசியல்யாப்பு மாற்றம் செய்யப்பட்டது. இலங்கையர் தேசியம் என்பதை சிதைத்துக் கொண்டே சிங்கள பௌத்த பெருந்தேசியம் தமது இருப்பை உறுதி செய்தது. இந்தக் காலத்தில் போலி இடதுசாரிகள் தேசிய முதலாளிகள் என்ற மயக்கத்தில் இருந்து கொண்டிருந்தார்கள். திரிபுவாத இடதுசாரிகள், லங்கா சுதந்திரக்கட்சி ஆகியன சிங்கள தேசியத்தினை உயர்த்திப் பிடிந்திருந்தார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வர்க்க ஆணிவேரை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். 1956- 1972 இடைப்பட்ட கால ஆட்சிகளில் இடம்பெற்ற விடயங்கள் தமிழ் தேசிய இனத்தின் மீதான பெரும் தாக்குதல் நடைபெற்றுள்ளது. 2015 தேர்தலின் பின்னர் வெவ்வேறு வர்க்கக் கூறுகளில் உள்ள மாறுபாடுகளை பிரதானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாது அனைத்து ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள் ஏகாதிபத்திய நிகழ்ச்சிக்கு ஏற்ப செயற்படும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. முன்னர் வெவ்வேறு வர்க்கக் கூறுகளாக இருந்தவர்கள் இன்றைய நிதிமூலதனத்தின் ஓட்டத்தில் அவைகள் அவசியமற்றதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் பற்றியதே

*1956 இல் புதிய சட்டத்தின் மூலம் மொழியின் மூலம் அதிகாரத்தை நிறுத்துயிருக்கின்றது.* (The Sinhala Only Act> formally the Official Language Act No. 33 of 1956> was an act passed in the Parliament of Ceylon in 1956!) *அரச அதிகாரத்திலிருந்து தமிழை அகற்றி முழுமையாக தனதாக்கிக் கொண்டது. ஆனால் இதே காலத்தில் இந்தியை அகற்றி தமிழகத்தில் ஆட்சி மொழியாகக் கொண்டது. இன்று மறுபடியும் சமஸ்கிருத்தை ஆட்சிமொழியாக்க இந்தி- இந்துத்துவ மேலாதிக்கம் முனைகின்றது. ஆனால் மொழியுரிமையை ஆதரிக்க வேண்டியவர்கள். இவ்வாறு கருதுகின்றார்கள. 1786 முதல் 1956 வரை ஆங்கில மொழியால் இலங்கை ஆளப்பட்டது. அரச சேவையில் இருந்த தமிழ் மாத்தையாமார் ஆங்கில மொழியை வைத்து ஏழைச் சிங்கள மக்களை வெருட்டி வாழ்ந்தார்கள். சிங்கள, மக்கள் மத்தியில் வேலை செய்யும் அரச சேவையாளர்கள் ஆங்கில மொழிக்குப் பதிலாக சிங்கள மக்களின் மொழியைத் தெரிந்திருக்க வேண்டும் என்றால் என்ன பிழை? ரொட்கியச், வாய்ப்பாட்டுவாத, அடையாள அரசியல் சிந்தனை முறையாகும்.*

*மொழிக் கொள்கை பற்றிய நிலையில் தனிமனிதர்கள் எத்தனை மொழியையும் கற்றுக் கொள்ள முடியும். அது தனிமனிதர்களின் தெரிவிற்கு உட்பட்டதாகும். ஆனால் ஒரு தேசிய இனத்தின் மொழிக் கொள்கை என்பது வேறானதாகும். ஒரு தேசிய இனத்தின் மொழிக்கு மாற்றான எந்த மொழியைத் திணித்தாலும் அது அடக்குமுறையின் அம்சம்தான். இந்த மொழி என்பது ஆங்கிலமோ, இந்தியோ அல்லது சிங்களமாக இருந்தால் என்ன அது திணிப்புத் தான். சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்த நாம் மேற்குநாடுகளில் பலமொழிகளைக் கற்றுக் கொள்வது தனிமனிதத் தெரிவிற்கு உட்பட்டதாகும். ஆனால் ஒரு தேசியஇனத்தின் மீது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுக்கப்படும் திணிப்பை எதிர்ப்பது ஜனநாயக உரிமையாகும். இன்னொரு தேசத்தின் மீதான ஆக்கிரமிப்புச் சார்ந்ததாகும்.

அரசியல் மதிப்பீடு செய்கின்ற போது அரசு என்றால் என்னவெனவும் முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டும் தேசிய இனவெடுக்குமுறைய அரசியல் ரீதியாக உள்ளார்ந்த நோக்கில் விளங்கிவிட முடியாது. நாகரீகச் சமுதாயம் பகை வர்க்கங்களாய், சமுதாயம் பிளவுண்டுவிட்டதென்ற உண்மையைக் கண்ணில் படாதபடி மூடிமறைத்து சாதாரண மனிதனைத் தூக்கத்தில் இருந்த இது பயன்படுத்துவதாகிவிடுகின்றது. (ப15 அரசும் புரட்சியும்) அரசு தன்னை நடுநிலையாளனாகக் காட்டி அரசாங்கம், நீதிமன்றம், சட்டம், பொலிஸ் என்பதன் ஊடாக மக்களை அடக்குகின்றது. "ஜனநாயகம் என்பதே அரசு" தனக்குத் தேவையானதை நிறைவேற்றிக் கொள்வது முதலாளித்துவ சமூகத்தில் ஒடுக்குமுறையை அதிகப்படுத்தும் அரசுவமாக பலம் பெறுகின்றது. இவ்வாறே மொழி ஆட்சிப்பீடத்தில் வந்த பின்புலத்தை அறியமுடியும். தனது மொழிக்கு முக்கிய அந்தஸ்து என்பது மட்டுமல்ல அதிகாரத்தையும் நிலை நிறுதியது. ஆக மற்றைய தேசிய இனத்தின் ஆட்சியதிகாரம் இல்லாதாக்கப்பட்டது. (முதலாளிகள் தான் சுரண்ட சந்தர்ப்பம் கேட்கின்றார்கள் என்ற வாதத்தை பொருத்திப் பார்க்க) முதலாளித்துவ ஜனநாயகம் என்பதை "ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்த பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகின்றார்கள் என்று கூறினார்". (மார்க்ஸ்- ப 125 அரசும் புரட்சியும்) இங்கு ஒரு தேசத்தின் அரசு அது மற்றைய அரசின் மீது ஒடுக்குதலை மேற்கொள்கின்றது. தனது அரசிற்கான அதிகாரங்களை ஆணையில் வைக்கின்ற போக்கை கவனிக்காது சென்றுவிட முடியாது. இன்றைய நிலையில் அதிகாரம் கொண்ட சிங்கள தேசத்தின் அரசியல் கொள்கைகள் என்பதை ஜீவகாருண்யச் சிந்தனையில் இருந்து அறிந்துவிட முடியாது.

புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றில் சிறுமுயற்சியாளர்கள் பலர் உள்ளார்கள். அவர்கள் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள், சிறுமுயற்சிகள் என்று வளர்ந்திருக்கின்றார்கள். இவர்கள் புலம்பெயர்ந்தது தான் காரணம் என தட்டையாக பார்க்க வேண்டிய தில்லை. ஈழத்தில் சமூக அவசியம் என்பது இருந்துள்ளது. அந்த வேளையில் இலங்கை அரசியல் அமைப்பிற்குள்ளும், சொந்த தேசத்திலும் அடைய முடியவில்லை. தேசத்தில் உள்ள முதலாளிய வர்க்கம் வளர்வது என்பது சகஜனமாதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானதும் ஆகும். இன்று தமிழ் தேசத்தில் மூலதன வளர்ச்சியை திட்டமிட்டு மறுத்து வருகின்ற நிகழ்வைக் கடந்து சென்று விடமுடியாது. தமிழ் முதலாளிகள் தமிழீழம் கேட்கின்றார்கள் என்ற வாய்ப்பாட்டுவாதம் இது எதிர்ப்புரட்சிகரமான வாதமாகும். தொழிற்துறை வளர்ச்சியைக் கொள்வது தமிழ் தேசத்திற்கு மாத்திரம் அல்ல. அனைத்து தேசிய இனங்களுக்கும், தேசங்களுக்கும் அவசியமானதாகும். தொழிற்துறை வளர்ச்சியில் லாது சோசலிசக் கட்டத்திற்கு அடைந்துவிட முடியாது. தமிழர்கள் அதிகாரம் கோருகின்ற போது மறுபக்கத்தே சிங்களவர்கள் அதிகாரத்தை வைத்திருக்கின்றார்கள். இந்த அதிகாரத்தை தமக்கும் தேவை என்கின்ற போது மறுக்கப்படுகின்றது. ஒரு தேசிய இனம் ஆட்சியதிகாரம் என்பதை முதலாளியமாக குறுக்கிவிடும் திரிபுவாதமாகும். சிங்கள தேசத்தின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு மற்றயதை மறுப்பது தொடர்கின்றது.

*2015* தேர்தலின் பின்னர் இலங்கை வரலாற்றில் அரசாங்கத்தை எதிர்க்கப்போவதில்லை எனக் கூறிய முதலாவது எதிர்க்கட்சி தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப குரல் எழுப்புகின்றார். ஆளும் வர்க்கமாகவும், எதிர்க்கட்சியாகவும் தரகு வர்க்கத்தினை ஆட்சியில் இருந்தி நிதிமூலதனத்தின் சேவகம் செய்ய தமிழ் தேசத்தின் உரிமையை விலை கொடுக்க வேண்டிய நிலைதான் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இருக்கின்றது.

விடுதலை அமைப்பின் வீழ்ச்சியின் பின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்ட தரகு அணியின் நம்பிக்கை பற்றிய பிரச்சனையாகும். தமிழர்களாக மட்டும் காட்டுவதால் சமூகத்திற்கு இந்த தரகு அணியின் வர்க்கக் குணாம்சம் வெளிப்படப் போவதில்லை. எனவே தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்காக போராடுவதாக பாசாங்கு காட்டும் தரகு அணி என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவதன் ஊடாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பித்தலாட்ட அரசியலை அம்பலப்படுத்த முடியும். த.தே. கூ என்பது தமிழ் மக்களை தலைமை தாங்கும் தகுதியற்ற ஒரு ஏவளாளிகள் தான். தரகு அணிதான் 1915களில் இருந்து 1983 வரையிலும் இருந்துள்ளது. இதன் பின்னர் இளைஞர்களின் ஆயுதங்களுக்கு கீழ்பட்டே 2009 வரை இருந்துள்ளது.

தேசிய இனங்கள் தேசமாக வளர்தென்பதை மறுக்கின்ற போக்கு எப்பொழுதும் நிரந்திரமானதல்ல. ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசிய இனங்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகின்ற போது என்றோ ஒரு நாள் மறுபடியும் வீரியமாக எழும். ஆனால் இன்று சமரசவாதிகளும், அன்னிய சக்திக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகம் செய்யும் தரகு அணிதான் அரசியல் அதிகாரத்தில் இருக்கின்றார்கள்.

இவர்களை இட்டு தோழர் லெனின் "சமூகப் புரட்சியின் பெயரால்" தேசியப் பிரச்சனையை "மறுத்துப் பேசிய" புரூதோன்வாதிகளுக்கு மாறுபட்ட வகையில் மார்க்ஸ் வளர்ச்சியடைந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு முதலிடம் கொடுத்து, மற்ற தேசிய இனங்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துகின்ற எந்தத் தேசிய இனமும் சுதந்திரமாக இருக்க முடியாது என்ற சர்வதேசியவாதம் மற்றும் சோசலிசத்தின் அடிப்படையான கோட்பாட்டை முன்னால் வைத்தார். ஜேர்மானியத் தொழிலாளர்களின் புரட்சிகரமான இயக்கத்தின் கருத்து நிலையிலிருந்து தான் ஜேர்மனியில் வெற்றியடைகின்ற ஜனநாயகம் ஜெர்மானியர்களால் ஒடுக்கப்பட்டிருக்கும் தேசிய இனங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்படுமென்று அறிவிக்க வேண்டும், சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று மார்க்ஸ் 1848ம் வருடத்தில் கோரினார். இங்கிலாந்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் புரட்சிகரமான போராட்டத்தின் கருத்துநிலையிருந்துதான் மார்கஸ் 1869ம் வருடத்தில் அயர்லாந்தை இங்கிலாந்திலிருந்து பிரிக்க வேண்டும்என்று கோரியதோடு "பிரிவினைக்குப் பிறகு கூட்டரசு ஏற்பட்டாலும் கூட" என்று சேர்த்துக் கூறினார். இந்தக் கோரிக்கையை முன்வைத்ததன் மூலமாக மட்டுமே மார்க்ஸ் இங்கிலாந்தின் தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே சர்வதேசியவாத உணர்ச்சியைக் கற்பித்தார் எனலாம். இந்த வழியின் மூலமாக மட்டுமே சந்தர்ப்பவாதிகளுக்கும் முதலாளித்துவச் சீர்திருத்தவாதிகளுக்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட வரலாற்றுக் கடமைக்குப் புரட்சிகரமான தீர்வை வைக்க முடிந்தது (இன்று, அரை நூற்றாண்டுக்காலமாகிய பிறகும் கூட இந்த ஐரிஸ் "சீர்திருத்தத்தை" அவர்கள் நிறைவேற்றவில்லை). சிறு தேசிய இனங்களுக்குப் பிரிந்து போகும் உரிமை என்பது கற்பனாவாதமானது, காரியசாத்தியமற்றது, பொருளாதாரக் குவிப்பு மட்டுமல்லாமல் அரசியல் குவிப்பும் முற்போக்கானதே என்று மூலதனத்திற்குப் பரிந்து பேசுபவர்களுக்கு மாறான வகையில், இந்தக் குவிப்பு ஏகாதிபத்தியமாக இல்லாதிருந்தால்தான் அது முற்போக்கானது, தேசிய இனங்களைப் பலாத்காரத்தின் மூலமாக ஒன்றுசேர்க்கக்கூடாது, எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரும் சுதந்திரமாகச் சேருவதன் மூலமாகவே அமை ஒன்று சேர்க்கப்பட வேண்டும் என்று இந்த வழியின் மூலமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சினால் எடுத்துக்கூற முடிந்தது. தேசிய இனங்களின் சமத்துவமும் சுயநிர்ணயமும் பேச்சளவில் பெரும்பாலும் போலியான வகையில் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டு வந்ததற்கு எதிர்ப்பாக தேசியப்பிரச்சனைகளின் தீர்விலும் கூட பெருந்திரளான மக்களின் புரட்சிகரமான நடவடிக்கையை மார்க்ஸ் வலியுறுத்துவது இந்த வழியின் மூலமாகவே முடிந்தது. 1914- 16ம் வருடங்களின் ஏகாதிபத்திய யுத்தமும் சந்தர்ப்பவாதிகள் மற்றும் காவுத்ஸ்கிவாதிகளினுடைய போலித் தனம் என்கின்ற அவுகியஸ்குதிரை லாயங்களை (கிரேக்க காவியத்தில் வரும் குதிரை) அது அம்பலப்படுத்தியிருப்பதும் மார்க்சினுடைய கொள்கையின் சரியான தன்மையைக் குறிப்பிடத்தக்க விதத்தில் நிரூபித்திருக்கின்றன, வளர்ச்சியடைந்த எல்லா நாடுகளுக்கும் மார்க்சினுடைய கொள்கையே முன்மாதிரியாகப் பயன்பட வேண்டும். ஏனென்றால் அந்த நாடுகள் அத்தனையுமே இன்று மற்ற தேசிய இனங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கின்றன. (பா.வ. சர்வதேசியவாதம் 213)

இலங்கையின் தேசிய இன முரண்பாட்டில் தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தி அழிக்கும் நோக்கம் தமிழ் தேசத்தின் ஆட்சியுரிமையைப் பற்றிக் கதைப்பவர்களின் நோக்கமாம். ஆனால் எதிரிகளைத் தனிமைப்படுத்தும் நோக்கம் இடதுசாரிகளினதாம் என்ற வாய்ப்பாட்டு வாதம் என்பது சமூகத்தின் வளர்ச்சிப் போக்கை கண்டு கொள்ளாததன் வெளிப்பாடாகும். ஒரு கட்சியானது தனது திட்டத்தில் சுயநிர்ணயம் உரிமையை முன்வைக்க வேண்டும். எந்தக் காரணமும் கொண்டும் கட்சி கொள்கையை மறைக்க முடியாது. தமிழ் தேசத்தின் ஆட்சியுரிமை வலியுறுத்தினால் தமிழ் மக்களை தனிமைப்படுத்தி அழிக்குமாம். சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனைக்கு அப்பால் சிந்திக்கும் ஆட்சியதிகாரக் கட்டமைப்பும், தேசிய இனச் சார்பற்ற நிறுவனக் கட்டமைப்பு இருப்பது போல பாவனை செய்யப்படுகின்றது.

இவர்கள் லங்கா என்பது ஒரு நாடு- ஒரு தேசம்- என்பது சிங்களவருக்குரிய நாட்டில் பௌத்தம் பிரதானமானதும், சிறப்பு அந்தஸ்தும் கொண்ட மதமாகும். எங்கு அரச மரம் காணப்படுகின்றதோ அங்கே புத்தர் சிலை வைக்கும் தீவிர வெறி கொண்டதாக உருப்பெற்றுள்ளது.

ஒரு புரட்சிகரக் கட்சி பெருந்தேசிய உணர்விற்கு பணிந்து போக வேண்டும் என்று எதிர்பார்க்கும் நிலை இருந்திருக்கின்றது. 2016 ஆண்டு வத்திக்கானில் இருந்து போப் இலங்கை வந்தார். அப்போ அவரை நாடாளுமன்றத்தில் அழைத்திருந்தார்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பில் பௌத்த பிரதான குருமார் அவர்களின் விசேட இருக்கையில் இருந்தவாறே கத்தோலிக்க தலைவர் போப்பினை வரவேற்றுக் கொண்டார்கள். இவ்வாறே பௌத்த குருமாருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பௌத்த மதச் வழக்கம், மதச் சுதந்திரம் என்பது ஒரு விடயம். ஆனால் சமூகத்தின் நல்லுறவு பற்றிச் சிந்திக்கின்ற போது சிக்கலுக்குரிய பெரும் மதில் இருக்கின்றது. ஒரு இறுக்கமான சிந்தனைக் கட்டமைப்பை உடைக்காது சமூகம் முன்னோக்கிச் செல்ல முடியாது. இதையே வரலாற்றுப் பின்னோக்கிப் பார்க்கின்ற போது தொடர்ச்சியாக வரலாற்று எங்கும் தொடர்கின்றது.

சிங்கள பேரினவாத கட்டமைப்புச் சிந்தனையானது ஆரிய இனப்பெருமையுடன் கூடியதாகும். 1948 பின்னரான அரசியல் வெளிப்பாடு சிங்கள பௌத்த பேரினவாதமாகவே இருந்து வருகின்றது. தமிழ்தேசத்தின் ஆட்சியதிகாரத்தையும், அடையாளத் தையும் அழிப்பதை தொடர்ந்து செய்து வருகின்றது. இங்கு ஏதோ தமிழ் மக்கள் தான் சிங்கள மக்களுக்கு பேரினவாதத்தை கற்றுக் கொடுப்பதாக கற்பிதம் செய்யப்படுகின்றது. 1969 வருட போயா தினத்தை முன்னிறுத்தி தொழிலாளர் தினத்தைக் கொண்டாட தடைவிதிப்பதாக அன்றைய அரசு அறிவித்திருந்தது. இந்தச் செய்தி உழைக்கும் வர்க்கத்தினர் என்ற வகையில் சிங்கள பௌத்த தொழிலாளர்கள் இதற்கான எதிர்ப்பியக்கத்தினை செய்யவில்லை. ஆனால் தோழர் சண்முகதாசன் நடத்தினார். இது கட்சி என்ற வகையிலும் ஒரு பௌத்த மக்கள் விரோதக் கட்சி என்ற கருத்தை இதன் மூலம் மக்கள் மத்தியில் எதிரிகள் பரப்ப வசதியாயிற்று (24.க.இ. தோழர் சண்முகதாசன்) இந்த வரலாற்று நிகழ்வு எதனைக் காட்டுகின்றது என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும். சமூக அமைப்பை உடைக்கப் போராடாது இசைவாக செல் என்பது புரட்சிகர நிலைப்பாடு அல்ல.

எப்போ ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமையை உரக்கக் கூற முற்படுகின்றார்களோ அவ்வேளை போலி இடதுசாரிகள் தொடக்கம் ஒடுக்குமுறையாளர் வரையில் ஒரே குரல் ஒலிக்கக் கேட்கின்றது. இன்று இனமதகுல பேதமில்லாது ஐக்கியப் புரட்சி பற்றிப் பேசுவது முரண்நகையாகும்.

பௌத்த சிங்கள தேசியப் பெருமிதத்தின் மீது கட்டப்பட்ட சிந்தனை என்பது குறுகிய காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் எவ்வித தீர்வையும் கொடுக்கப் போவதில்லை. பௌத்த சிங்கள சிந்தனை வடிவம் என்பதும், தீர்வு என்பது பௌத்த சிங்கள சிந்தனைக்கு உட்பட்டது. இதற்கு அப்பால் ஒன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்றால் தமிழ் தரகு வர்க்கத்தை கடந்து தான் செல்லவேண்டியிருக்கின்றது. இதுதான் யதார்த்தம் மற்றவை அர்த்த மற்ற வெற்றுக் கூச்சலாகும்.

மனித வரலாற்றின் அனைத்துப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டங்களாகவே அடையாளப் படுத்தப் பட வேண்டும் என்ற மரபார்ந்த மாக்ஸியப் பார்வை கொண்டவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதே வகைக்குள் வலிந்து அடக்க வேண்டிய அவசியம் தர்க்க ரீதியாக அவர்களுக்கு உள்ளது. இதே அபர்த்தமான பார்வைதான். பாரம்பரிய இடதுசாரியம் தேசிய இனம் தேசமாக வளரும் என்பதை ஏற்றுக் கொண்டவர்களாக இல்லை. இந்த வளர்ச்சி என்பது தேசிய இயக்கங்களை உருவாக்கும். இடதுசாரிகள் இந்த இரண்டு விடயத்தை விளங்கிக் கொள்ளவில்லை

இதுவே தான் தேசிய - முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டத்தை ஏற்காது. லங்கா என்ற சிங்கள தேசம் என்ற சிந்தனையை உணராது நடைமுறையற்ற கோட்பாட்டுவாதம், நடைமுறை ரீதியாக மக்களிடையே இருந்து அவர்களின் அடிப்படை முரண்பாடுகளை முன்னிறுத்தி பொருளாதாரவாதத்தினுள் வீழ்ந்துள்ளதைத் தான் இது வெளிப்படுத்துகின்றது.

குட்டி முதலாளி படைப்பாளிகள், மேட்டுக்குடி சிந்தனைவாதிகளின், சாத்தியவாத, சீர்திருத்தவாத, நடைமுறைவாத, அனுபவாதத்தினுள் சிதைந்த இடதுகளின் பதட்டம், ஜேவிபியின், ரொட்கியர்களின் பதட்டம்.

தேசிய இனமுரண்பாடு பிரதானமாக இருக்கின்றது என்பது பற்றியோ அதனை தீர்ப்பதன் ஊடாகவே அடுத்த கட்டத்திற்கு நகர முடியும் என்பது பற்றியோ எவ்வித புரிதல் இல்லை- ஏற்றுக் கொள்ள முடியவில்லை- நிகழ்ச்சி நிரலுக்கு மீற முடியாத நிலை எனக் கொள்ளலாம்.

1956 களில் தேசிய முதலாளிகள் என்ற கற்பனைக் குதிரையின் மேலே பயணித்த ரஸ்ய சார்பு பொதுவுடமைக்கட்சி, லங்காக சமசமாஜகக் கட்சி என்பன இலங்கை லங்கா என்ற தேசியத்தின் பின்னால் நின்று செயற்பாட்டார்கள் இவர்களின் கொள்கைகள், மதிப்பீடுகளை இவ்வாறாக திரிபுவாதிகளின் (பாதை மாறியவர்கள்) செய்து கொண்டிருக்கின்ற போது ஆட்சியதிகாரம், அதன் போக்கு அரசியல் பொருளாதார அமைப்பு முறையில் சமூகத்தை வேறு தளத்திற்கு கொண்டு சென்றுவிடும். புதிய ஜனநாயக மார்க்சிய லெனினியக் கட்சிக்கு சிறிலங்கா சுதந்திரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி மீது எப்பவும் ஒரு மென்மை தன்மையை கடைப்பிடிக்கும் கடைப்பிடிக்கும் போக்கு இருந்துள்ளது.

இதில் இடதுசாரிகள் தேசிய முதலாளிகள் என்ற கொச்சை-திரித்திப் புரிந்த தன் பின்னால் சென்ற இடதுசாரிகள் பிற்போக்கு முகாமினுள் முடக்கி அவர்களால் இன்று வெளியே முடியாது சீரளிந்துள்ளார்கள். தேசிய இனங்களின் தேசியக் கட்டத்தினை அங்கீகரித்தும் தலைமை தாங்கியும், சமூக மாற்றத்திற்கான போராட்டத்திற்கு தலைமைதாங்க வேண்டிய பொறுப்பை விட்டு தேசிய முதலாளிகளின் பின் அணிதிரண்ட வரலாற்று துயர் இலங்கை இடதுசாரி வரலாற்றில் நடைபெற்றுள்ளது.

மறுபுறத்தே சகல விடயங்களையும் தலைமை தாங்கி நடத்த வழிகாட்டும் தத்துவத்தை பின்பற்றுவபர்களை வைத்தே பௌத்த- சிங்கள பேரினவாதம் தமிழ் தேசத்தினையும் மலையக மக்களை கபளீரம் செய்தும் முஸ்லீம்களை தீவிரமாக ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறே அயல்நாடான இந்தியாவில் உள்ள பாரம்பரிய பொதுவுடமைவாதிகள் இந்தியா என்ற நாட்டுப் பற்று அதிகம் அதிலும் சமஸ்கிருதத்தில் நாடு என்பது தேசம் என்று அழைப்பதால் தேசப்பக்தி அதிகம். இவைகள் பேபியன் கழகத்தினர் தாய்நாட்டைக் காப்பது என்ற சிந்தனை வடிவத்திற்கு ஒத்ததாகும். தாய்நாடு என்ற கோசத்தின் கீழ் சுயநிர்ணய உரிமையை மறுத்து நிற்கின்றார்கள்.

இந்திய அரசால் தேசிய இனங்களின் மீதும் தேசங்களின்மீது தொடுக்கும் அத்துமீறல்களுக்கு பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட புரட்சி என்ற பெயரால் நியாயம் வழங்குவார்கள். இதிலும் சிபிஎம் என்ற கட்சி முள்ளிவாய்க்கால் காலத்திலும் சரி முன்னரும் சரி ஈழ தேசத்தின் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து இந்திய விஸ்தரிப்புவாதத்தின் அங்கமாகினர். சர்வதேச அரங்கில் ராஜீவ் காந்தியின் கொலையில் பின்னர் தமிழ் தேசத்தின் போராட்டத்தை பயங்கரவாதமாகவே பார்த்தார்கள். (11-09-2001 பின்னர் சர்வதேசப் பயங்கரவாதம் என்ற பூச்சாண்டி ஊடாக மேலும் கெடுபிடிக்கு ஆளாகியது.) தமிழக - சிறிலங்கா தேர்தல் இடதுசாரிகளின் முடிவும் சர்வதேச சகோதரக் கட்சிகளிடம் தமிழ் தேசத்தை எதிர்த்த கருத்தே அவர்களிடம் ஏற்பட்டிருந்தது. குறிப்பாக குர்து அமைப்புக்கள் போராட்டத்தை ஆதரித்தது. இதற்கு காரணம் மா.லெ அமைப்புக்களின் தொடர்பு கொண்டதாக இருந்தது. இந்திய மா.லெ அமைப்புக்கள் சுயநிர்ணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உரிமையை ஏற்றுக் கொண்டும் தவறுகளை விமர்சித்து நிபந்தனையுடன் போராட்டத்தினை ஆதரித்துள்ளார்கள். தேசிய முதலாளிகள் என்ற நிலைப்பாட்டில் பொரித்த மீனுக்கும் அவித்த மீனுக்கும் இடையிலான வேறுபாடு என்று தோழர் சண்முகதாசன் மதிப்பிட்டது சரியானதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமக்கான கோட்பாடு

எந்தப் பொருளாதார அமைப்பில் வாழ்கின்றோம், அதனைப் பற்றிக் கேள்வி கேட்பதற்கு தயாராக இல்லை. இந்த முகவரியே அனைத்தையும் தீர்மானிக்கின்றது. ஒரு மனிதரும் சமூக அமைப்பு பற்றி அறிய வேண்டும் என்ற பிரஞ்ஞை இல்லை. மனித சமூகமே எந்த பொருள் உற்பத்திக் கால கட்டத்தில் வாழ்கின்றோம் என்பது பற்றிப் போதிய புரிதல் இல்லை. எந்த சமூக வளர்ச்சிக் கட்டத்தில் வாழ்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதனை ஆராய்ந்து அறிவதைப் பொறுத்தே அனைத்து மூலப் பிரச்சனைக்கான தீர்வை நோக்கிய பயணிக்கத் தொடங்க முடியும். இந்த மூல அறிவினை பெற்றுக் கொள்ளாத சமூகச் சிந்தனை என்பது பயன்பட முடியாது.

கட்சித் திட்டம் என்பது, சமூகத்தின் பொருளியல் கட்டுமானத்தைப் பகுப்பாய்வு செய்து, வர்க்கங்கள் பற்றிய ஆய்வுடன், செயல்தந்திரம், யுத்த தந்திரம், பிரச்சார முழக்கம், செயல் முழக்கம், உடனடி செயல்திட்டம் என, ஒரு முழுமையான புரட்சிகர நடவடிக்கைக்கான திட்டத்தை முன்வைக்க வேண்டும். அத்திட்டத்தில் மாற்றுக்கருத்து நிலவினால், இரண்டு கருத்துகளும் கட்சியின் கீழ்நிலை முதல் தலைமைக்குழு வரை விவாதிக்கப்பட்டு பெரும்பான்மை கட்சியினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமே கட்சியின் செயல்திட்டமாக இருக்கும். இதையே, கட்சிகள் நடை முறையில் பின்பற்றவேண்டிய ஜனநாயக மத்தியத்துவம் என்ற கருத்தாக்கமாக லெனின் முன்வைத்தார்.

உற்பத்தி முறையை மாற்றியமைப்பதன் ஊடாகவே சாத்தியமானது. ஆனால் இதனை தலைகீழாக விளங்கிக் கொண்டு சோசலிசம் கிடைத்த பின்னர் அனைத்தும் கிடைக்கும், சோசலிசம் என்ன பொண்ணுலகம் கிடைக்கும் வரையில் காத்திருங்கள், சோசலிச சமூகத்திற்காக போராட இன- மதம்- மொழி கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட வாருங்கள் என்று அறைகூவல் விடுகின்றார்கள். ஆம் அடிப்படை முரண்பாடு தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கும். அடிப்படை முரண்பாட்டிற்கு எதிரான போராட்டம் என்பது நீண்ட நெடிய போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும்.

ஒரு நாட்டின் அடிப்படை முரண்பாட்டை போக்க வேண்டுமென்றால் முதலில் பிரதான முரண்பாடு தீர்க்காமல், தேசங்களின் முதலாளித்துவ - தேசியக் கட்டத்தை அடையாது முன்னோக்கிச் செல்ல முடியாது. இதே போல ஒடுக்கும் தேசத்தில் உள்ள உழைப்பாளிகளும் ஒடுக்கப்படும் தேசத்தின் விடுதலை உடன் தான் அவர்களுக்கும் விடுதலை கிடைக்கும். (மார்க்ஸ் அயர்லாந்துப் பிரச்சனையில் கூறியது) இது சிங்கள பௌத்தக் கட்டமைப்புகள் வாழும் சிங்கள மக்களில் உள்ள புரட்சியாளர்கள் தமது கடமையைச் செய்ய வேண்டும்.

பிரதான முரண்பாடு- இதுவும் உற்பத்தி முறையில் மாற்றம் ஏற்படுகின்ற போது ஏற்படுகின்ற பிரச்சனைதான். முதலாளித்துவ சகாப்தத்தில் தேசிய இனங்கள் தேசமாக வளர்கின்றது. இந்த முரண்பாடுகளை முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறையில் தீர்க்க முடியும். இதற்கு வரலாற்று ரீதியாக பல உதாரணங்கள் உள்ளது. ஆனாலும் குறிப்பாக ஈழ தேசத்தின் நிலையில் ஆக்கிரமிப்பு- பொருளாதாரம் சிதைப்பு- மொழி-கலைபண்பாடு என்பது அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கு ஈழ தேசம்என்பது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனை அரசியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மார்க்சிய லெனினியவாதிகளாக இருக்க முடியாது.

தேசியம் முற்போக்காக இருக்க வேண்டும் என்ற கூற்றுப் பற்றிய மயக்கமான புரிதல் உள்ளது. ஈழம் அரைநிலமானியத்தில் இருந்தும், சமூக உறவில் இருந்தும் வெளியே வருகின்றது, தேசிய ஒடுக்குமுறை எதிராக போராடுகின்ற தேசிய இனத்தின் போராட்டம். அதே வேளை பிற்போக்குச் சிந்தனை என்பது நாசீச, இந்துத்துத்துவா, சியோனிச, சோவனிச (பெருந்தேசிய) வெறி என்பது எதிர்க்கப்பட வேண்டியது. அதனுடன் தேச ஆட்சியதி காரத்தை போராட்டத்தை ஒப்பிடுவதும் அதன் எதிர்ப்பு நிலைப்பாடும் ஒன்றல்ல. அதேவேளை தமிழ் மக்களின் இலட்சியமும் போராட்ட அமைப்பின் கொள்கைத் தவறுகளில் இருந்து முற்போக்குத் தேசியம் பிற்போக்குத் தேசியம் என்று கொள்ள முடியாது. ஆக ஈழப் போராட்டம் என்பது முற்போக்கானது தான் தேசிய இனங்களின் இரண்டு கட்டம் என்பதற்குள் உள்ளடக்கியதே.. தேசிய ஒடுக்குமுறை என்பது பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடும் அதனை முன்னெடுப்பதும் முற்போக்கானதுதான். முதன்மை விடுதலையமைப்பும் அரைநிலமானியத்திற்கு மாற்றாக முதலாளித்துவத்தை முன்வைத்துள்ளார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 2002 விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையானது பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த பேட்டியில் தமது கொள்கை திறந்த பொருளாதாரம் என்று பிரகடனப்படுத்தினர். இதனை வைத்துக் கொண்டே பிற்போக்காகவும் உழைக்கும் வர்க்கத்தை காட்டிக் கொடுப்பதாவும் கொள்ள முடியாது. ஏனெனில் முதலாளித்துவ வளர்ச்சியும் தேவையானதாகும்.

பிரதான முரண்பாட்டை முன்னெடுப்பதன் ஊடாகவும், சமூக மாற்றத்திற்கான வேலை முறைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆக பிரதான முரண்பாட்டைத் தீர்ப்பது என்பது வெறும் எல்லையை மாத்திரம் அல்ல. ஆசிய பாணி கொடுங்கோன்மையான வர்ணாச்சிரம சிந்தனையும், பின்னர் வர்க்க ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதை இலக்காக கொண்டது.

பௌத்த நிறுவனங்களே இலங்கையின் பெரிய நிலவுடைமையாளர்களாக இருக்கின்றன. துறவிகள் நிலவுடைமையாளர்களாக இயங்குகிறார்கள். கூஷகூஷஇந்த நிலை என்பது சமூகப் புரட்சியில் பெரும் சிக்கலான விடயம். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நடத்திட வில்லை. அதே வேளை சிங்கள தேசத்தில் நடத்திட முயற்சிக்கப்பட்ட இரண்டு ஆயுதப் போராட்டங் ~~(களும்)~~ களையும் விட ஈழப்போராட்டம் நிகழ்த்திய பழைய சிந்தனை முறை சிதைவினை ஏற்படுத்தி விடவில்லை என்பது மிகைப்படுத்தப்படும் கூற்றாகும். போராட்டத்தின் யுத்த, செயற்பாட்டுத் தந்திரத்தில் ஏற்பட்ட தவறை வைத்துக் கொண்டு எதிர்ப்பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இரண்டு ஆயுதப் போராட்டத்தின் தோல்வியும், ஈழத்தின் முள்ளிவாய்க்காலின் வீழ்ச்சியை வைத்து ஆயுதப் போராட்டமே தவறு என்று பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

சிங்கள பௌத்தக் கட்டமைப்பு நிலமானியத்தினை பாதுகாத்து வந்துள்ளது. ஜேவிபி புரட்சி பேசியவர்களால் மாத்திரம் அல்ல எவராலும் முதலாளித்துவத்தினை எவராலும் பிரயோகப்படுத்த முடியவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் முதலாளித்துவத்தினை நிலமானிய பொருளாதாரத்திற்கு மாற்றாக முன்வைத்தார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கிக் கொண்ட (de facto government) நிழல் ஆட்சிமுறை என்பது முதலாளித்துவ மனப்பாங்கைக் கொண்டதாகும். நிழல் அரசாங்கத்தின் கட்டமைப்புப் பற்றிய கறாக ஆராயப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீஸ் கம்யூன் வீழ்ச்சியின் பின்னர் ஆசான் கார்ல் மாக்ஸ் பிரான்ஸில் நடந்த வர்க்கப் போராட்டம் பற்றிய மதிப்பீட்டை முன்வைத்து மாத்திரம் அல்ல. பழைய அரச நிறுவன முறை தொடரக் கூடாது என்று முன்மொழிந்தார். இவ்வாறே ஈழ அரசாங்கத்தின் தவறுகள் கறைராக மீளாய்வு செய்ய வேண்டும்.

முதலாளித்துவப் மனப் பாங்கானது மேற்கத்தை வளர்ந்த ஜனநாயகத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற அளவீடு கொள்ள முடியாது. ஏனெனில் அங்கு புரட்சி என்பது முழுமையாக வெற்றி கொள்ளப்படவிலை. ஒரு தீவிரமான ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கட்டமைக்கப்பட்ட நிழல் அரசாகும். இவ்வாறு விடுதலை அமைப்பை மதிப்பீடு செய்தன் ஊடாக விடுதலை அமைப்பை புனிதப்படுத்துவதாகாது. அந்த அரச கட்டமைப்பு பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களின் உழைப்பினால் கட்டப்பட்டது. இதே போல தாயகத்தில் அந்த மக்களின் தியாகமும் அளவிட முடியாதாகும்.

சிங்கள தேச காவிஇடதுகள் நிலமானியத்தினை சமரசம் செய்த சக்திகள் தான். புதிய ஜனநாயகப் புரட்சி பற்றிய திடமான முடிவு இல்லாத நிலையில் போலிப் புரட்சியாளர்களிடம் எதனை எதிர்பார்க்க முடியும். நிலமானிய சிந்தனைக் கட்டமைப்பில் புரட்சிகர மாற்றம் என்பதை முடிவிற்கு சிங்கள தேசத்தின் புரட்சி இருக்கவில்லை. சிங்கள தேசத்தின் குட்டிமுதலாளியம் இடது கூறுகளைக் கொண்டிருந்த வேளையில் ஜனநாயகப் புரட்சியை செய்திருக்க வேண்டிய எதிர்பார்ப்பும் இருந்தது.

தோழர் மாவோ அரைக்காலனிய நாடுகளில் பொருளாதார அடித்தளம் அதன் அதிகாரம் உழைக்கும் மக்களிடம் இருந்தது. முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறை இருக்கின்ற வேளையில் அது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாக இருக்கும்.

"சீனப்புரட்சி இயக்கம் இரண்டு கட்டங்களை, அதாவது ஜனநாயக, சோசலிசப் புரட்சிகளை உள்ளடக்கியது, அவை சாராம்சத்தில் வேறுபட்ட இரண்டு புரட்சிப் போக்குகள் என்றும் முதலாவது போக்குக் கொண்டு நடத்தப்பட முடியும் என்றும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அறிந்து கொள்ள வேண்டும். ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சிக்கான இன்றியமையாத தயாரிப்பாகும், சோசலிசப் புரட்சி ஜனநாயகப் புரட்சி ஜனநாயகப் புரட்சியின் தவிர்க்கப்பட முடியாத தொடர்ச்சியாகும். கம்யூனிஸ்டுகள் அனைவரும் நிறைவேற்றப்பாடுபட்டுக் கொண்டிருக்கும் இறுதி குறிக்கோள் சோசலிச, கம்யூனிச சமுதாயமொன்றை அமைப்பது தான். ஜனநாயக, சோசலிசப் புரட்சிகளுக்கிடையிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளையும் தொடர்களையும் தெளிவாகப் புரிந்து கொள்வது சீனப்புரட்சிக்குச் சரியான தலைமை அளிப்பதற்கு இன்றியமையாதது. (ப57 மாசேதுங் சீனப்புரட்சியும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும்)

இங்கு சாரம்சத்தில் க்ஷஜனநாயகம் என்பது அரசு அதிகாரத்தைக் குறித்து நிற்கின்றது. அன்று சீனக் தலைவர் உறுதியான கட்சித் தலைமையில் போராட்டம் வெற்றி கொள்ளப்பட்டு புதிய ஜனநாயகக் கடமையாற்றப்பட்டது. இதற்கு முன்னர் சோவியத் என்றால் என்ன? என்ற புத்தகத்தில் புரட்சியின் பின்னர் முதலாளித்துவ வர்க்க சிந்தனைப் பிரிவை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய போதனையே அதில் உள்ளது. இது சோவியத்தில் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான வழிகாட்டலாக இருக்கின்றது.

"தமிழ்த்தேசியவாதத்தின் பின்னால் போனவர்களின் பெரும்பகுதி மாவோவாதிகளாக இருந்தனர். மாவோவாதம் என்பது ஒரு விவசாயக் கோட்பாடு என்ற அளவில் தேசியவாதத்துக்கும் நெருக்கமாக இருந்தது. இன்று புதுவை இரத்தினதுரை, பாலகுமார் வரையிலான மாவோவாதிகள் புலிப்பாசிஸ்டுகளாக பரிணாமம் பெற்றதில் இவை முடிவடைந்தன. இவ்வாறான புரிதல் என்பது ரொட்கியவாதிகளின் வர்க்கப் போராட்டம் பற்றிய புரிதலாக இருந்துள்ளது. (ரொட்கியகருத்தியல்) மறுபக்கத்தே சுரண்டல் நடைபெறுகின்றது என்பதற்காக தொழில் மயமாவதை எதிர்க்கக்கூடாது. தொழிற்துறை இல்லாமல் சோசலிசம் இல்லை" என்ற வரையறுக்கின்ற முரண்பட்ட சிந்தனை வடிவம் எவ்வாறு தோன்ற முடியும்? தேசிய இனங்களின் முதலாளித்துவ கட்டத்தை எதிர்த்துக் கொண்டு மறுபுறத்தே தொழில்துறை வளர வேண்டுமென்பது முரண்பட்ட கருத்தாகும்.

தேசிய முதலாளிகள் இல்லை, முற்போக்கு தேசியம் இல்லை என்ற வாதம் வைக்கப்படுகின்றது. இடதுசாரிய வரலாறு தேசிய இனம் - தேசம் பற்றிய போதிய புரிதல் அற்றே போலிச் சுதந்திரத்தின் பின்னரான காலம் கடந்துள்ளது. ஈழத்தில் புரட்சிகர தலைமை இல்லை என்பதற்காக விடுதலைப் புலிகள் முதலாளித்துவத்தை பின்பற்றினார்கள் என்பதை பிற்போக்கானதாக காட்ட (முதலாளித்துவ வளர்ச்சியை துரிதப்படுத்துவதை மறுப்பது) முற்படுவது மார்க்சியம் லெனினிய மாசேதுங் சிந்தனையயல்ல.

முள்ளிவாய்க்காலின் பின்னர் முடிந்தவரையில் தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான குரலை அழிப்பதில் பல முனைகளில் செயற்பாடுகள் இருக்கின்றது. ஆட்சியதிகாரத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டக் குரல்வளையை நசுக்கிக் கொண்டிருக்கின்றனர் முற்போக்குவாதிகள் குறைந்த பட்சம் (ஆக்கிரமிப்பு எதிராகவும்) முரண்பாட்டிற்கு எதிராக கருத்தை முன்வைக்கிற குரல்களை ஊக்குவிக்கப்பட வேண்டும். குட்டிமுதலாளியக் கூறுகளின் செயற்பாடு முக்கியமானதாகும். சமூக அவசியத்தினை அலட்சியம் செய்து கொண்டு எவ்வாறு புரட்சியை முன்னெடுக்க முடியும்? ஆனால் இடதுசாரிகள் அடிப்படை முரண்பாட்டை முன்வைத்து பொருளாதாரவாதத்தினுள் சிதைந்துள்ள நிலையில் முதலில் பொருளாதாரவாதத்தில் (கூலி, சம்பள உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், நவதாரளாவாதம் பொருளாதாரத்திற்கு என்ற கருத்துருவம், சீர்திருத்தவாத, தொழிற்சங்கவாத) இருந்து வெளியே வரவேண்டும். அதில் இருந்து வெளிவரும் வரைக்கும் பிரதான முரண்பாடு பற்றிய கரிசனை உள்ளவர்களை சாகடிக்க முடியாது. குறைந்த பட்சம் குட்டிமுதலாளிய சக்திகளால் முன்வைக்கப்பட்ட எழுக தமிழ் கோரிக்கைகளை முன்னெடுக்காது நடைமுறையில் வேலைசெய்யாமல் இருந்து கொண்டு அவர்களை விமர்சிப்பது என்பது கடமையை தவறிய நிலையில் உச்சாணி செய்து கொண்டுவதாகும். இந்தச் செயற்பாடாது மார்க்சியத்தினை தேசியச் சிந்தனை கொண்டவர்களிடம் இருந்து அன்னியப்படுத்துகின்ற வேலையைத் தான் செய்கின்றார்கள். எனவே தேசிய - முதலாளித்துவக் கட்டத்தை மார்க்சியம் ஏற்றுக் கொள்கின்றது என்பதை பிரகடனப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

பழைய உற்பத்தி உறவினால் ஏற்பட்டுள்ள அகமுரண்பாடுகள் (பகை முரண்பாடு) சமூகத்தில் இருக்கின்றது. இது சோசலிசப் புரட்சி ஏற்பட்ட பின்னரும் மறைந்துவிடுவதில்லை. மாறான இது நீண்ட நெடிய போராட்டமாகும். புரட்சிக்கு முன்னரும் சமூகத்தில் உள்ள அகமுரண்பாடுகளை கவனத்தில் எடுத்துக் குரல் கொடுக்க வேண்டும். அதேவேளை புரட்சியின் பின்னர் சீனக் கலாச்சாரப் புரட்சி போன்று புதிய சமூக உறவை மாற்றியமைக்கும் போராட்டம் தொடரப்பட வேண்டும்.

முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் என்பது தென்கிழக்காசியாவில் இயல்பாக வளர்ச்சி ஊடாக மாற்றத்தினை கொள்ள ஆரம்பிக்கவில்லை. முதலாளித்துவ உற்பத்தி முறை கொலனித்துவ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறை, சமூக உறவு, சிந்தனை, ஜனநாயகம் முழுமையாக மாற்றத்திற்கு உள்ளாக்கப்படவில்லை. இந்த வளர்ச்சிப் போக்கில் தேசிய இனங்கள் தேசத்திற்குரிய பண்பைக் கொண்டு வளர்கின்றது. அது ஏற்கனவே இருக்கின்ற சமூகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமானங்கள் மாற்றத்திற்கு உள்ளாக ஆரம்பிக்கின்றது. பழைய உற்பத்தி முறை மேல் கட்டப்பட்டதாகவும், புறநிலைத் தாக்கத் தினால் ஏற்படும் குறைவிருத்தி கொண்ட ஜனநாயக வளர்ச்சி கொண்டதாகவும் இருக்கின்றது. முதலாளித்துவக் சகாப்பத்தில் நுழைந்த போதிலும் முற்று முழுதான பொருள்உற்பத்தி, சமூக உறவில் மாற்றம் அடைந்துவிடவில்லை.

முதலாளித்துவ- தேசிய வளர்ச்சிக் கட்டமும் ஒடுக்குமுறைக்கு எதிரான போக்கில் இருந்துதான் அரசியல் மதிப்பீடும் அரசியல் போக்கும் முன்வைக்கப்படுகின்றது. தலைமை தாங்கும் சக்திகளிடம் என்பது மத அடிப்படையவாதம் உள்வாங்கப்படுமானால் அது சமூக வளர்ச்சிப் போக்கில் இருந்து உள்வாங்கப்படுவதாகும். இதனை பலஸ்தீனத்தில் கண்டு கொள்ள முடியும். முற்போக்கு - புரட்சியாளர்களின் கைகளில் இருந்த போராட்டம் கமாஸ் போன்ற பிற்போக்கு மதவாதிகளின் பிடியில் வந்திருக்கின்றது. அது பெரும்பான்மை இல்லை எனினும் மதவாதம் தலைதூக்கி இருக்கின்றது என்பதற்காய் பலஸ்தீன தேசத்தின் அரசுரிமையை எவராலும் மறுத்துவிட முடியாது. இன்றும் இந்துத்துவாவின் ஆக்கிரமிப்பின் ஊடாக தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்காக போராட்டத்தினை திசைதிருப்ப முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. தேசியப் போராட்டத்தில் புதிய ஜனநாயகப் போராட்டப் பாதையை தேர்ந் தெடுக்க வேண்டியது அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றங்களை தீடீரென

மாற்றங்களை தீடீரென நடத்திவிட முடியாது முடியாது அவைகள் படிமுறை வளர்ச்சிக்கு உட்பட்டதாகவே இருக்க முடியும். அதே வேளை சமூக அவசியத்தை கணிப்பதும், முன்னிறுத்துவதும் முக்கியமானதாகும். சர்வதேசப் புரட்சியின் ஒரு அங்கமாக எமது நாட்டில் எவ்வாறு நடத்த முடியுமே அதனை நடத்தி முடிப்பது இதுதான் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம். ஒடுக்கும் பெருந்தேசியத்திலுள்ள பாட்டாளி வர்க்கமும் முன்னணிப்படையும் தன் சொந்த தேசிய இனத்துக்குள் இருந்து போராட்டத்தை தொடங்க வேண்டும். முதலில் அவர்கள் தமது கடமையைச் செய்யும் போது அதற்கு பக்கபலமாகவும், ஆதரவாகவும் செயற்படுவது என்பது வேறாதாகும். ஐக்கியம் என்ற போர்வையில் வாருங்கள் பௌத்த- சிங்கள பெருந்தேசிய வாதத்தினை எதிர்த்து போராடாமல் இருப்பது மாத்திரம் அல்ல சுயநிர்ணயத்தை மறுதலிக்கின்றார்கள். தமிழ் தேசம் தனது ஒடுக்குமுறைக்கு எதிராக போராடாது உலகப் புரட்சியை பற்றிக் கனவு கொண்டிருப்பவர்கள் கூறுவது - நாம் நண்பர்களல்ல வர்க்க எதிரிகள் என்பது வெளிப்படை என்று பிரகடனப்படுத்துகின்றார்கள். தேசிய இனமானது தேசங்களைப் கொண்ட பண்பாக வளர்வதும் வர்க்கப் போராட்டம் என்ற மதிப்பீடு அற்றவர்களாக தனியே அடிப்படை முரண்பாடு மாத்திரம் தான் வர்க்கப் போராட்டத்திற்கு உட்பட்டதாக மார்க்சியத்தை திரித்து வைத்துள்ளார்கள். உற்பத்திசக்தி- உற்பத்தி உறவின் மேல் எழும் பொருளாதார அமைப்பில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றது. இது நிகழ்கின்ற அரசியல் அமைப்பில் நிறைவேற்றப்பட முடியாத போது மாற்றத்தை தேடிநிற்கின்றது. இது வெவ்வேறு பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப மாறுபடுகின்றது.

"தமிழர்கள் இனவாதம் பேசுவதை விட்டு இனவாதத்தைப் பேசி அழிந்தது போது இனியாது ஐக்கியப்பட்டு போராடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்வோம்" என்று அனுபவாதத்தை (அழிந்தீர்கள்) முன்வைக்கப்படுகின்றது.

இங்கு தமிழ் தேசத்தின் விடுதலைதான் சிங்கள தேசத்தில் உள்ள உழைக்கும் வர்க்கத்தை விடுதலை செய்யும். இதுவேதான் பெருந்தேசிய (சோவனிச) சிந்தனையில் இருந்து தமிழர்களை மாத்திரம் அல்ல அனைத்து தேசிய இனங்களையும் மீட்டெடுக்கும் என்பதை மறுக்கும் நிலையில் வந்து நிற்கின்றது.

தமிழர் ஒரு தேசம் (tamils as nation) என்ற அடிப்படையில் அவர்களுக்கு தனியாட்சியுரிமை கொள்ள உரிமையுள்ளவர்கள். ஆனால் உழைக்கும் வர்க்கம் ஆட்சியதிகாரம் பெற நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. அதற்கு முதல் முதலாளித்துவ - தேசிய கட்டம் என்பதை தமிழர் தேசம் கடந்துவிடவில்லை. தேசியப் போராட்டம் என்பது "ஆசிய பாணி கொடுங்கோன்மை" வர்ணாசிரமச் சிந்தனையைக் கட்டிவைத்திருக்கும் நிலமானியச் சிந்தனை முறையும் சிதைவுக்குள்ளாகின்றதை துரிதப் படுத்துகின்றது.

நம்மை நாம் ஆள்வது என்பது தனியான தேசத்தின் அரசு பின்னரான உழைக்கும் மக்களின் தலைமையில் அமையும் ஆட்சியாகும். ஒன்றைக் கடக்காமல் அடுத்த கட்டத்தை அடைய முடியாது. தேசங்களின் ஆட்சியுரிமைக்கான போராட்டமும் வர்க்கப் போராட்டம் என்பதை விளங்காத வரையில் ஐக்கிய இலங்கைப் புரட்சி- பாட்டாளி வர்க்கத்தை தேசிய இனரீதியாக பிரிப்பது- இனவாதம் பேசுவது என்று வாய்ப்பாட்டை மீளவும் இரைமீட்கவே முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபங்கீடு பற்றிய

சிறிலங்கா தனது சந்தையை யுத்தம் முடிவிற்கு வரும்வரை தனித்தே சந்தையை அன்னிய மூலதனத்திற்கு திறந்து விட்டிருந்தது. ஆனால் ஈழமானது புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரே அன்னிய நிறுவனங்கள் நிலத்தை, சந்தையையும் முழுமையாக கைப்பற்ற முடிந்தது. இந்த அரசியல் போக்கை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

மூலதனத்திரட்சி, நிதிமூலதன நிறுவனம் பற்றிய போதிய புரிதல் அவசியமானதாகும். ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் என்பவர்கள் லெனின் எழுதிய முதலாளித்துவத்தின் உச்ச வளர்ச்சியே ஏகாதிபத்தியம் என்ற கருத்தை உள்வாங்காதவர்களே. லெனின் வழிகாட்டலை மறைத்த எழுத்துக்கள் சோம்பல் கொண்ட குருட்டுப் படிப்பாளிகளின் கருத்துக்கள் அரசியலாக முன்வைக்கப்படுகின்றது. லெனின் கோட்பாட்டை விளங்கிக் கொண்டு அதனை எதிர்த்து நிறுவ முற்படுவதில்லை.

இன்று சந்தை (நிதிமூலதன சந்தை மறுபங்கீடு) என்பது ஓரளவிற்கு தெளிவாக தெரிகின்ற நிலையில் அது சாத்தியமாகும். மார்க்ஸ் ஒற்றை திறந்த சந்தையை ஆதரித்தார் என்றால் அது ஏகாதிபத்திய வளர்ச்சிக்கட்டத்திற்கு முன்னைய நிலைப்பாடு. இன்று நிதிமூலனத்தின் சந்தைக்காய் சந்தையை கைப்பற்றும் நிலையில் இருந்துதான் ஆக்கிரமிப்பு யுத்தங்கள் நடைபெறுகின்றது.

ஏகாதிபத்தியம் நெருக்குகின்ற வேளையில் நாம் எவ்வகையாக அதற்கு எதிராக செயற்பட வேண்டும். ஏகாதிபத்தியத்திற்கு நெருக்கடிகளுக்கு எவ்வாறு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டும். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு எதிரான தீர்க்கமாக செயற்படுகின்றோமோ என்பதை சிந்திப்பது இல்லை. நாம் அரசியலில் தலையிடாவிட்டால் அரசியல் எம்மில் தலையிடும் என்ற லெனின் கூற்றை உணர்ந்தவர்களா பெரும்பான்மையினர் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சந்தையை எவ்வாறு ஊக்குவிப்பது, சந்தை நெருக்கடிகளை தீர்த்துக் கொள்வது என்ற பிரச்சனை, அடிப்படை முரண்பாடுகள் என்பது உள்நாட்டு நிலையிலும் சர்வதேச நிலையிலும் முரண்பாடு இருந்து கொண்டு இருக்கின்றது.

சீன, அமெரிக்க, இந்திய நலன் கடல் பாதைக்கான திட்டம் இந்து-பசுபிக் கடல் பரப்பு என்ற போக்கில் வியூகங்கள் வகுக்கப்படுகின்றது. இங்கு தரகு அணிகளை பயன்படுத்திக் கொள்ள அனைத்து அன்னிய சக்திகளும் செயற்படுகின்றார்கள்.

சிங்கள தேசம் பாடம் கற்றுள்ளதா? இதற்கு பௌத்த சிங்கள தேசம் ஒத்துக் கொள்ளுமா? சிங்கள தேசத்தின் தரகு அணியானது தன்னிச்சையாக எப்பொழுதும் செயற்பட முடியாது. இவற்றை முன்னிறுத்தாமல் மேலே உள்ளதுபோல மொட்டையான கேள்விகள் அரசியல் நீங்கம் செய்வதும், பிராந்திய வல்லரசினதும், ஏகாதிபத்தினதும் நிதிமூலதனத்தின் வியூகங்களை மறைக்கும் நோக்கைக் கொண்டதாகும். இவைகள் எல்லாம் நிதிமூலனத்தினதும் மறுவுலகக் பங்கீடு பற்றிய எவ்வித புரிதலும் அற்ற வெற்றுச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவும் பொதுப்புத்தியாகவும் வெளிப்படும் சமூகம் போக்கு உள்ளது. தமிழ், சிங்கள, முஸ்லீம் தரகு வர்க்கத்தை அன்னிய நிதிமூலதனம் தனக்கு தேவைக்கு ஏற்ப பயன்படுத்துகின்றது. தரகு அணிகள் எவையும் அன்னிய முதலாளிகளை மீறிச் செயற்படப்போவதில்லை. நாடுகடந்த மூலதனத்தை அம்பலப்படுத்தி மக்களை அணிதிரட்டுவது என்பது முன்னுள்ள கடமையாகும்.

உலகை மறுபங்கீடு செய்யும் முனைப்பில் வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு அரசியல்.

1. வல்லரசுகள் சில நாடுகளை நேரடியாக சென்று ஆக்கிரமிக்கின்றது. இது குறைந்த பட்சம் முதலாளித்துவ அரசுகளைக் கூட விட்டுவிடுவதில்லை. புதிய மூலதனத்தின் காலகட்டம். அது உள்நாட்டு மூலதனத்தின் காலம் அல்ல. அது காப்பிரேட்- நிதி மூலதனத்தின் - நாடுகடந்த மூலதனத்தின் காலம். இது அரசுகளுக்கும், சட்டங்களுக்கும் தீர்மானிக்க அதிகாரம் இல்லை. நிதிநிறுவனங்கள் ஊடாக நாடுகளை ஆட்சி செய்கின்றது.

2. தமது முகவர்களைக் கொண்டு ஆட்சி நடத்துவது. போலியாக வழங்கப்பட்ட சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள், எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் இவர்களின் முகவர்களே. சந்தைக்காய் அன்னிய சக்திகள்- கேந்திர மையம் கைப்பற்றும் நோக்கில் தமது நலன்களை பெற்றுக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.மறுகொலனியாதிக்கம் என்பது நவீன நிறுவனங்கள் ஊடாக செய்யப்படும் ஒப்பந்தங்கள் ஊடாக நாட்டின் ஆட்சியாளர்களுக்கு கட்டளை இடப்படுகின்றன, தமது நிறுவனங்கள் ஊடாக சமத்துவம் அற்ற ஒப்பந்தங்களில் கெயெழுத்திடும்படி நிர்ப்பந்திக்கின்றன. அனைத்தும் தமது செல்வாக்கிற்கு உட்பட்டதாக நாடுகளை உள்வாங்கிக் கொள்கின்றன.

சர்வதேச ரீதியில் உலகை பங்கிடும் அரசியலுக்கு எதிராக சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமில் நிற்பதன் ஊடாக பூகோள அரசியலை எதிர்க் கொள்ள முடியும்.

தோழர் லெனின் ஏகாதிபத்தியத்தைப் பற்றி இயன்ற அளவிற்கு சுருக்கமான இலக்கணம் அளிக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று கூறவேண்டும். இத்தகைய இலக்கணம் யாவற்றிலும் முக்கியமானதை தன்னுள் கொண்டதாக இருக்கும். ஏனெனில் ஒருபுறத்தில் நிதி மூலதனம் என்பது தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுக்களின் மூலதனத்துடன் ஒன்று கலந்து விட்ட ஒருசில மிகப் பெரிய ஏகபோக வங்கிகளின் வங்கி மூலதனமாகும். மறுபுறத்தில் உலகின் பங்கீடானது எந்த முதலாளித்துவ அரசாலும் கைப்படாத பிரதேசங்களுக்கு தடையின்றிப் பரவிச் செல்லும். கொலனியாதிக்கக் கொள்கையிலிருந்து முற்றும் பங்கிடப்பட்டுக் கொண்டு விட்ட உலக நிலப்பரப்பை ஏகபோக உடனடியாக கொண்டிருப்பதற்குரிய கொலனியாதிக்கக் கொள்கைக்கு மாற்றிச் செல்வதாகும். ஆனால் மிகவும் சுருக்கமான இலக்கணங்கள் முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவது வசதியாக இருந்தாலுங் கூட அவை பற்றாக் குறையானவையே. ஏனெனில் வரையறை செய்யப்படவேண்டிய நிகழ்வின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை அவற்றிலிருந்து வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லா இலக்கணங்களும் நிபந்தனைக்கு உட்பட்ட சார்பு நிலையிலான மதிப்பே கொண்டவை. நிகழ்வினது முழு வளர்ச்சியிலும் அதன் தொடர்புடமைகள் யாவும் அடங்கியனவாய் ஒரு போதும் இருக்க முடியாது என்பதை மறக்காமல் மனதில் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை இயல்புகளும் உள்ளடங்குமாறு அதற்கு இலக்கணம் கூறியாக வேண்டும்.

1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களை தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்திற்கு உற்பத்தியின் மூலதனத்தின் ஒன்று குவிப்பு வளர்ந்து விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும், இந்த "நிதி மூலதனத்தின்" அடிப்படையில் நிதியாதிக்க கும்பல் உருவாதலும்.

3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தபட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல்.

சர்வதேச ஏகபோக முதலாளித்துவ கூட்டுக்கள் உருவாகி, உலகையே இவைகள் தமக்கிடையே பங்கு போட்டுக் கொள்ளுதல்.

5) மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப்பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவு பெறுகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் எந்தக்கட்டத்தில் ஏகபோகங்கள் நிதிமூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலை நாட்டப்படுகிறதோ, மூலதன ஏற்றுமதி முனைப்பான முக்கியதத்துவம் பெற்றுவிட்டதோ, சர்வதேச டிரஸ்டுக்களிடையே உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்று விட்டதோ, அக்கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தி யமாகும். (141-142 லெனின் தொகுதி 3- ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்)

சர்வதேச அடிப்படையில் அடிப்படை முரண்பாடு என்பது அபரிமிதமான பொருள் உற்பத்தி முறையாகும். அதேவேளை பிரதான முரண்பாடு என்பது அபரிமிதான உற்பத்தியினால் உலக மறுபங்கீடு செய்வதற்காய் ஒப்பந்தங்கள், இராணுவ ஆக்கிரமிப்பு என்று தனது (கோப்ரேட்) நிதிநிறுவனங்கள் நேரடியாக முதலாளிகளின் சார்பாக நாடுகளில் ஆக்கிரமிக்கின்றது. இதற்குப் பயன்படுத்தும் பொருட்டு உலக வங்கி, ஆசியான் வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக மையம் என்று இப்பொழுது பிரிக்ஸ் (ஆபீரிக்க, இந்திய, பிரேசில், சீன) கூட்டுக்களாக உலகை பெரும்முதலாளிகள் சார்பாக ஆட்சியதிகாரங்களை, கொள்கைகளை திணிக்கின்றார்கள். இதன் ஊடாக நாடுகளின் சுயாதிபத்தியத்தில் இடையறாது தலையிட்டுக் கொண்டிருக்கின் றார்கள். ஏகாதிபத்திய வல்லரசுகள் எண்ணற்ற அசமத்துவமான ஒப்பந்தங்களிற் கைச்சாத்திடும்படி சீனவை வற்புறுத்தின. இதனால், அவை தமது கடல், தரைப்படைகளை சீனாவிற் தங்கச் செய்வதற்கு உரிமை பெற்று, ஸ்தல ஆட்சிக்கு அப்பாற்பட்ட ஸ்தானிகராலய நீதி நிர்வாக உரிமைளைப் பெற்றதோடு, முழு நாட்டையும் ஏகாதிபத்திய செல்வாக்குப் பிராந்தியங்களாகக் கூறு போட்டன". (ப.20 தோழர் மாசேதுங் சீ. பு. சீ. க. கட்சியும்) நாடு கடந்த மூலனதனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவின் வேகம் அதிகரித்திருக்கின்றது..

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முன்னைய கொலனிய நாடுகளை தூரத் தொலைவில் இருந்து ஆட்சியை மேற்கொள்ளும் அரசியல் வியூகம் ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்டனர். மேலைநாடுகளின் தேவைகளை இந்த வர்க்கம் நிறைவேற்ற தகுந்தவர்கள் என எண்ணப்பாட்டை ஏற்படுத்தி சேவகம் (மென்வலு, - தரகுவர்க்கம்) செய்ய தம்மை தயார்படுத்திக் கொள்கின்றனர். ஏகாதிபத்தியம் என்பது முன்னைய கொலனிநாடுகளை மறுபடியும் கொலனியாக்கம் செய்கின்றது, இது ஆக்கிரமிப்பு யுத்தங்களின் ஊடாகவும், வெவ்வேறு ஒப்பந்தங்களின் ஊடாக செயற்படுகின்றது. இந்தப் போக்கை அரசியல் நீக்கம் செய்து பூகோளமயமாக்கல் நவதாராளப் பொருளாதாரம் என்று வரையறுப்பதும் உண்டு. மிகையான உற்பத்தி அதற்கான சந்தை, நுகர்வைத் தூண்டுதல் என மறு- புதிய கொலனித்துவம் என்கின்ற பூகோள- உலகமயமாதல் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கட்டத்தில் தேசிய இனங்களின், தேசங்களில் இருப்பு என்பது ஆபத்திற்குள்ளாகியி ருக்கின்றது.

இவர்கள் மேலை நாட்டவர்களுக்கு நிகரானவர்களாகவும், மேலைநாட்டு மூலதனத்தின் எசமானர்களின் முகவர்களாக (agents) இவர்கள் செயற்படுவர். இது நுகர்வை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தின் விளைவாக ஏற்படுவதே இன்றைய காலத்தில் ஏற்படுகின்றது. இந்தச் சமூகப் பிரிவு என்பது கொலனித்துவ காலத்தின் பின்னரான சமூகப் பொருளாதார உறவுகளையும், முறைகளையும், செயற்பாடுகளையும் மேற்கின் நலன் சார்ந்ததாக இன்றுவரையில் மேற்கின் சார்பானதாக மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த ஆளும் வர்க்கத்தின் ஆட்சிப் போக்கும் அதன் பொருளாதாரச் செயற்பாடுகளை விட்டு அரசியல் போக்கை கணித்துவிட முடியாது.

மிகையான பண்டத்திற்காய் வரைமுறையற்ற சந்தையை திறந்துவிடக் கோரியது. பின்னர் தனது நிறுவனங்கள் ஊடாக (directive) உத்தரவுகள், நிபந்தனைகள் ஊடாக வழிமுறைப் படுத்தும்படி திணிக்கின்றது. அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களும் உட்பட தனியார் மயமாக்கலை துரிதப்படுத்துவது, மானியங்களை நிறுத்துவது, இலவசம், மானியங்களை தவிர்ப்பது என கட்டளை இடுகின்றது.

அபரிமிதமான பொருள் உற்பத்தி, வளர்ச்சி, தொழில் நுட்பம் என்பதும் அதன் வளர்ச்சிப் போக்கில் அதற்கான சந்தைக்காக நாடுகளை கபளீரம் செய்கின்றது. சந்தைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த பட்ச ஜனநாயகத்தைக் கொண்ட நாடுகளின் அரசு மத்திய கிழக்கில், மத்திய ஆபிரிக்க நாடுகளில் நேரடி, மறைமுக ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தி வருகின்றது. இன்றும் வெனிசுவேலா போன்ற சமூக ஜனநாயகக் ஆட்சிகளையும் அது விடத் தயாராக இல்லை.

மறுகொலனித்துவவாதிக்கத்தில் திட்டங்கள் மெதுவாகவும், தீவிரமாகவும் இருக்கும் இதனை முதலில் தாராளவாதம் என்றார்கள், நவதாராளவாதம் என்றார்கள். இங்கு வரைவிலக் கணங்கள் புதிய சிந்தனை வடிவமாக முன்னிறுத்தப் படலாம். ஆனால் லெனின் வரையறைக்கு அப்பால் புதிதாக எவரும் விளக்கிவிட முடியாது.

அரசியல் நகர்வுகள் கட்டமைப்பில் சீரமைப்புத் திட்ட (structural adjustment programs) நிகழ்ச்சிக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றது. இங்கு கட்டமைப்பில் சீரமைப்புத் திட்ட (structural adjustment programs) நிகழ்ச்சிக்கு ஒப்ப குறைந்த வட்டியின் கடன் கொடுப்பது, வறுமைக்கோட்டைக் குறைப்பது, சந்தைப் பொருளாதாரம், சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வது என்பது மாத்திரம் அல்ல. சிந்தனையை ஓட்டத்தினை அதற்கொப்ப வளர்த்தெடுப்பதும் ஆகும். இவ்வாறான மனிதஉரிமை மீறல் தொடர்பான ஆதாரங்களை வைத்துக் கொண்டு அரசியல் எழுச்சியை தடுத்து நிறுத்தம் வேலைகளையே வல்லரசுகள் செய்கின்றது.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பினை பாதுகாப்பதும் அதன் பொருட்டான கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வது இதன் அடிப்படையாகும். முதலாளித்துவத்தினை பாதுகாக்கும் பொருட்டு உலக வர்த்தக வலையத்தினால் கட்டமைப்பில் சீரமைப்புத் திட்ட (structural adjustment programs) நிகழ்ச்சிக்கு ஒப்ப வேலைப்பிரிவினையில் செயற்படுகின்றது. அதாவது முதலாளித்துவ பொருளாதார அமைப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு பற்பல நிறுவனங்கள் பல்வேறு வகையான வேலைப்பிரிவினையை கொண்டு செயற்படுகின்றார்கள். முள்ளிவாய்க்கால் வீழ்ச்சிக்குப் பின்னர் தான் ஈழத்தினையும் ஏகாதிபத்தியத்தின் கீழான சந்தையாக மாற்றப்பட்டது. எனினும் ஒரு உறுதியான, தனித்துவமான நிறுவனக் கட்டமைப்பை ஈழத்தில் சிங்கள தேசம் ஏற்படுத்தி விடாது.

பொருளாதாரத்தை மாற்றியமைக்கக் கூடிய புரட்சிகள் வெடிப்பதை தவிர்ப்பதும் அதன் நிபந்தனையில் இருந்து பல வழிகளிலும் செயற்பட்டுக் கொண்டுள்ளனர், ஆகவே சமூகமாற்றத்தையும், வர்க்க விடுதலையையும் வேண்டி நிற்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுநிதானமாக கற்பதும் கற்பித்தலிலும் ஈடுபடுதல் அவசியமானதாகும். youngasia தொலைக்காட்சியில் உரிமைகளும் வளங்களும் அனைத்து இனங்களுக்கும் சமமாக கிடைப்பதை உறுதிப்படுத்தப்படுவதே சகவாழ்விற்கு அடித்தளமிடும்.கூஷிகூஷி சமரசம் என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் நடைபெற்றது. இவ்வாறானவை கூட ஒரு பயிற்சிப் பட்டறைதான். இவ்வாறான செயற்பாடுகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், ஊடகங்களும் அதன் பங்கிற்கு செயலாற்றுகின்றன.

அரசியல் நீங்கம் செய்யப்படும் ஒரு வேலைமுறையின் கீழ் நடத்தப்படும் ஒரு சிந்தனை வெளிப்பாடு. இங்குதான் ஏக போக முதலாளித்துவத்தையும், வளங்களையும், சந்தையையும் பாதுகாத்துக் கொள்ள வன்வலு, மென்வலு தன்மை என இரண்டு வழிகளிலும் செயற்படுகின்றது. மென்மைப் போக்கினை தன்னுடைய சர்வதேச நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்துகின்றது.

வரலாற்றில் மதங்கள் கூட பொருளாதார உற்பத்தி முறைக்கு துணைபுரிந்துள்ளதை இங்கு கவனிப்போம். 'ஆனால் ஒப்பந்தங்களைச் செய்து முடிக்க வேண்டும்என்றால் தம்மையும் தமது செய்கைகளையும் உடமைகளையும் சுதந்திரமாகக் கையாளக் கூடிய நபர்கள் ஒருவருக்கு ஒருவர் சமத்துவ நிலையில் உள்ள நபர்கள் முதலில் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட "சுதந்திரமான" 'சமத்துவமான" மனிதர்களைப் படைப்பதே முதலாளித்துவ உற்பத்தியின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். ஆரம்பத்தில் இது அரை உணர்வுள்ள முறையில், மதவேடத்தில் நடைபெற்றாலும் லூதர் மற்றும் கால்வினுடைய மதச் சீர்திருத்த காலத்தில் இருந்து இது கோட்பாடாக உறுதிப்பட்டது." (ஏங்கெல்ஸ்)

அரசியல் நீங்கம் செய்யப்படும் செயற்பாடுகளை முறியடிப்பது இடதுசாரிகளுக்கு உள்ள பெரும் சவாலாகும். சமூக மாற்றம் என்பது பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதை இலக்காகக் கொண்டது. மக்களை அரசியல்மயப்படுத்துவது, புதிய கலாச்சார விழுமியங்களை போதிப்பது என்பது சமூக கட்டமைப்பில் சீரமைப்பு முறைக்கு ஒத்ததாக இல்லாது உற்பத்தி சாதனத்தை கைப்பற்றுவதற்கான போராட்ட இலக்காகும். இதுவே இடதுசாரிகளின் முன்னால் உள்ள பெரும்சவாலாகும்.

புதிய கோட்பாட்டு வடிவத்தின் ஊடாக சமூகப் புரட்சி பற்றிய பாதையை திசை திருப்புவதற்குத் தான் பயன்படுத்தப்படுகின்றது. ஆளும் வர்க்கமும், ஏகாதிபத்தியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்ட வகையில் புதிய கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் ஏற்படுத்துகின்றது.

சுயநிர்ணயத்தை ஏகாதிபத்தியத்தின் கீழ் நிறைவேற்ற முடியாது என்றோ பொய் தோற்றம் என்றோ கூறிக் கொள்வது, நீக்குவது தவறானதாகும். அதேவேளை அரசியல் வர்க்க ஒடுக்குமுறைக்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் உரிய முன்னைவிடச் சுதந்திரமானதும், தெளிவான வடிவமாக இருக்கிறதின் முக்கியத்துவத்தை நிதிமூலதனத்தின் ஆதிக்கம் சிதைப்பதில்லை. எனவே முதலாளித்துவத்தின் கீழ் அரசியல் ஜனநாயகத்துக்கான கோரிக்கைகளில் ஒன்று பொருளாதார வழியில் நிறைவேற்றப்பட முடியாதது என்று கூறும் வாதங்கள் அனைத்தும் முதலாளித்துவம், அரசியல் ஜனநாயகம் ஆகியவற்றின் பொதுவான, அடிப்படை உறவுமுறைகள மொத்தத்தில் தத்துவார்த்த வழியில் தவறான வரையறை செய்வாதாகின்றன. ஏகாதிபத்தியத்தின் கீழ் சமவுரிமையுடைய தேசங்களின் ஐக்கியம் என்பது சாத்தியமில்லை. ஏகாதிபத்தியம் தனது கூட்டை சமமாக இருக்கவிடாதே அவ்வாறே ஒடுக்கும் பெருந்தேசியம் ஈழதேசத்தின் சமவுரிமையை சாத்தியமில்லாதாக்கி அழிக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய - முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டத்தை

யுத்த தந்திரம் - செயற்தந்திரம் என்பதை தீர்மானிப்பது ஒரு மனிதர் கொண்ட உலகப் பார்வை. தலைமைப் பாத்திரம் கொடுக்க வேண்டியவர்கள் மார்க்சிய லெனினியவாதிகளே அன்றி பூர்சுவா வர்க்கத்தை தலைமை தாங்கக் கோருவது அல்ல. உழைப்பவர்களை அரசியல் மயப்படுத்தி அவர்கள் தலைமையில் தான் போராட்டம் நடைபெற வேண்டும்.

புரட்சிகர சக்திகள் தலைமை தாங்காது இருந்துவிட்டு முற்போக்கு தேசியம் தலைமை தாங்கினால் போராடுவது என்று கடமையை செய்யாது விடின். அந்தச் சமூகத்தில் உருவாகும் தலைமை என்பது பூர்சுவா சிந்தனை கொண்டதாக இருப்பதில் ஆச்சரியமில்லை. (சட்டம், அரசியல் என்ற மேற்கட்டமைப்பு எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன.) கொம்யூனிஸ்ட் கட்சி கொள்கையை மறைக்கத் தேவையில்லை. கொள்கை வெளிப்படையாக பிரகடனப்படுத்த வேண்டும்.

உள்நாட்டில் தேசிய - முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டத்தை அடைவதற்கான போராட்டம் என்பது முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த நாட்டில் உள்ள பெருந்தேசிய இனம் தனது சொந்த தேசிய இனத்திடம் ஒடுக்கப்படும் மக்களின் உரிமை பற்றி வெளிப்படுத்த வேண்டும். ஒடுக்கும் தேசத்தின் பொதுவுடமைவாதிகள் ஒடுக்கும் தேசத்தின் சுயநிர்ணய உரிமை ஏற்று போராட அணிதிரட்ட வேண்டும். பெருந்தேசியவாதம் வளரும் என்பதனால் மக்களிடம் வெளியே வைக்க முடியாது என்று காரணம் காட்ட முடியாது. காரணம் கொள்கைகள் வெளிப்படையாக முன்வைக்க வேண்டும்.

தமிழர் தேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் ஒடுக்கப்படும் மலையக, முஸ்லீம் தேசிய இனங்களின் ஐக்கியத்தின் ஊடாக பொது எதிரிக்கு எதிரான போராட்டம் கட்டமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசத்தில் சூழ்ந்திருக்கும் யுத்த மேகத்தையும் சந்தைக்காய் எம்மை மறுகொலனியாதிக்க முற்படும் நிலையில் பிற நாடுகளையும், தேசங்களையும் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிராக உலகில் உள்ள முற்போக்காளர்கள், உழைப்பாளிகள், யுத்த எதிர்ப்பாளர்கள், இவர்களுடன் இணைந்தே ஆக்கிரமிப்பு யுத்தங்களை எதிர்க்க முடியும்.

இன்றைய ஈழ தேசத்தின் இறைமைக்கு பொதுசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு முழு சாத்தியம் உண்டு. இதனை சாத்தியமாக்குவதற்கு புரட்சிகர மார்க்சிய லெனினியவாதிகள் முழு சிரத்துடன் உழைக்க வேண்டிய வரலாற்றுக் கடமை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாக

இலங்கை என்ற நாட்டுக்குள் இருக்கின்ற தேசங்கள், தேசிய இனங்களின் உரிமை பற்றியதும் சமூகப் புரட்சியும் வென்றெடுக்கப்பட வேண்டுமென்றால் அரசியல் ரீதியான மதிப்பீடு அவசியமானதாகும். போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தெளிவான சிந்தனை வடிவம், புரட்சிகர கட்சி, புரட்சிகரச் சிந்தாந்தம் முன்னிபந்தனையாக இருக்கின்றது. முன்னர் இந்தப் பகுதியில் குறிப்பிட்டது போது தேசிய இனப்பிரச்சனை என்பது உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் தான் இடம்பெற வேண்டும். உழைக்கும் மக்களை அரசியல் மயப்படுத்துவது, அமைப்பு வடிவம் கொடுத்தே சுயநிர்ணயப் போராட்டத்தை முன்னெடுக்கப்பட முடியும்.

ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தில் அதன் வளர்ச்சி என்பது ஆக்கிரமிப்பு அரசியல் நிகழ்ச்சிக்கு உள்ளாக இருக்குமேயன்றி அதற்கு அப்பால் இருக்காது. ஆக்கிரமிப்பு அரசியல் என்பது எப்பவும் ஒரு நிறுவனக் கட்டமைப்பு உருவாகுவதை அனுமதிக்காது. இவற்றிற்கு அகத்திலும் புலத்திலும் போராட்டங்கள் கட்டியமைக்கப்பட வேண்டும்.

உற்பத்தி முறையில் ஏற்படுகின்ற மாற்றங்களும், முரண்பாடுகள் தான் தேசிய இனப்பிரச்சனையை உருவாக்கிக் கொள்கின்றன. உற்பத்தி முறையே தீர்மானிப்பது என்பது தேசிய இனப்பிரச்சனையும் வர்க்கப் போராட்டமே. தேசிய இனப்பிரச்சனை அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் இருந்து வெளிவருவது தான் இலங்கை இனப்பிரச்சனைக்கு காரணமாகும். முதலாளித்துவத்திற்கு நுழையும் போது ஏற்படுகின்ற சமூக இயக்கப் போக்கு பொருளாதார வளர்ச்சிப் போக்கை இயங்கியல் ரீதியாக மதிப்பீடு செய்வதும் பின்னர் நமக்கான கோட்பாட்டை உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகரக் கட்சி என்பது சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். சுயநிர்ணயப் போராட்டத்தை ஏகாதிபத்தியம் பயன்படுத்தி விடும் என்பதனாலும் தாய்நாட்டைப் பாதுகாப்போம் என்ற சொல்லாடலில் சுயநிர்ணயத்தை மறுத்துவிட முடியாது. சுயநிர்ணயம் என்பது அரசியல் உரிமை. அதேவேளை பிரிவினைக்குப் பிறகாக சேர்ந்திருக்கவும் இருக்கும் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்த வாக்கெடுப்பை பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்காக போராட வேண்டும். நவதாராளவாதப் பொருளாதாரத்தை எதிர்ப்போம் இனமதகுல பேதமற்று இணைவோம் என்றும், சமுதாயப் புரட்சியின் பெயரால், வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவோம் என்ற ஒடுக்கும் தேசத்தின் பாசாங்கு வாதம் ஏகாதிபத்திய சகாப்பத்தில் சுயநிர்ணயம் சாத்தியமில்லாதது என்ற மந்திரத்திற்கு எதிராகவும் போராட வேண்டியிருக்கின்றது. சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் ஆட்சிமுறையில் ஐக்கியப்பட்ட புரட்சி சாத்திமில்லாதாகும். தமிழ் தேசத்தின் ஆக்கிரமிப்பை எதிர்க்காத அரசியல் போக்கும் எந்த வகையிலும் உழைக்கும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு துணைபுரியாது புரட்சிகரமான போர்த்தந்திரங்களை மூடிமழுப்புகின்றதாகும். ஒடுக்கும் தேசம் தன் சொந்து தேசிய இனத்தையும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் இணைக்கும் கடமை உள்ளது. இதே போல ஒடுக்கும் தேசத்தில் உழைக்கும் வர்க்கம் பெருந் தேசியவாதத்திற்கு எதிராக இடையறாது போராடுவதன் ஊடாக போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டை (solidarity) வழங்க முடியும்.

தேசங்களின் சுயநிர்ணயத்தை (தேசத்திற்கு மட்டும் தான் சுயநிர்ணய உரிமை) மறுத்து பிரசைகளுக்கான சமவுரிமையை வலியுறுத்துவது அகநிலைவாதமாகும். இதனால் கட்சி வேலைத் திட்டத்தில் கட்டாயம் சுயநிர்ணயம் பற்றிய முடிவு இருக்கப்பட வேண்டும். இவைகள் இடதுசாரியம் பேசுபவர்கள், சீர்திருத்தல் வாதிகள், பாராம்பரிய இடதுசாரிகள் கவனத்தில் எடுக்காவிடின் இவர்கள் இன்றும் பல நூற்றாண்டிற்கு புரட்சி பற்றி பேசிக் கொண்டு மட்டும் இருக்கவே முடியும். இடதுசாரியம் மற்றவர்களின் நிழலில் பயணிக்க முடியாது. 1964 களில் பின்னர் மற்றவர்களின் நிழலில் தான் பாராம்பரிய இடதுசாரியம் பயணித்தது. இது குருசேவ்வின் திருத்தல்வாதம், பின்னர் ஒற்றைத் துருவ காலம் பொதுவுடமை இயக்கத்திற்கு எதிரான எதிர்ப்பிரச்சாரம் உச்சத்தில் இருந்த காலமாகும். தேர்தல் பாதையில் சமூகத்தை மாற்றிவிடும் என்று புரட்சிகரப் பாதையை திரித்துக் கொண்டது. இனியும் மற்றவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலில் பயணிப்பது என்பது மீளவும் இன்னும் பல சகாப்பத்திற்கு தொடர அனுமதிக்க முடியாது.

சமூக ஒழுக்கமைவு பற்றிய புரிதல் இல்லாத நிலையில் இடதுசாரியம் மற்றவர்கள் நிழலில் தான் பயனிக்க முடியும். இது மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையில் தோல்வி அல்ல. சீர்திருத்தவாதத்தால் பீடிக்கப்பட்டுள்ள வாய்ப்பாட்டு இடதுசாரி யத்தின் தோல்வி இதுதான்.

சமூக ஒழுங்கமைவு அதன் வளர்ச்சி பற்றி தெரிந்து கொள்ளாதன் விழைவாகும். 1966 நடத்தியது முதலாளித்துவ ஜனநாயகம் சார்ந்த போராட்டம். அடுத்த கட்டவளர்ச்சி தேசங்களின் சுயநிர்ணயத்திற்கான போராட்டம் அதனை தலைமை தாங்கி நடத்தியிருக்க வேண்டும். வரலாறு அவர்களிடம் தலைமைப் பாத்திரம் கொடுத்திருந்தது. அன்றைய சமூக முரண்பாட்டை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தாது. தொழிற்சங்கவாதத்தினுள் வீழ்த்தது தான் பூர்சுவா முதலாளிய தலைமை தாங்க சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. ஆகவே வரலாறு ஓட்டத்தை முறையாக கணிப்பது அவசியம்.

முள்ளிவாய்க்காலில் வீழ்த்தப்பட்டது அமைப்பின் யுத்த, அரசியல் தந்திரோபாயத்தில் தவறேயாகும். ஆனால் அதுவே முடிவல்ல. ஈழ எழுச்சிக்கான போராட்டம் என்பது தொடரப்பட வேண்டும். அது பிரதான முரண்பாட்டை முன்னெடுப்பதன் ஊடாகவும், சமூக மாற்றத்திற்கான வேலை முறைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆக பிரதான முரண்பாட்டைத் தீர்ப்பது என்பது வெறும் எல்லையை மாத்திரம் அல்ல. ஆசிய பாணி கொடுங்கோன்மையான வர்ணாசிரம சிந்தனை, வர்க்க ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதை நோக்கமாக கொண்டது. இன்று முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் எம்முன் இருக்கும் வரலாற்றுக் கடமையாக இருக்கின்றது.

பொருள் விளக்கம்

ஆசிய பாணி கொடுங்கோன்மை-- யாழ்சைவ வேளாளம்-பார்ப்பணியம்

பொருளாதாரவாதம்- தொழிற்சங்க வாதத்தினுள் (சம்பள உயர்வு, தொழிலாளிகள் சலுகை)

உற்பத்தி சாதன உரிமையாளர்- முதலாளி

உற்பத்தி சக்தி- உழைப்புச் சக்தியை விற்கும் தொழிலாளி

பூர்சுவாத - முதலாளியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை


1. தேசிய இனப்பிரச்சனையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் - முன்னேற்றப் பதிப்பகம்இரண்டாம் பதிப்பு 1987 -

2. சாதியப் போராட்டம் சில குறிப்புகள் - சி.கா செந்தில்வேல் உடன்நேர்காணல்- 2008 thesam publication ltd.) லண்டன்

3.https://www.facebook.com/photo.php?fbid=1020681186806432&set=a.1687068867714.2080928.1567465346&type=3

4.ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் - லெனின் தொகுதி 3-

5.கார்ல் மார்க்ஸ் - கூலியுழைப்பும் மூலதனமும். முன்னேற்றப்பதிப்பம் 1974 (NCBH)

6. இமயவரம்பன் -இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும் 1995 புதிய பூமிவெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்)

7. இமயவரம்பன் -சுயநிர்ணயம் பற்றி புதிய பூமி வெளியீட்டகம் மே 2001)

8. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்( விமர்சனக் கண்ணோட்டம்)

9.வெகுஜனன், இமயரம்பன்- புதிய பூமி வெளியீடு 1994 முதல்பதிப்பு

10. வி. ஐ லெனின் அரசும் புரட்சியும் - முன்னேற்றப்பதிப்பகம் மொஸ்கோ

11. <https://www.marxists.org/archive/haywood/1933/09/x01.htm>

12. பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தின் அரசியல் அறிக்கை

13. (<http://padippakam.com/document/ndpt/provo/provo.pdf>))

14. <https://www.wsws.org/tamil/articles/2016/mars/srln-m18.shtml>

15. மாசேதுங் - சீனப்புரட்சியும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமர்ப்பணம்
இந்த நூற்றாண்டின்
மிகக் கொடூரமான
இனவழிப்புக்கு உள்ளான
ஈழ தேசத்தவர்களுக்கு!!

தேசிய
இயக்கங்களின்
காலம்

வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org